Volume : 8 Issue - 6

# வைகறை வெளிச்சம்

ஜுலை: 2014 விலை: ரூ.20

ஆசிரியர் மு.குலாம் முஹம்மது ரமலான் : 1435












# வைகறை வெளிச்சம்

ஜூலை 2014 ரமழான் 1435

ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது M.A.,
(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஸி

தனி இதழ் ரூ. 20
ஆண்டுச் சந்தா
உள்நாடு ரூ. 240/-
வெளிநாடு ரூ. 2500/-

பணவிடை மூலம்
சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே
அனுப்ப வேண்டுகிறோம்.

“இறை நம்பிக்கைக் கொண்டவர்களே உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதிக்கப்பட்டிருந்தது போல் உங்கள் மீதும் (அது) விதிக்கப்பட்டுள்ளது (அதன்மூலம்) நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம்”.

(அல்குர் ஆன் : 2:183)

விளம்பரங்களுக்கு : 81381 29887

VAIGARAI VELICHAM
52/1, Mannadi Street,
4th Floor, Room-7,
Mannadi, Chennai-600 001.
Tel : 044-2522 4887
Mob : 81481 29887
E-mail : darultrust@yahoo.com

## உள்ளே...




ஈராக் ISIL என்ன? 5



இணைந்தது பாலஸ்தீனம் 14



உளவுத்துறை அறிக்கை
உதயகுமார் பேட்டி 23

பாசிசம்/திருப்பூர் 27



நிலையான அறங்களே
ஏற்றமானவை 30



நான் ஏன் முஸ்லிம் ஆனேன்? 32

முஸ்லிம்களின் வீழ்ச்சியால்
உலகம் இழந்ததென்ன? 40

திருக்குர்ஆன் பாடம் 44

கஷ்மீர் அகற்றப்பட வேண்டியது 370ஆ
AFSA:அப்சா-வா? 53

மல்லிப்பட்டிணம்... 57

http://www.facebook.com/vaigaraivelicham

All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.

# இந்துத்துவாவும் நீதியும்

மோடி ஆட்சியில் அமர்ந்ததும் இந்திய குடிமக்களை முற்றுகையிடும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அடுக்கடுக்காய் மேற்கொண்டு வருகின்றார்.

முதலில் அமைச்சரவையில் தனக்குத் தலையாட்டிடும் ஆர்.எஸ்.எஸ்.காரர்களை யும் பா.ஜ.க.வினரையும் மட்டுமே அமர்த்தினார்.

முன்னாள் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங்குக்கு ஒரு அமைச்சர் பதவி தந்தார். அத்தோடு முடங்கிக் கொள். இனி அமித்ஷா என்ற என் அடியாள்தான் அந்தக் கட்சிக்கு அதாவது பாரதீய ஜனதா கட்சிக்கு தலைவர் என்றார்.

இதன்வழி கட்சியும் நானே, ஆட்சியும் நானே என பிரகடனப்படுத்தியுள்ளார்.

அடுத்து நாட்டில் பல கபளீகரங்களை செய்த, குறிப்பாக சிறுபான்மையினரை கொன்று குவித்த அஜித்குமார் டோவல் என்பவரை நாட்டின் பாதுகாப்பு ஆலோசகராக அமர்த்தினார். இவரைப் பற்றிப் (பார்க்க தனி கட்டுரை).

இனி இந்துத்துவாவை ஏற்றுக்கொள் ளாதவர்கள் தாராளமாக அழிக்கப்பட லாம். அதற்கு அந்தச் சிறுபான்மையினரே குற்றம் சாட்டப்படுவார்கள். இப்படிக் குதர்க்கமான ஓர் திறமைசாலி இந்த அஜித்குமார் டோவல்.

அடுத்து நீதித்துறையின் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினார். உச்ச நீதிமன்றத்தில் அதன் வழக்கறிஞராக முகுல் ரோஹட்ஜி (Mukul Rohatgi) என்பவரை அனைத்து எதிர்ப்புகளையும் தூக்கி வீசிவிட்டு நியமித்தார்.

இந்த முகுல் ரோஹட்ஜிதான் குஜராத்தில் 2002இல் நடந்த இனப் படுகொலைக்கு நியாயந்தேடி உச்ச நீதிமன்றம் வந்த வழக்குகளை நிர்மூலமாக்கினார்.

2002 குஜராத்தில் நடந்த வழக்குகளில் முதலில் பிரபல்யமானது பெஸ்ட் பேக்கரி என்ற வழக்கு. இதில் 14 பேர் உயிருடன் எரிக்கப்பட்டனர். குடும்பத்தில் ஒரே பெண்தான் விஞ்சினாள். அவர் பெயர்தான் ஜாகிரா ஷேக்.

பாதிக்கப்பட்ட இந்தப் பெண்ணை மோடி ஆட்களை அனுப்பி மிரட்டினார். வழக்கு தொடக்கத்தில் மும்பை உயர் நீதிமன்றத்தில் நடந்தது. பின்னர் உச்ச நீதிமன்றம் சென்றது. உச்ச நீதிமன்றத்தில் இந்த முகுல் ரோஹட்ஜி எந்த அளவுக்கு வழக்கை திரிந்தார் என்றால் இறுதியில் நமது உச்ச நீதிமன்றம் ஜாகிரா ஷேக்கை ஒரு வருடம் சிறையில் தள்ளியது.

மோடிக்கு எதிராக வாலை நீட்டினால் ஒட்ட நறுக்குவோம்; உள்ளே போடுவோம் என்பதைப் பிரதானப்படுத்தினார். இதற்கு உச்ச நீதிமன்றமும் துணை.

இவரை அதாவது இந்த முகுல் ரோஹட்ஜியைக் கொண்டுதான் அமித்ஷா என்ற இவரது கைத்தடியை அவர் செய்த எட்டுக் கொலைகளிலிருந்து காப்பாற்றத் திட்டம்.

இந்த எட்டு கொலைகளிலும் மோடிக்கும் தொடர்புண்டு. ஏதேனும் காரணங்களுக்காக அமித்ஷா உண்மையை வெளிப்படுத்துவாரே யானால் மோடி இருப்பது பிரதமர் மாளிகை யாக இருக்காது. அது திகார் சிறையின் சிறப்புப் பாதுகாப்புப் பகுதியாக இருக்கும்.

ஆனால், அதற்கான எல்லா வழிகளையும் முற்றாக அடைத்து வருகின்றார். உச்ச நீதிமன்றத்தில் தன்னைத் தொழுபவர்களையே நீதிபதியாக நியமிக்க தலைப்பட்டு விட்டார் மோடி.

பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல் அமைந்ததுதான் நேர்மையான வழக்கறிஞர் கோபால் சுப்ரமணியம் விவகாரம்.

இவரை ஒரு காலகட்டத்தில் நமது தலைமை நீதிபதி லோடியா, தயவுசெய்து உங்கள் ஒப்புதலைத் தாருங்கள்; உச்ச நீதிமன்றத்தில் ஓர் நீதிபதியாக அமர்ந்து இந்த நீதிமன்றத்தை அலங்கரியுங்கள் என்று வாழ்த்துப்பாடி நீதிபதியாக அமர்ந்திட சொன்னார்.

அவரும் நீதிபதியாக ஆகிட சம்மதம் தெரிவித்தார். உடனேயே மோடியின் வகையறாக்கள் தலையிட்டு அவர் நீதிபதியாக ஆகாமல் தடுத்து விட்டனர்.

நெஞ்சம் உடைந்து போன அவர் தான் நீதிபதியாக அமர்ந்திடத் தந்த ஒப்புதலை திரும்பப் பெற்றுக் கொண்டார்.

இதில்நாட்டின் நிர்வாகத்தின் நீதித்துறை யின் நிர்வாகம் உட்பட அனைத்திலும் தலையிடும் 'ஐ.பி.' என்ற மத்திய உணவுத் துறை ஆடிய ஆட்டத்திற்கு அளவே இல்லை.

கோபால் சுப்பிரமணியம் அவர்கள் ஏன் நீதிபதியாக நியமிக்கவில்லை என்பதை 'தி ஹிந்து' இதழ் தான் எழுதிய தலையங்கத்தில் இப்படிக் குறிப்பிடுகின்றது. He is too independent to toe government's line : The Hindu 27.6.2014.

அவர் தன் தனித்துவத்தை இழக்காத ஒரு நீதிபதி. அவர் அரசுக்கு வாலாட்ட மாட்டார்.

இப்படி அவர் நேர்மையான நீதிபதியாக இருப்பது ஒரு தகுதியின்மை.

அடுத்து மோடியின் கைத்தடி அமித்ஷா கொலை செய்த ஷோராப்தீன், பிரஜாபதி இவர்கள் வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. இதில் அமித்ஷா ஏற்கெனவே கைது செய்யப்பட்டு சிறை சென்று பிணையில் வந்தவர்.

இந்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் வேண்டுதலுக்கு இணங்கி ஷோராப்தீனுக்காக வும் பிரஜாபதிக்காகவும் வாதாடியவர் கோபால் சுப்ரமணியம். இவர் நீதிபதியாக அமர்ந்தால், அமித்ஷாவுக்கு தூக்கும் மோடிக் கும் ஆயுள் தண்டனையும் கிடைக்கலாம். இந்தப் பீதி வேறு, மோடியையும் அமித்ஷா வையும் ஆட்டிப் படைத்தது. இதனால் இவரை நீதிமன்றத்தில் அண்டவிடாமல் செய்து விட்டார்கள்.

மொத்தத்தில் உச்ச நீதிமன்றத்தை மோடி பேரவையாக மாற்றி வருகின்றார்.

இனி அஜித்டோவல், அமித்ஷா இவர்கள் நாட்டை கபளீகரப்படுத்துவார்கள். எங்கேயும் நீதி கிடைக்காது.

இதில் மோடிக்கு கிடைத்த இன்னொரு வாய்ப்பு என்னவெனில் நாடாளுமன்றத்தை குஜராத் சட்டசபை போல் நடத்தலாம். ஏனெனில் எதிர்க்கட்சி என்றொன்று இல்லை.

சுருங்கச் சொன்னால் பாசிசம் பாரதத்தை பறித்துக் கொண்டது.

இதில் நீதித்துறை பறிபோனதுதான் மிகப்பெரிய ஆபத்து.

இந்த பாசிசத்தின் பிடியிலிருந்து பாரதத்தை பாதுகாக்க இஸ்லாத்தால் மட்டுமே முடியும்.

*ஏனெனில், இஸ்லாத்தின் பென்னம்பெரிய ஆட்சியில்தான் அனைத்துத்தரப்பு மக்களும் நிம்மதியாக வாழ்ந்தனர்.*

*முஸ்லிம்களுக்கு இன்று எல்லா வகையான துன்பங்களையும் துயரங்களையும் தந்துவரும் யூதர்களை நிம்மதியாகவும் நிலையாகவும் வாழ வைத்தது இஸ்லாம்தான்.*

*உலகின் இருபெரும் வரலாற்றாசிரியர் களான லாரி காலிங்க்ஸ் மற்றும் டேமனிக் லெப்பரி என்ற ஆசிரியர்கள் தாங்கள் எழுதிய* 'O! Jerusalem' *என்ற நூலில் இதனை மிகவும் விளக்கமாகக் கூறியுள்ளார்கள்.*

*கிருத்தவர்களால் மிகவும் கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட கிருத்தவர்கள் மிகவும் நிம்மதியாக வாழ்ந்தது இஸ்லாத்தின் ஆட்சியின்கீழ்தான்.* (Saladien/History of Arabs - Philip K.Kihitty).

*ஏன் 800 ஆண்டு காலம் சாதி சண்டை களும், தீண்டாமைக் கொடுமைகளும் அற்ற இந்தியாவைத் தந்தவர்கள் முஸ்லிம்கள்தான்.*

*காரணம் நீதி செலுத்துவது இஸ்லாத்தின் அடிப்படை.*

*இறைவன் முஸ்லிம்களிடம் நீங்கள் நீதியுடன் நடந்து கொள்வது முழுக்க முழுக்க அல்லாஹ்வுக்காகத்தான் இருக்க வேண்டும்.*

*உங்களுடைய விருப்பு வெறுப்புகள் நீங்கள் சிலர் மீது ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கொண்ட காட்பும் கசப்பும் நீதி செலுத்து வதில் உங்களை தடம் பிறழ்ந்திட செய்திட வேண்டாம்.*

*அங்கு நீங்கள் அல்லாஹ்வை நினைவில் கொள்ளுங்கள் என வலியுறுத்துகின்றது. அவனை அஞ்சியே நீதியின் பக்கம் நிலைத்திருங்கள் என எச்சரிக்கின்றது. அல்குர்ஆன் அதனை இப்படிக் கூறுகின்றது:*

***முஃமின்களே! நீதியை நிலைநாட்டு வதில் அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதியை நிலைநாட்டாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே பயபக்திக்கு மிகவும் நெருக்கமானதாகும். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.***

*(அல்குர்ஆன் 5 : 8)*

*இன்னும் இறைவன் கூறுகின்றான்.*

***முஸ்லிம்களே! நீங்கள் நீதியின் மீது நிலைத்திருப்பவர்களாகவும், உங்களுக்கோ அல்லது உங்கள் பெற்றோருக்கோ அல்லது நெருங்கிய உறவினருக்கோ விரோதமாக இருப்பினும் அல்லாஹ்வுக் காகவே சாட்சி கூறுபவர்களாக இருங்கள். நீங்கள் யாருக்காக சாட்சியம் கூறுகிறீர் களோ, அவர்கள் செல்வந்தர்களாக இருந்தாலும் ஏழைகளாக இருந்தாலும் உண்மையான சாட்சியம் கூறுங்கள். அல்லாஹ் அவ்விருவரையும் காப்பதற்கு அருகதை உடையவன். எனவே நியாயம் வழங்குவதில் மனஇச்சையைப் பின்பற்றி விடாதீர்கள். நீங்கள் மாற்றிக் கூறினாலும் அல்லது சாட்சி கூறுவதை புறக்கணித் தாலும், நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்வதையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.***

*(அல்குர்ஆன் - 4 : 135)*

*இதையெல்லாம் பாசிசத்தை வழிமுறை யாகக் கொண்ட இன்றைய ஆட்சியாளர் களிடம் எதிர்பார்ப்பதற்கில்லை.*

*இஸ்லாம் இந்தியாவை ஆட்சி செய்திடும் வாய்ப்பைப் பெற்றாலொழிய*

*அதற்கா, ஓய்வுக்கு ஓய்வு தந்து உழைப்போம்.*

*பாசிசத்தின் பிடியிலிருந்து பாரதத்தைக் காப்போம்.*

*இன்ஷா அல்லாஹ்...*

# ஈராக் :
# ஷியா-அஹ்லுஸ் சுன்னா மோதல்
# திட்டமிட்ட சதி

**மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி** M.A.,

*சிரியாவில் பஷார் அசத் இன் ஆட்சிக் கெதிராக ஆயுதமேந்திப் போராடும் தீவிர ஸலஃபி அமைப்புகளில் ஒன்று 'தவ்லதுல் இஸ்லாமிய்யா ஃபில் இராக்கி வஷ்ஷாம்' (ஆங்கிலத்தில் சுருக்கமாக ஐ.எஸ்.ஐ.எஸ்) எனும் அமைப்பாகும்.*

*இவ்வியக்கம் கடந்த (ஜுன்) மாதம் 10 ஆம் தேதி ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மூஸல் நகரை கைப்பற்றியது. தொடர்ந்து நடந்த போரில் திக்ரித், கிர்குக் நகரங்களும் கைப்பற்றப்பட்டன.*

*மூஸல் நகரில் உள்ள துருக்கி தூதரகத்தை கைப்பற்றிய அவ்வியக்கத்தினர் தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பத் தினர் உட்பட 49 துருக்கி மக்களை கடத்திச் சென்றார்கள்.*

*அவ்வாறே நமது இந்தியத் தொழிலாளர் களில் 40 பேரும் கடத்திச் செல்லப்பட்டனர்.*

### ஜாஹிலிய்யா கால இனவெறி

*இன, மொழி, நிற, நில அடிப்படையிலான இனவெறி ஜாஹிலிய்யா என்ற அறியாமை கால பழக்கங்களில் ஒன்றாகும். ஒரு மனிதனின் இனம், அவன் பேசும் மொழி, அவன் வாழும் நாடு ஆகியன அவனின் தனிப்பட்ட அடையாளங்களாக இருக்க முடியுமே தவிர அவற்றினால் அவன் பிறரை விட உயர்ந்த வனாக ஆகிட முடியாது என்பதே இஸ்லாத்தின் கொள்கையாகும்.*

*வெவ்வேறு இயக்கங்களில் இருந்தாலும், வெவ்வேறு சித்தாந்தங்களில் நம்பிக்கை வைத்திருந்தாலும் முஸ்லிம் என்ற அடிப் படையில் ஒருவர் மற்றொருவரை நேசிக்க வேண்டும். ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்ய வேண்டும். இதுவே அல்லாஹ்வின் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை வைத்திருப்பவரின் பண்பாகும்.*

*இயக்கப் பற்று இயக்க வெறியாக மாறினாலோ, சித்தாந்த நம்பிக்கை சித்தாந்த வெறியாக மாறினாலோ நிச்சயமாக அது ஜாஹிலிய்யா கால இனவெறி என்பதில் அணுவளவும் சந்தேகமில்லை.*

***சுமார் பத்து இலட்சம் இஸ்லாமியர்கள் அகதிகள் ஆன பின்பும், உணவின்றி பட்டினியால் இறப்போர் நித்தம் நித்தம் அதிகரித்தும் சிரியா போர் தொடர்கிறது எனில், இனவெறி என்பதைத் தவிர அதற்கு வேறு காரணம் இல்லை.***

### அஹ்லுஸ் சுன்னா – ஷியா

*சர்வதேச அளவில் இஸ்லாமியர்கள் அஹ்லுஸ் சுன்னா, ஷியா என இரண்டு பிரிவினராக கணக்கிடப்படுகின்றனர். இதில் அஹ்லுஸ் சுன்னாவே பெரும்பான்மையினர் ஆவர்.*



எர்துகானுடன் கர்ளாவீ

அஹ்லுஸ் சுன்னாவில் எவ்வாறு நடுநிலை வாதிகள், ஸலஃபிகள், (கடந்த நூற்றாண்டில் இவர்கள் வஹ்ஹாபிகள் என்று அழைக்கப் பட்டனர்) தீவிர ஸலஃபிகள் என பல்வேறு சித்தாந்தப் பிரிவுகள் உள்ளதோ அவ்வாறே ஷியா பிரிவிலும் பல பிரிவுகள் இருக்கவே செய்கின்றன.

நடுநிலையான அஹ்லுஸ் சுன்னத் ஜமாஅத்தார்களின் கருத்து ஷியாக்கள் முஸ்லிம்களே என்பதாகும். இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் ஷியா அறிவிப்பாளர்களின் நபிமொழிகளை தமது நூலில் பதிவு செய் துள்ளார்கள். அவர்களை காஃபிர்களாகவோ, வழிகேடர்களாகவோ, பாவிகளாகவோ கருதி இருந்தால் அவர்களின் நபிமொழிகளை இமாம் புகாரி (ரஹ்) பதிவு செய்திருக்க மாட்டார்கள்.

நடுநிலையான இவ்வணுகுமுறையின் அடிப்படையில் சுமார் ஆறு நூற்றாண்டுகள் ஆட்சி செய்தார்கள் துருக்கி உதுமானிய கலீஃபாக்கள். உதுமானிய கிலாஃபத்தில் உள்துறை, பாதுகாப்புத் துறை, வெளியுறவுத் துறை என பல்வேறு முக்கியப் பொறுப்புகள் ஷியாக்களுக்கு தரப்பட்டிருந்தன.

### அடக்கஸ்தல இடிப்பு இஸ்லாமிய அரசின் இலட்சியமா?

எகிப்தையும், சிரியாவையும் நபித் தோழர்கள் கைப்பற்றிய சமயத்தில் அங்கே இருந்த அடக்கஸ்தலங்களை உடைக்கும் வேலையில் ஈடுபடவில்லை. அங்கே இருந்த மற்ற மதத்தினரின் ஆலயங்களை இடிக்கும் பணிகளிலும் ஈடுபடவில்லை.

எகிப்து பிரமிடுகள் என்பது சுமேரிய மன்னர்களின் அடக்கஸ்தலங்களே. அவை இன்று உலக அதிசயங்களாக திகழ்கின்றன என்றால் நபித்தோழர்கள் அவற்றை சேதப்படுத்தவில்லை என்பதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க இயலும்.?

ஏனெனில், அடக்கஸ்தலங்களை இடிப்ப தும், மதப் புனிதங்களை இழிவுபடுத்துவதும் இஸ்லாமிய அரசின் நோக்கமல்ல...

### இஸ்லாமிய நாடுகளில் குண்டுவெடிப்புகள்

இஸ்லாமிய நாடுகளில் இப்போது நாம் கேள்விப்படும் குண்டுவெடிப்புகள்

அனைத்தையும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ. வும், அதன் கூலிப்படையினரும் தான் நடத்தி வருகின்றனர்.

ஷியா பள்ளிவாசலோ, அஹ்லுஸ் சுன்னா பள்ளிவாசலோ முஸ்லிம்கள் தொழும் இறையில்லத்தில் குண்டு வெடிக்கின்றது என்றால் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் அஞ்சும் ஒரு முஸ்லிம் அதனை செய்ய மாட்டான்.

### அடக்கஸ்தலங்களில் குண்டு வெடிப்புகளும் சூழ்ச்சிகளும்

நமது இந்தியாவில் அஜ்மீர் தர்காவில் ரமலான் மாதத்தில் குண்டு வெடிப்புகள் நடத்தப்பட்டன. முஸ்லிம்களில் அடக்கஸ்தல எதிர்ப்பாளர்கள் இதனை செய்ததாக பத்திரிக்கைகளில் செய்திகள் வெளியிடப் பட்டன. நாம் அதனை உடனேயே மறுத்தோம்.

தொடர்ந்து முஸ்லிம்கள் கைது செய்யப் பட்டனர். குண்டு வெடிப்புகளில் இறந்த வர்களும் முஸ்லிம்கள். கைது செய்யப் பட்டவர்களும் முஸ்லிம்கள் என்றொரு நிலைமையை அரசு இயந்திரம் ஏற்படுத்தியது.

ஆனால், உண்மையில் இந்துத்துவ அமைப்புகள் தான் அதனை நடத்தியிருந்தன. சாமியார் அசிமானாந்தா வாக்குமூலத்தில் பின்னர் அது தெரிய வந்தது.

***முஸ்லிம்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாட்டினை மோதலாக மாற்றி இரத்தங்களை ஓட்ட வேண்டும் என்பது இஸ்லாமிய எதிரிகளின் விருப்பம். இதற்காக அவர்கள் அன்றுதொட்டே பயன்படுத்தி வரும் உத்திகளுள் ஒன்று தான் ஷியா - அஹ்லுஸ் சுன்னா மோத லாகும்.***

அஹ்லுஸ் சுன்னா புனிதத்தலங்களில் குண்டு வைத்து விட்டு ஷியா முஸ்லிம்கள் மீது பழி போடுவதும், ஷியாக்களின் புனித்தலங்களில் குண்டு வைத்து விட்டு அஹ்லுஸ் சுன்னா வின் மீது பழி போடுவதும் நடக்கின்றன எனில், அதன் பின்னணியில் குண்டு வைத்தவர்கள் சி.ஐ.ஏ வினராக இருப்பார்கள். அல்லது அவர்களின் கூலிப் படையினர் ஆகத் தான் இருப்பார்கள். இவர்களைத் தவிர உண்மையான முஸ்லிம்கள் நிச்சயமாக அதனை செய்ய மாட்டார்கள்.

### தரனி குண்டு வெடிப்பு

நபித்தோழர் சுஹைர் இப்னு கைஸ் (ரழி) அவர்கள் லிபியாவைக் கைப்பற்றிய வீரத் தளபதி ஆவார். அவரின் அடக்கஸ்தலம் லிபியாவில் உள்ள தரனி நகரில் உள்ளது. கடந்த 2012 ஆம் ஆண்டு ஜுலை ஏழாம் தேதி அவரின் அடக்கஸ்தலத்தில் குண்டு வெடித்தது. (Source: <http://www. tripolipost.com> 09.07.12)

நபித்தோழரின் அடக்கஸ்தலம் இருந்ததால் அங்கிருந்த பள்ளிவாசலில் தொழுவது ஷிர்க் என்று பிரச்சாரம் செய்து வந்த சில ஸலஃபி குழுவினர் இச்செயலை செய்ததாக திரிப்போலி போஸ்ட் பத்திரிக்கை தெரிவித்தது. (இது நிச்சயமாக முஸ்லிம்களின் செயலாக இருக்காது)

நபித்தோழர்களின் மீது பற்றும் - மரியாதையும் வைத்திருக்கக்கூடிய முஸ்லிம் களை இச்சம்பவம் சோகப்படுத்தியது. ஏற்கனவே அதற்கு சில மாதங்களுக்கு முன்பு 15ஆம் நூற்றாண்டில் லிபியாவில் 'இஸ்லாத்தை புதுப்பித்தவர்' என்று அறியப்படும் சூபி அறிஞர் அப்துஸ் ஸலாம் அஸ்மர் அவர்களின் அடக்கஸ்தலம் உட்பட சில அறிஞர்களின் அடக்கஸ்தலங்கள் தாக்குலுக்கு உள்ளாகி இருந்தன. (இதுவும் முஸ்லிம்களின் செயலாக இருக்கிறது)

ஜிகாத் என்ற பெயரில் ஆயுமேந்திப் போராடும் சில குழுக்கள் சி.ஏ.ஐ. வால் உருவாக்கப்பட்டவை என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

உண்மையில் ஸலஃபிகள் தான் அதனை செய்தார்களா? அல்லது அவர்களின் பெயரில்

அமெரிக்க கூலிப் படையினர் அதனை செய்தார்களா? அல்லது அவர்களே இந்தப் பெரும் சதியில் சிக்கிக் கொண்டார்களா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான்.

எனினும் அச்சம்பவம், ஸலஃபிகளின் கையில் ஆட்சி - அதிகாரம் கிடைத்தால் நபித்தோழர்களையும் விட்டு வைக்க மாட்டார்கள் என்றொரு அச்சத்தை ஏற்படுத்தவே செய்தது.

### அம்மார் இப்னு யாசிர் (ரழி) இன் மீதான தாக்குதல்

'தவ்லதுல் இஸ்லாமிய்யா ஃபில் இராக்கி வஷ் ஷாம்' (ஐ.எஸ்.ஐ.எஸ்) அமைப்பு வட மத்திய சிரியாவின் ரக்கா நகரை கைப்பற்றியது. ரக்கா நகரில் தான் நபித்தோழர் அம்மார் இப்னு யாசிர் (ரழி) அவர்களின் அடக்கஸ்தலமும், மூத்த தாபியீன்களில் ஒருவரான உவைஸ் அல்கர்னி (ரழி) அவர்களின் அடக்கஸ்தலமும் உள்ளது.

அம்மார் (ரழி) ஏழாவது நபராக இஸ்லாத்தை ஏற்றவர். உவைசுல் கர்னி (ரழி) தமது தாயாரின் பணிவிடைக்காக நபி (ஸல்) அவர்களின் சந்திப்பை இழந்தவர்.

இவ்விருவரும் அஹ்லுஸ் சுன்னா மற்றும் ஷியாக்களிடம் மதிப்பு மிக்க தலைவர்கள் ஆவர். ஸிஃப்பீன் போர்க்களத்தில் அலீ (ரழி) அவர்களுக்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர்கள். இவர்கள் இருவரும் அப்போரில் ஷஹீதானார்கள். இவ்விருவரையும் சுவர்க்கவாதிகள் என்று அடையாளப் படுத்தியுள்ளார்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்.

"ரக்கா" நகரம் போராளிகளின் கட்டுப் பாட்டில் வந்த பின்பு கடந்த மார்ச் 11 ஆம் தேதி அடையாளம் தெரியாத சில குழுக்களால் இவ்விருவரின் அடக்கஸ்தலங் களும் சேதப்படுத்தப்பட்டன.

இது ஷியாக்களுக்கு மத்தியிலும், நடுநிலையான அஹ்லுஸ் சுன்னாவுக்கு மத்தியிலும் கடும் கொந்தளிப்பை ஏற்படுத் தியது. (இந்த அடையாளம் தெரியாதவர்கள், அமெரிக்க யூதகையாட்கள் என்பதை நம்மால் அடையாளம் காணமுடியும்)

### ஷியாக்களின் புனிதப் போர் அறிவிப்பு

கடந்த (ஜுன்) மாதம் 'தவ்லதுல் இஸ்லாமிய்யா ஃபில் இராக்கி வஷ் ஷாம்' (ஐ.எஸ்.ஐ.எஸ்) போராளிகள் அமைப்பு ஈராக்கின் மீது போர் தொடுத்து, அதன் இரண்டாவது பெரிய நகரமான மூஸல் நகரத்தை கைப்பற்றியது.

தொடர்ந்து திக்ரித், கிர்குக் நகரங்களை கைப்பற்றிய அவர்கள், பாக்தாதை நோக்கி முன்னேறினார்கள். அமீருல் முஃமினீன் அலீ (ரழி) அவர்களின் அடக்கஸ்தலம் ஈராக்கில் நஜஃப் நகரிலும், இமாம் ஹுசைன் (ரழி) அவர்களின் அடக்கஸ்தலம் கர்பலா நகரிலும் உள்ளன.

இவ்விரு அடக்கஸ்தலங்களும் ஷியாக்கள் புனிதமாக கருதுபவை. இந்நகரங்கள் கைப்பற்றப்பட்டால், இவ்விருவரின் அடக்கஸ்தலங்களும் சேதப்படுத்தப்படலாம் என்ற பீதி ஷியாக்களுக்கு மத்தியில் ஏற்பட்டது.

கடும் அச்சத்தில் ஆழ்ந்த ஷியா மதத் தலைமை ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினருடன் யுத்தம் செய்வதைப் புனிதப் போராக அறிவித்தது. கடந்த 13.07.14 அன்று ஜும்ஆ உரையில், ஈரான் ஷியா அறிஞர் அலீ சீஸ்தானி இவ்வாறு குறிப்பிட்டார்.

"நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்தினை எதிர்த்து போரிட வேண்டும். அது புனிதப் போராகும். இதில் கொல்லப்படுபவர் ஷஹீத் ஆவார்."

சீஸ்தானியின் அறிவிப்பை தொடர்ந்து ஈராக் ராணுவம் ஷியா பொதுமக்களுக்கு ராணுவப் பயிற்சி அளிக்கத் தொடங்கியது. இதனால், அஹ்லுஸ் சுன்னா - ஷியா இடையில் மிகப் பெரும் இனவெறிப் போர்

வெடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது.

**இனவெறி மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்த எர்துகானும் கர்ளாவியும்**

ஷியா அறிஞர் அலீ சீஸ்தானியின் ஜும்ஆ உரைக்கு பின்பு ஈராக்கிலும், ஈரானிலும் ஷியாக்களுக்கு மத்தியில் பெரும் எழுச்சி ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான ஈரானியர்கள் ஈராக்கில் நுழைய தயாரானார்கள்.

இந்நிலையில், கடந்த 17 ஆம் தேதி துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான், குழு மோதலையும், சித்தாந்த மோதலையும் தடுத்து நிறுத்தும் பொருட்டு துருக்கியின் நிலைப்பாட்டினை அறிவித்தார். தமது கட்சிக் கூட்டத்தில் அவர் பேசியதாவது,

***"மூஸல் நகரத்தை தங்களின் கட்டுப் பாட்டில் கொண்டு வந்த பிறகு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினர் அந்நகரில் இருந்த எங்களின் தூதரக அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தூதரகத்தை திறக்கு மாறு கோரினார்கள். பின்பு தூதரக அதிகாரிகள் பிடித்துச் செல்லப்பட் டுள்ளனர்".***

***"அச்சமயத்தில் தூதரகப் பாதுகாப்பு பணியில் ஈராக் அரசின் சார்பில் யாரும் இல்லை. ஈராக் அரசின் இச்செயலை ஏற்றுக் கொள்ள இயலாது".***

***அரசியலில் சித்தாந்த கண்கொண்டு நாங்கள் செயல்பட்டதில்லை. அண்டை நாடு என்ற அடிப்படையில் ஈராக்குடன் நாங்கள் சுமூக உறவே வைத்திருந்தோம். ஈராக்கின் விஷயத்தில் நாங்கள் சத்தியத்தின் அணியில் நிற்கிறோம்.***

***அலீ (ரழி) அவர்களையும், உமர் (ரழி) அவர்களையும் நாங்கள் பாகுபடுத்திப் பார்ப்பதில்லை. இவ்வாறே பல நூற்றாண்டுகளாக வாழ்ந்து வருகிறோம். ஆறு நூற்றாண்டு கால எங்களின் ஆட்சியில் ஒவ்வொருவரையும் அவரது சித்தாந்தப்படியே வாழச் செய்தோம்.***

அலீ என்ற பெயரில் இருப்பவருக்கு ஆயிஷா என்ற பெயரில் இருப்பவர் மனைவியாக இருப்பதை எங்களின் நாட்டில் அதிகம் காண இயலும். மேன்மை மிக்க அந்நபித்தோழர்கள் இருவரையும் நாங்கள் உயர்வாக மதிப்பதே அதற்கு காரணம்.

கர்பலா துயரச் சம்பவத்தின் மூலம் நாங்கள் அதிகம் படிப்பினை பெற்றிருக்கவே செய்கிறோம். அதனை நாங்கள் துயரச் சம்பவமாக கருதுகிறோம்.

இவ்வும்மத்தின் அருட்கொடையான அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பேரனார் இமாம் ஹுஸைன் (ரழி) அவர்களின் ஷஹாதத்தைப் பயன்படுத்தி பிரிவினை உண்டாக்குவதை ஒருபோதும் நாங்கள் செய்ததில்லை.

வேதனை மிக்க கர்பலா நிகழ்வை திரும்பத் திரும்பக் கூறி, அதன் மூலம் புதிய புதிய உயிர்களை வெளியேற்றுவதை நாங்கள் செய்ததில்லை.

சித்தாந்தப் பார்வையை ஒதுக்கி விட்டு 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று சொன்ன அனைவரையும் முஸ்லிம்கள், முஃமின்கள் என்றே நாங்கள் கருதி வந்துள்ளோம்.

இப்பிராந்தியத்தில் பல நூற்றாண்டுகளாக அறிவு மற்றும் ஹிக்மத்தின் குரலாக நாங்கள் ஒலித்துள்ளோம். உண்மை மற்றும் பொறுமையை அழைப்பு விடுத்திடும் சமுதாயமாகவே இனி எக்காலமும் இருக்கவும் செய்வோம் இன்ஷா அல்லாஹ்." (அல்குத்ஸ் யு.கே. 17.06.14)

**பதட்டத்தை தணித்தார் கர்ளாவி**

சர்வதேச இஸ்லாமிய அறிஞர் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவியை தலைவராக கொண்டு இயங்கிடும் அமைப்பு "சர்வதேச இஸ்லாமியர்கள் அறிஞர்கள்" அமைப்பு.

எல்லை மீறியோரின் செயல்களை நிராகரித்த இவ்வமைப்பு, ஈராக்கில் இப்போது ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சி

அநியாயக்கார அரசுக்கு எதிராக ஏற்பட்டுள்ள எழுச்சி என்று குறிப்பிட்டுள்ளது.

அவ்வமைப்பின் சார்பில் கடந்த ஜுன் 19 ஆம் தேதி அறிக்கை வெளியிடப்பட்டது. அது பின்வருமாறு,

“ஈராக்கில் அஹ்லுஸ் சுன்னாவுக்கு எதிராக ஏற்பட்டுள்ள பகைமையை தடுக்கவும், அஹ்லுஸ் சுன்னாவையும் பயங்கரவாதத்தை யும் இரண்டாக இணைப்பதை தடுத்திடவும் இஸ்லாமிய நாடுகளும், அரபு நாடுகளும் முன்வர வேண்டும்”.


“ஈராக்கில் அஹ்லுஸ் சுன்னா மக்களுக்கு எதிரான அநியாயங்களும், ஆக்கிரமிப்புகளும் அதிகளவில் நடந்துள்ளன. அநியாயம் அரங்கேறினால் அதனை எதிர்த்து மக்களின் போராட்டங்களும் வெடிக்கவே செய்யும். இது யதார்த்தம். இதுவே ஈராக்கில் இப்போது நடக்கின்றது”.

“ஆதலால், இஸ்லாமிய நாடுகளும், அரபு நாடுகளும் அஹ்லுஸ் சுன்னாவுக்கு எதிராக கிளப்பி விடப்பட்டுள்ள பகைமைத் தீயை அணைத்து, அந்நாட்டின் எல்லா மக்களுக்கும் எல்லா உரிமைகளையும் பெற்றுத் தர முன்வர வேண்டும்”.

அடக்குமுறைக்கும் ஒதுக்கி வைத்தலுக்கும் எதிரான மக்கள் எழுச்சியை பயங்கரவாதத் துடன் இணைத்து களங்கப்படுத்துவதை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

மக்களின் உரிமைப் போராட்டத்தையும், தமது செயல்கள் எல்லாவற்றிலும் எல்லை மீறி நடக்கும் (ஐ.எஸ்.ஐ.எஸ்) அமைப்பையும் இரண்டையும் சமப்படுத்திப் பார்ப்பது சரியல்ல..

ஈராக் அரசின் அநியாயத்தையும், அடக்கு முறைகளையும் ஏற்காத ஈராக் மக்கள் ஈராக்கிய நடைமுறைக்கு தீங்கிழைக்கும் பிரிவினரின் எல்லை மீறிய செயல்களையும் நிச்சயம் ஏற்கமாட்டார்கள்.



சிஸ்தானி

சமாதானக் காலத்திலும், போர்க் காலத் திலும் இஸ்லாம் வகுத்துத் தந்தள்ள ஒழுக்க நெறிகளையும், கொள்கைகளையும் கவனத் தில் கொள்ளாத அமைப்புகள் கண்டனத்துக் குரியவை.

இப்போது தூண்டி விடப்பட்டுள்ள இனவெறியை அனைத்து ஈராக்கிய மக்களும் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும். எல்லோரின் இரத்தங்களுக்கும், உடமை களுக்கும், மானத்திற்கும் மதிப்பளித்து பாதுகாக்க வேண்டும். அதில் பிரிவினை காட்டக்கூடாது.

உடனே போர் நிறுத்தத்தை அமல்படுத்தி, சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடங்க வேண்டும். அதில், எல்லா தரப்பு மக்களுக்கும் உரிமைகள் கிடைத்திட வழிவகை செய்யப் பட வேண்டும்.

மோசமான இந்த ஆபத்துக்கு எதிராக ஷியாக்களும் - அஹ்லுஸ் சுன்னாவும்

ஒன்றிணைந்து நிற்பது ஷரிஅத் அடிப்படையிலான கடமை மட்டுமல்ல... நாட்டிற்கு இப்போது அவசியமானதும் கூட.

(அலீ சீஸ்தானியின் ஃபத்வாவை குறிப்பிட்டு) இனவெறியை தூண்டும் பேச்சுக்களையும், ஃபத்வாக்களையும் தயவு செய்து ஈராக் மக்கள் புறக்கணிக்க வேண்டும். அதனால் பெரும் தீங்கும், சமுதாயத்தின் சாபமும் தான் ஏற்படும்." (ரஃயுல் யவ்ம் 19.06.14)

சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் அமைப்பின் தலைவர் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி, பொதுப்செயலாளர் டாக்டர் அல்குர்ரத் தாகீ இணைந்து வெளியிட்ட இவ்வறிக்கை ஷியாக்களின் கோபத்தையும், ஆத்திரத்தையும் தணித்தது.

### மனம் மாறினார் சீஸ்தானி

மறுநாள் 20.06.14 அன்று ஜும்ஆவில் பேசிய அறிஞர் அலீ சீஸ்தானி எல்லா மக்களின் ஒற்றுமைக்கும் குரல் கொடுத்ததோடு, எல்லோரின் உரிமைகளையும் பேணிப் பாதுகாக்கும் அரசு ஏற்பட வழி செய்யப்பட வேண்டும் என்று கூறி ஈராக் - இல் அஹ்லுல் சுன்னாவை புறக்கணிக்கும் இப்போதைய ஷியா ஆட்சியாளர் நூர் மாலிக்கி ஆட்சி மாற்றப்படும் என்றும் சூசகமாக தெரிவித்தார்.

### அமெரிக்காவை தடுத்து நிறுத்திய எர்துகான்

ஈராக் அரசும், ஈரானும் ராணுவத்தை அனுப்புமாறு கடந்த 18ஆம் தேதி அமெரிக்காவுக்கு கோரிக்கை வைத்துள்ள நிலையில், துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் ராணுவத்தை அமெரிக்கா அனுப்பக்கூடாது என்றும், விமானத்தை தாக்குதல் நடத்தக்கூடாது என்றும் அதிபர் ஒபாமாவிடம் உறுதியாக தெரிவித்து விட்டார்.

கடந்த 19ஆம் தேதி செய்தியாளர்களிடம் கூறியதாவது, "அமெரிக்கா ராணுவத் தாக்குதலோ, விமானத் தாக்குதலோ நடத்தக்கூடாது. அது இப்பிராந்தியத்தில் வாழும் அப்பாவி பொதுமக்களை பாதிக்கும்.

ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகளுடன் அஹ்லுஸ் சுன்னா பொதுமக்கள் கலந்துள்ளனர். விமானத் தாக்குதல் நடத்தினால் அஹ்லுஸ் சுன்னா மக்கள் மட்டுமல்ல..ஷியா பொது மக்களும் பலியாவார்கள். விமானத்தில் இருந்து போடப்படும் குண்டுகள் இவர் அஹ்லுஸ் சுன்னாவா? ஷியாவா? என்று பார்த்துப் போடப்படாது." (http://www.dailysabah.com 19.07.14)

துருக்கி நேட்டோ அணியில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய ராணுவ வலிமையுள்ள நாடாகும். ஆதலால், துருக்கியின் எதிர்ப்பால் அமெரிக்கா ராணுவத்தை அனுப்பும் திட்டத்தையும், விமானத் தாக்குதல் நடத்தும் திட்டத்தையும் கைவிட்டு விட்டு சமாதானப் பேச்சுவார்த்தை ஏற்பாடுகளில் இறங்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

எர்துகான் மற்றும் கர்ளாவியின் அறிக்கைக்கு பின்பு ஈராக் மற்றும் ஈரான் ஷியா மத தலைவர்களும் இனவெறி பேச்சுக்களை கைவிட்டு விட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இசைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### நாம் தஃவாவின் ஊழியர்களே - எர்துகான் பேச்சு

துருக்கியில் கடந்த 28.06.14 (சனிக்கிழமை) ரமழான் முதல் நோன்பு தொடங்கியது. துருக்கியின் 'ஒற்றுமை' அறக்கட்டளை ஏற்பாடு செய்திருந்த இஃப்தார் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு துருக்கி பிரதமர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான் பேசியதாவது,

"நாம் தஅவாவின் ஊழியர்களாகவே இருப்போம். அது பரக்கத்தானது. ஆதியில் அது தான் நிலை பெற்றிருந்தது. இப்போது வரை அதுவே நீடித்தும் கொண்டிருக்கின்றது.

நமது எல்லா செயல்களையும், அமல் களையும் சுயநல நோக்கமின்றி இக்லாஸான தாக ஆக்குவதில் நாம் பேராசைப்பட வேண்டும்.

சூழ்நிலைகள், ஏற்றத்தாழ்வுகள் அல்லாஹ் வால் விதிக்கப்பட்டவை. எக்காரணம் கொண்டும் வருங்காலத்தில் அல்லாஹ் நம்மை கைவிட மாட்டான்.

## நமது எதிரிகளும் நாமும்

வேதனைக்குரிய விஷயம் என்னவெனில், நம்முடைய முஸ்லிம் உம்மத்தை துண்டு துண்டாக கிழித்தெறிய முயற்சிப்பவர்களின் முகத்திற்கு நேராக நிற்பதின் மீது நாம் நிர்பந்திக்கப்பட்டிருக்கிறோம்.

இத்தகையவர்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்வதும் கூட நமது சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்டிருக்கின்றது. ஆம். நமது உம்மத்தை துண்டு துண்டாக கிழித்தெறிய முயற்சிப்பவர்கள் இங்கேயே இருக்கின் றார்கள். எவ்வளவு பெரிய கைசேதம் இது.

## வரலாற்றில் மிக மோசமான காலகட்டம்

இவ்வருடம் ரமழானில் நாம் நுழைந் துள்ளோம். இத்தகைய ஒரு காலகட்டத்தை இந்த உம்மத் இதற்கு முன்பு சந்தித்ததில்லை. அவ்வளவு மோசமான காலகட்டம் இது.

முஸ்லிம் உம்மத்தின் வாழ்க்கையில் பெரும் சோதனை ஏற்பட்டிருக்கின்றது. சங்கைக்குரிய இம்மாதத்தின் பரக்கத்தினால் இவ்வும்மத்திற்கு நற்பாக்கியம் ஏற்படட்டு மாக!

இஸ்லாமிய உலகமும், அரபுலகின் சில நாடுகளும் கடும் கஷ்டத்தில் சிக்கித் தவிக் கின்றன. அந்நாடுகளில் வாழும் முஸ்லிம்களின் கஷ்டத்தையும், துன்பங்களையும் இந்த ரமழான் துருக்கி முஸ்லிம்களாகிய நமக்கு உணர்த்த வேண்டும்.

ஏனெனில், தன்னையும், பிறரையும் அறிவதே நோன்பின் நோக்கமாகும். ஏழைகள், எளியவர்களின் பசியையும், உணவின்றி அவர்கள் வாடுவதை உணரவும் தான் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது.

ஆதலால் உலகம் முழுவதும் துன்பங்களில், துயரங்களில் வாழும் இஸ்லாமியர்களை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்னும் இச்சந்தர்ப்பத்தில் ஈராக்கையும், சிரியாவையும் அதிகம் நினைத்துப் பார்க்க கடமைப்பட்டுள்ளோம். அவ்விரு நாடுகளின் வரலாற்றில் இது போன்ற மோசமான சூழ்நிலை இதற்கு முன்பு ஏற்பட்டதில்லை.

அந்நாடுகளில் குண்டுவெடிப்புகளை நடத்தி அப்பாவிகளை கொலை செய்பவர்கள் பெருகி வருகிறார்கள். விளைவு அந்நாடே இரத்தக் குளமாக காட்சியளிக்கிறது.

அந்நாடுகளில் இன்னொரு படையினர் உள்ளனர். அவர்கள் பள்ளிவாசல்களை குண்டு வெடித்து தகர்க்கின்றனர். அவற்றின் உயர் கோபுரங்களை இடித்துத் தள்ளுகின்றனர். மார்க்கத்தின் பெயரால் சிலர் சிலரை கொன்று குவிக்கின்றனர்

அரபு நாடுகளில் இப்போது நேர்ந்துள்ள இந்நிலைமைக்கு என்ன காரணம் தெரியுமா? தங்களை தாங்களே கேள்வி கேட்டுக் கொள்ளும் மனநிலையும், செயல்களில் தாங்கள் செய்த தவறை சரிப்படுத்திக் கொள்ளும் முயற்சியும் இல்லாமல் போனது என்றால் மிகையில்லை.

ஆம். தங்களின் ஆத்மாக்களின் மீது கேள்விகளை கேட்காமல் இருப்பது எவ்வளவு கைசேதம். ஆபத்து

## நம் மீதான பொறுப்புகள்

துருக்கி மக்களே.. உலகம் முழுவதும் வாழும் முஸ்லிம்கள் துன்பங்களை சந்தித்து வருகிறார்கள். எகிப்து, சோமாலியா, சிரியா, ஈராக், மியான்மர், ஆப்கானிஸ்தான், லிபியா நாடுகளில் வாழும் உங்களின் சகோதரர்கள் அநியாயங்களில் சிக்கித் தவிக்கிறார்கள்.

நீங்கள் உதவி செய்வீர்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள். எதிர்பார்க்கிறார்கள். எவ்வளவு பெரிய பொறுப்பை நாம் சுமந்து நிற்கிறோம். இதனை நாம் உணர வேண்டும். நல்ல எதிர்காலத்தை அவர்களுக்கு நாம் ஏற்படுத்தி தருவோம்.

இதற்கு முன்பு நாமும் துன்பங்களை சந்திக்கவே செய்துள்ளோம். ஹாவியா எனும் நரகத்தின் அதள பாதாளத்தில் நாம் தள்ளி விடப்பட்டிருந்தோம். அச்சமயத்தில் நாட்டை காப்பாற்றிட சில மனிதர்கள் கடுமையாக போராடினார்கள். மேன்மை மிக்க அத்தலைவர்கள் நாட்டைக் காப்பாற்றிட தஃவாவின் வழியில் இலக்கினை நிர்ணயித்து போராடினார்கள். அதனை அடைய எல்லா பாதைகளையும் பயன்படுத்தி னார்கள்.


யார் தஃவாவின் வழியை கைவிட்டு விட்டு அதிகாரம் - பதவியின் வழியில் பயணிக் கிறார்களோ அவர்கள் சிரமங்களை சந்திப்பார்கள்.

அதே போன்ற உழைப்பும், போராட்டமும் மற்ற நாடுகளில் துன்பப்படும் முஸ்லிம்களைக் காப்பாற்றிட நமக்கு இப்போது மீண்டும் தேவைப்படுகின்றது. அதனை இந்நோன்பு நமக்கு தர வேண்டும்."

இவ்வாறு எர்துகான் பேசினார். (அனடோலியா செய்தி ஏஜென்சி)

தொடர்புக்கு : abulhasanf@gmail.com


இப்போது பரபரப்பான விற்பனையில்



பாபரி மஸ்ஜித் : அடிப்படை தகவல்கள்

விரிவாக்கப்பட்ட 3ஆம் பதிப்பு - அதிக தகவல்களுடன்

பாபரி மஸ்ஜித் பற்றிய முழு விவரங்களுடன்

அலகாபத் நீதிமன்ற தீர்ப்பு பற்றி வழக்கறிஞர்களின் வாதங்களுடன்

விலை ரூ. 90/-

இஸ்லாமிய நாகரிகம்

விரிவாக்கப்பட்ட 3ஆம் பதிப்பு - அதிக தகவல்களுடன்

கொள்கை ரீதியாக இருந்த இஸ்லாம் எப்படி நடைமுறை வாழ்க்கை தத்துவமாகவும் ஆட்சி செய்தது என்பதை விளக்கும் நூல்!

சகோதரத்துவ சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு தருவதற்குச் சிறந்த நூல்!

விலை ரூ. 130/-



பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு

பாலஸ்தீனத்திலுள்ள பூர்வீகக் குடிகளான முஸ்லிம்கள் எப்படி அகதிகளாக்கப் பட்டார்கள்?

சர்வதேச தீவிரவாதத்தின் குறகிய வரலாறு

விலை ரூ. 110/-

வெளியீடு : வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் : 81481 29887

# இணைந்தது பாலஸ்தீனம்

**மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி** M.A.,

*அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது பேரனார் ஹஸன் (ரழி) அவர்களைச் சுட்டிக் காட்டி கூறினார்கள். "இந்த எனது மகன் சிறந்த தலைவர். முஸ்லிம்களில் இரண்டு பெரிய பிரிவினருக்கு இடையே இவர் சுமூகத்தை ஏற்படுத்துவார்." (நூல்: புகாரி)*

ராஷிதீன் கலீஃபாக்களில் நான்காவது கலீஃபாவான அலீ (ரழி) அவர்கள் இறந்த பிறகு அவரின் மகன் இமாம் ஹஸன் (ரழி) அவர்களுக்கு கலீஃபா பொறுப்பு தரப்பட்டது. அச்சமயத்தில் சிரியா ஆளுநராக இருந்த அமீர் முஆவியா (ரழி) அவர்கள் தலைமையில் முஸ்லிம்களில் பெரும்பகுதியினர் கிலாஃபத்துக்கு மாறுபட்டிருந்தனர்.

முஸ்லிம்கள் இரு பிரிவினராக இருப்பது இஸ்லாத்தின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல என்பதை உணர்ந்த ஹஸன் (ரழி) அவர்கள் கலீஃபா பொறுப்பேற்று ஆறு மாதத்திற்குள், ஹிஜ்ரி 41ஆம் ஆண்டு பதவியை முஆவியா (ரழி) அவர்களிடம் தர முடிவெடுத்தார்கள்.

பதவிக்காகவே இன்று பில்லியன் கணக்கில் டாலர்கள் செலவழிக்கப்படுகின்றன. அப்பாவிகளின் இரத்தங்கள் அநியாயமாக சிந்த வைக்கப்படுகின்றன. பல்வேறு பொய்க் கதைகள் புனையப்பட்டு குற்றமேதும் அறியாத அப்பாவிகள் சிறைகளில் தள்ளப்படுகின்றனர்.

இத்தனையும் பதவிக்காகவும், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்காகவும், தக்க வைப்பதற்காகவும் என்றால் மிகையில்லை.

இஸ்லாத்தின் மிக உயர்ந்த அதிகாரம் மிக்க பொறுப்புகளில் ஒன்றான கலீஃபா பொறுப்பை விட்டுக் கொடுப்பது என்பது சாதாரண காரியமல்ல. அதனைத்தான் உம்மத்தின் நலனுக்காக விட்டுக் கொடுத்தார்கள் இமாம் ஹஸன் (ரழி) அவர்கள்.

நிகழ்கால உலகில் பாலஸ்தீனத்தின் காசா பகுதியை 2007 ஆம் ஆண்டு முதல் ஏழு ஆண்டுகளாக நிர்வாகம் செய்து வந்த ஹமாஸ் இயக்கத்தையும் இதற்கு உதாரணமாக குறிப்பிடலாம்.

காசா பகுதி மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கடந்த நான்காண்டு காலமாக நடந்து வந்த பேச்சுவார்த்தையின் பலனாக ஹமாஸ் ஆட்சியை விட்டுக் கொடுத்து 'ஒருங்கிணைந்த பாலஸ்தீன அரசு' ஏற்பட வழிவகுத்துள்ளது.

### ஹமாஸ் இயக்கம்

'ஹரகத்துல் முகாவமதுல் இஸ்லாமிய்யா' (இஸ்லாமிய போராட்ட இயக்கம்) என்பதின் சுருக்கமே ஹமாஸ் என்பதாகும். காசா பகுதி இக்வான்கள் இயக்கத்தின் பிரதிநிதிகளாக இருந்த மார்க்க அறிஞர் அஷ்ஷெய்கு அஹ்மது யாசீன், இப்ராஹீம் யாசூரி, முஹம்மது ஷம்ஆ, அப்துல் பத்தாஹ், அப்துல்



பாலஸ்தீன விவகாரம் தொடர்பாக முர்சியுடன் ஆலோசிக்கும் கர்ளாவி

அஜீஸ் ரன்திஸி, ஈஸா நஷ்ஷார், ஸலாஹ் ஷஹ்ஹாதா ஆகிய ஏழு இக்வான்களால் 1987ஆம் ஆண்டு இவ்வியக்கம் தொடங்கப்பட்டது.

இக்வான்கள் இயக்கத்தின் பாலஸ்தீனப் பிரிவு என்று சொல்லப்பட்டாலும் ஹமாஸ் சுதந்திரமாகவே செயல்பட்டது.

**ஹமாஸ் இயக்கம் ஏன் உருவானது?**

பாலஸ்தீன விடுதலை இயக்கமாக இயங்கி வந்த யாசர் அரஃபாத்தின் பி.எல்.ஓ இயக்கம் இடதுசாரி இயக்கமாகும். அப்போது அரபுலகில் பாலஸ்தீன பிரச்சினையில் கவனம் செலுத்தி வந்த எகிப்து, சிரியா, லிபியா, ஜோர்டான், லெபனான் நாடுகளின் முஸ்லிம் இடதுசாரி ஆட்சியாளர்களால் ஆதரிக்கப்பட்ட இவ்வியக்கத்தை ஆரம்பத்தில் ஒட்டுமொத்த பாலஸ்தீன மக்களும் ஆதரிக்கவே செய்தனர்.

பாலஸ்தீன பிரச்சினையைப் பொருத்தவரை சர்வதேச இஸ்லாமியர்கள் அப்பிரச்சினையில் கவனம் செலுத்துவதற்கு இஸ்லாமே காரணமாகும். எகிப்து இக்வான்கள் இயக்கம் தொடர்ந்து தடை செய்யப்பட்டதாலும், பாலஸ்தீனப் பிரச்சினை பாலஸ்தீன மக்களின் பிரச்சினை என்பது போன்று சித்தரிக்கப்பட்டதாலும் இஸ்லாத்தின் மீது பற்றும் பாசமும் கொண்ட பாலஸ்தீனிய இஸ்லாமியர்கள் யாசர் அரஃபாத்தின் இடதுசாரி விடுதலை இயக்கத்தின் பின்னால் நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அமெரிக்காவையும், ஐரோப்பாவையும், ரஷ்யாவையும் திருப்திபடுத்திட பி.எல்.ஓ செய்த சில செயல்கள் பாலஸ்தீன முஸ்லிம்களை கொதிப்படையச் செய்தன. விளைவு பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தில் இஸ்லாமிய இலட்சியவாதிகள் நடத்தும் இயக்கத்தின் தேவை ஏற்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தான் மேற்கண்ட ஏழு இக்வான்களால் ஹமாஸ் தொடங்கப்பட்டது.

**ஹமாசின் ராணுவப் பிரிவு**

ஹமாசைப் பொருத்தவரை ஜிகாத் அமைப்பாக மட்டும் இயங்காமல் சமூக -

பொருளாதார - நடவடிக்கைகளிலும் தன்னை அது ஈடுபடுத்திக் கொண்டது. பல்வேறு சமூகத் தளங்களிலும், சொந்த வேலைகளிலும் ஈடுபட்டு வாழும் அதன் உறுப்பினர்கள் பிரச்சினைக் காலங்களில் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

90களில் பாலஸ்தீனர்களின் மீதான இஸ்ரேலின் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்த பொழுது தனியொரு ராணுவப் பிரிவை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஹமாசுக்கு ஏற்பட்டது.

1992ஆம் ஆண்டு ஹமாஸ் 'இஸ்சுத்தீன் கஸ்ஸாம்' எனும் ராணுவப் பிரிவை தொடங்கியது. இன்று வரை இஸ்ரேலுக்கு சிம்மசொப்பனமாக இதுவே இருந்து வருகிறது.

**ஹமாசும் மேற்குலகமும்**

பாலஸ்தீன விடுதலை இயக்கமான ஹமாஸ் முஸ்லிம் அஹ்லுஸ் சுன்னா பிரிவைச் சார்ந்த அமைப்பாக இருந்த போதிலும் அதன் தொடக்க காலம் முதல் ஈரான் அதற்கு நிதி உதவி செய்து வந்தது. ஹமாசை தோற்றுவித்தவர்கள் இக்வான்களாக இருந்ததால் அரபுலகம் முழுவதும் அதற்கு ஆதரவிருந்தும் எகிப்து ஹமாசை ஏற்கவில்லை.

ஹமாசை ஒடுக்குமாறு யாசர் அரஃபாத்தின் "பதஹ்" அமைப்புக்கு கட்டளையிடப்பட்டது. ஹமாசுக்கு எதிராக பதஹ் தாக்குதல்களை நடத்தியது.

எனினும் ஹமாசின் பார்வை உண்மையான எதிரியான இஸ்ரேலின் பக்கமே இருந்தது. இஸ்ரேலின் மீது ஹமாஸ் தாக்குதல்களை நடத்திய பொழுது மேற்கத்திய நாடுகள் கடும் நெருக்கடிகளை தரத் தொடங்கின.

**தேர்தலில் ஹமாஸ்**

2006ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தில் தேர்தல் நடந்தது. ஆக்கிரமிப்பாளர்களின் பிடியில் இருந்து பாலஸ்தீனர்களின் பூர்வீக நிலங்களை மீட்டுவோம் என்று வாக்குறுதி தந்து தேர்தலில் போட்டியிட்டது ஹமாஸ்.

மொத்தமுள்ள 132 இடங்களில் 76 இடங்களை கைப்பற்றி பெரும்பான்மை பலம் பெற்றது. தேர்தலில் தில்லுமுல்லு செய்து பதஹ் இயக்கத்தை வெற்றி பெற வைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்படவே செய்தன. நேர்மையான முறையில் தேர்தல் நடந்திருந்தால் பதஹ் இயக்கத்துக்கு ஒரு இடம் கூட கிடைத்திருக்காது என்பதே உண்மை.

பல்வேறு முறைகேடுகளுக்கு மத்தியில் ஹமாஸ் வெற்றி பெற்றது. எனினும் ஹமாசின் வெற்றியை அமெரிக்காவினாலும், மேற்கத்திய நாடுகளினாலும் சகிக்க இயலவில்லை.

**கொள்கையா? பதவியா?**

ஹமாசைப் பொருத்தவரை 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாகுவதற்கு முன்பு எதுவெல்லாம் பாலஸ்தீனமாக இருந்ததோ அவை அனைத்தும் பாலஸ்தீனம் தான் என்பது அதன் கொள்கையாகும்.

இஸ்ரேல் என்பது பூர்வீக நாடல்ல.. அது வன்முறையால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடு என்பதே ஹமாசின் நிலைப்பாடு. ஆட்சியமைக்க வேண்டுமானால் இந்நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்து, இஸ்ரேலை ஒரு நாடாக அங்கீகரிக்க வேண்டும் என்று மேற்கத்திய நாடுகளால் ஹமாசுக்கு வலியுறுத்தப்பட்டது.

இஸ்ரேலை அங்கீகரிக்காமல் ஆட்சியமைத்தால் நிதியுதவி செய்ய மாட்டோம் என்று அமெரிக்காவும் - மேற்கத்திய நாடுகளும் எச்சரித்தனர்.

எனினும் ஹமாஸ் பதவியை விட கொள்கைக்கே முக்கியத்துவம் தந்தது. இஸ்ரேலை அங்கீகரிக்க இயலாது என்று ஹமாஸ் தலைவர் காலித் மிஷ்அல் அறிவித்தார்.

**மக்கா உடன்பாடு**

தேர்தலில் வெற்றி பெற்றும் தொடர்ந்து முட்டுக்கட்டைகள் போடப்பட்டதால் ஆட்சியமைக்க முடியாமல் போனது. அரசியலுக்காக கொள்கையை விட்டுக் கொடுக்க ஹமாசும் தயாரில்லை. இவ்வாறே ஓராண்டு கழிந்தது.

2007ஆம் ஆண்டு இப்பிரச்சினையில் சவூதி தலையிட்டது. ஹமாஸ் தலைவர்கள் மற்றும் பதஹ் தலைவர்கள் மத்தியில் புனித மக்கா நகரில் வைத்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பேச்சுவார்த்தை முடிவில் பாலஸ்தீன நிர்வாகத்தை இரண்டாகப் பிரித்து காஸா பகுதியை ஹமாஸ் நிர்வகிப்பது என்றும், மேற்குகரை பகுதியை பதஹ் நிர்வகிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. ஆரம்பத்தில் இதனை இரு தரப்பும் ஒப்புக் கொண்டாலும் பாலஸ்தீனத்தை இரண்டாக பிரித்ததை இக்வான்களும், பாலஸ்தீன மக்களும் மனமொப்பவில்லை.

ஹமாசின் முயற்சியால் இஸ்ரேல் சிறைகளில் இருந்து கைதிகள் விடுவிக்கப்பட்ட தருணங்களில் மேற்குகரை மக்களுக்கும் சேர்த்தே ஹமாஸ் பாடுபட்டது.

காசா மற்றும் மேற்குகரை மக்கள் பிரிவை விரும்பாததால், இரு தரப்பும் இணைவதற்கான முயற்சிகள் 2009இல் இருந்து தொடங்கின.

**நிதி நெருக்கடியில் ஹமாஸ்**

உலகெங்கும் வாழும் முஸ்லிம்களிடம் குறிப்பாக அரபுலக முஸ்லிம்களிடம் பாலஸ்தீன நிதி வசூல் செய்யப்பட்ட போதிலும் பெரும்பாலும் அவற்றில் முறைகேடுகளே நடந்தன. மிச்சம் மீதி இருந்தவற்றை பதஹ் இயக்கத்துக்கே தந்தனர். ஒரு சிலர்களைத் தவிர.

ஹமாசுக்கு அது தொடங்கப்பட்ட காலம் முதல் ஈரானும், எகிப்து இக்வான்களும் தான்



மேஷல் அப்பாஸ்

நிதியுதவி செய்து வந்தனர். 2007ஆம் ஆண்டு பட்ஜெட் பற்றாக்குறை ஏற்பட்ட சமயத்தில் ஈரானின் அஹ்மது நிஜாத் செய்த உதவியை மறக்க இயலாது.

2011ஆம் ஆண்டு அரபு வசந்தம் ஏற்பட்டது. அது அரபுலகில் பெரும் மாற்றத்தை விளைவித்தது. எகிப்து, துனூஷியா, யமன், லிபியா நாடுகளில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டன.

இனியும் பாலஸ்தீன விடுதலை போராட்டத்தில் இரு துருவங்களாக நின்றால் வெற்றி பெற இயலாது என்பதை உணர்ந்த பதஹ் இயக்கமும், ஹமாசும் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொண்டன.

**கெய்ரோ உடன்பாடு**

2011ஆம் ஆண்டு ஏப்ரல் 27ந் தேதி ஹமாஸ் - பதஹ் இடையே கெய்ரோ நகரில் வைத்து உடன்பாடு ஏற்பட்டது. உடன்பாட்டில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் பின்வருமாறு,

1. 26.02.2009 அன்று தொடங்கி சுமார் 10 கட்டங்களாக 19.03.2009 வரை நடந்த ஒன்றுபட்ட பாலஸ்தீனப் பேச்சுவார்த்தையில், பின்வரும் ஐந்து விஷயங்களில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. அவை, சுமூகமான ஒத்துழைப்பு, ஆட்சி, பாதுகாப்பு, தேர்தல், நிர்வாகம் ஆகியவையாகும்.

2. ஒன்றுபட்ட பாலஸ்தீனத்திற்கான அனைத்து முயற்சிகளையும் எகிப்து அரசே முன்னின்று நடத்தியுள்ளது. பிரிவினையை முடிவுக்கு கொண்டு வருவதைத் தவிர வேறெதுவும் நம் முன்பு இல்லை என்பதை அடிப்படையாக வைத்து எகிப்து தமது முழு ஆற்றலையும் செலவழித்துள்ளது.

3. சுதந்திரம், வளர்ச்சி ஆகியவற்றில் இரு தரப்பும் இணைந்து செயல்படும்

4. சுதந்திரமான தேர்தல் கமிஷனை உருவாக்கி, ஜெருசேலம் உட்பட பாலஸ்தீனத்தின் எல்லா பகுதிகளிலும் தேர்தல் நடத்தப்படும்

5. அதிபர் தேர்தல் மற்றும் சட்ட அவை தேர்தல் நடத்தப்படும்

ஆக 2011 ஏப்ரல் கெய்ரோ உடன்பாடு இரு தரப்பையும் நெருங்கி வரச் செய்தது. இப்பிரச்சினையில் கத்தாரும், துருக்கியும் அதிக கவனம் எடுத்துக் கொண்டன. அடுத்த பேச்சுவார்த்தை கத்தாரில் நடைபெறும் என்று அப்போது அறிவிக்கப்பட்டது.

**தோஹா பிரகடனம்**

2012ஆம் ஆண்டு பிப்ரவரி ஆறாம் நாள் கத்தார் தலைநகர் தோஹாவில் கத்தார் அமீர் ஹம்து முன்னிலையில், மஹ்மூத் அப்பாஸ் மற்றும் ஹமாஸ் தலைவர் காலித் மிஷ்அல் சந்திப்பு நடந்தது. அப்போது இரு தரப்பும் இணைந்து செயல்படுவதாக பிரகடனம் செய்யப்பட்டது,

**முர்சியின் முயற்சி**

2012ஆம் ஆண்டு இக்வான்கள் இயக்கத்தைச் சேர்ந்த டாக்டர் முஹம்மது முர்சி எகிப்து அதிபராக பதவியேற்ற பிறகு இரு தரப்பும் சந்திக்க எகிப்து சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டது.

பல சுற்றுகளாக நடந்த பேச்சுவார்த்தையில் ஹமாஸ் சார்பில் காலித் மிஷ்அல், காசா பிரதமர் இஸ்மாயில் ஹனியா, ஹமாஸ் துணைத் தலைவர் அபூ மர்சூக் கலந்து கொண்டனர். பதஹ் சார்பில் பாலஸ்தீன அதிபர் அப்பாஸ், தஹ்லான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாலஸ்தீன பிரச்சினையின் நடுநிலையான ஆலோசகர்களாக துருக்கி பிரதமர் டாக்டர் ரஜப் தய்யிப் எர்துகான், கத்தார் அமீர் தமீம், அவரது தந்தை ஹம்து ஆகியோரும், டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி தலைமையிலான அறிஞர்கள் குழு ஒன்றும் செயல்பட்டனர்.

அனைத்துப் பிரிவினருடனும் தனித்தனியாகவும், சேர்ந்தும் டாக்டர்

முஹம்மது முர்சி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாலஸ்தீனத்தை இரண்டாக பிரித்த நாடு சவூதி. பாலஸ்தீனியர்கள் எப்போதும் சேரக்கூடாது என்று விரும்பும் நாடு இஸ்ரேல். இது வெட்ட வெளிச்சமான உண்மை.

ஆதலால், பாலஸ்தீனியர்கள் ஒன்று சேர்வது இஸ்ரேலுக்கும், அதன் கள்ள உறவு நாடான சவூதிக்கும் பிடிக்காமல் போனது. விளைவு எகிப்தில் இக்வான்களின் ஆட்சி வீழ்த்தப்பட்டது.

**பாலஸ்தீன ஒற்றுமையில் கத்தாரின் பங்கு**

இக்வான்களின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்பு எகிப்து ஹமாசை தடை செய்தது. சிஸியின் ராணுவ ஆட்சியில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பாழாகும் சூழ்நிலை உருவானது.

அதனால், பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை கத்தார் ஏற்றுக் கொண்டது. கடந்த மே ஆறாம் தேதி காலித் மிஷ்அல் - மஹ்மூத் அப்பாஸ் சந்திப்பை ஏற்பாடு செய்தார் கத்தார் அமீர் தமீம்.

இரண்டு நிர்வாகங்களும் இணைவதின் இறுதி வரைவு செய்யப்பட்டது. ஒருங்கிணைந்த அரசுக்கு அதிபராக தற்போதைய அதிபர் அப்பாஸ் இருப்பார் என்றும், மந்திரி சபை மாற்றி அமைக்கப்படும் என்றும், ஹமாஸ் அமைச்சரவையில் பங்கேற்கும் என்றும், ஹமாஸ் நிர்வகித்து வரும் சிறைவாசிகள் அமைச்சகம் மட்டும் மாற்றப்படாது என்றும், தற்காலிக அரசு பதவி ஏற்ற பின்பு ஆறு மாதத்திற்குள்ளாக பொதுத்தேர்தலும், அதிபர் தேர்தலும் நடத்தப்படும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

***காசா பகுதியில் சுமார் ஆறு மாத காலமாக ஊதியமின்றி பணியாற்றிய 40000 அரசு ஊழியர்களுக்கு ஊதிய நிதியை கத்தார் ஏற்றுக் கொண்டது. ஒருங்கிணைந்த அரசுக்கான சர்வதேச ஒப்புதலை பெற்றுத் தரும் பொறுப்பை துருக்கி ஏற்றுக் கொண்டது.***

**ஒருங்கிணைந்த பாலஸ்தீனம் உருவானது**

ஏற்கனவே திட்டமிட்டபடி கடந்த ஜுன் இரண்டாம் தேதி (02.06.14) ஒன்றுபட்ட பாலஸ்தீன நிர்வாகத்தின் பதவியேற்பு விழா பாலஸ்தீன அதிபர் மஹ்மூத் அப்பாஸ் தலைமையில் மேற்குகரையில் உள்ள ரமல்லா நகரில் நடந்தது. அமைச்சர் பதவி ஏற்கவிருந்த காசா பகுதியைச் சார்ந்த இருவரை மேற்கு கரைக்குள் நுழைய விடாமல் தடுத்து அடாவடி செய்தது இஸ்ரேல்.

**ஹமாஸ் ஏமாறுமா?**

காசா பகுதி மக்களின் நலனுக்காகவும், ஒருங்கிணைந்த பாலஸ்தீன மக்களின் நலனுக்காகவும் ஆட்சியை விட்டுக் கொடுத்துள்ளது ஹமாஸ். எனினும் தனது ராணுவப் பிரிவை கலைக்க ஹமாஸ் சம்மதிக்கவில்லை. ஹிஸ்புல்லாஹ் அமைப்பைப் போன்று ஹமாஸ் தனி ராணுவம் வைத்திருக்கும் என்று அது தெளிவாக கூறிவிட்டது.

ஒருங்கிணைந்த பாலஸ்தீன நிர்வாகத்தை ஐரோப்பிய யூனியன் அங்கீகரித்து விட்டது. அமெரிக்கா பல சந்தேகங்களை கிளப்பி முடிவு அறிவிக்காமல் தாமதித்து வருகிறது.

கடந்த (ஜுன்) 18ந் தேதி மேற்குகரை பகுதியில் மூன்று இஸ்ரேல் வீரர்கள் காணாமல் போனதையொட்டி காசா பகுதியில் விமானத் தாக்குதல் நடத்தி ஹமாசை சீண்டிப் பார்த்தது இஸ்ரேல். ராக்கெட் தாக்குதல் நடத்தி பதிலடி தந்தது ஹமாஸ்.

இனிவரும் காலத்தில் நிலைமையை ஹமாஸ் எப்படி சமாளிக்கப் போகிறது? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். நிச்சயமாக முஃமின்களுக்கு வெற்றியைத் தர அவன் போதுமானவன். ❖

# ஆபத்தான தேசிய பாதுகாப்பு ஆலோசகர்

அல்லாஹ்வின் திருப்பெயரால்...

"அந்த ஆத்து நிச்சயமாக நடக்காது என்றார்கள் டெல்லியில் ஆதிகார வட்டத்தில் உள்ளவர்கள். இல்லை ஆங்கில நாளிதழ்கள் அந்த ஆபத்தான செய்தியை வெளியிட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆகவே அது நடக்கும் என்றோம்" நாம்.

டெல்லியிலிருந்து நமது கவனத்தை மும்பையின் பக்கம் திருப்பினோம். எஸ்.எம்.முஷ்ரிஃப் போன்ற மூத்த காவல்துறை அதிகாரிகளிடம் சொன்னோம். இல்லை அப்படியொரு ஆபத்து இந்தியாவுக்கு வராது என்றார்கள். அப்படி வந்தால் அது மோடியை தொடர்ந்துவரும் இரண்டாவது ஆபத்து என்றார்கள்.

இஃது மே திங்கள் (2014) 28, 29 தேதிகளில் நடந்தவை.

அந்த ஆபத்து வேறொன்றுமில்லை. அஜித் குமார் டோயல் 'Ajit Kumar Doyal' என்பவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்படுவார் என்பதுதான். NSA - National Security Advisor ; மே 30, 2014இல் அனவரின் எதிர்பார்ப்பிற்கும் எதிராக ஆபத்தான இவர் இந்த பதவியில் அமர்த்தப்பட்டார்.

இவர் ஏன் ஆபத்தானவர் என்பதை மே 28, 29 ஆகிய தேதிகளில் வந்த ஆங்கிலப் பத்திரிகைகள் தெளிவாகச் சுட்டிக்காட்டின. அவர் டெல்லியில் வீற்றிருக்கும் இந்துத்துவ சிந்தனை குழுவின் தலைவர். அதாவது ஹிந்து திங்டேங் : 'Hindu Think Tank-ஐ சார்ந்தவர். 2005ஆம் ஆண்டு முதலே இந்த வலதுசாரி சிந்தனை குழுமத்தின் தலைவராக இருந்தவர்.

இந்த இந்து சிந்தனை குழுமத்திற்கு இன்னொரு பெயர் "Vivekananda International Foundation" விவேகானந்தா இண்டர் நேஷனல் ஃபவுண்டேஷன் என்பதாகும்.

### விவேகானந்தா இண்டர்நேஷனல் பவுண்டேஷன்

இதனைப் பற்றி நாம் பொதுமக்களிடம் கடந்த மூன்று மாதங்களாகவே பேசிவருகின்றோம்.

இந்த விவேகானந்தா இண்டர்நேஷனல் பவுண்டேஷன் என்பது 1998ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒன்று. இந்தியாவை இந்துராஷ்டிரமாக ஆக்கிட உருவாக்கப்பட்ட ஓர் சிந்தனைக் குழுமம்.

இந்தக் குழுமம், டெல்லியிலுள்ள சாணக்கியாபுரியில் ஓர் கட்டடத்தில் தலைமையகம் அமைத்து செயல்படுகின்றது. டெல்லியில் சாணக்கியாபுரியில் இவர்கள் தலைமையகம் அமைத்திடத் தேவையான இடத்தைத் தந்தவரும், அதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்தவரும் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ்தான். இவர்தான் பாபரி மஸ்ஜித்தில் மிச்சம் மீதி இருந்ததை புல்டோசர் கொண்டு இடித்த பாரத பிரதமர்.

விவேகானந்தா பவுண்டேஷனில் அங்கம் வகிப்பவர்களும், ஆலோசனைக் குழுவில் இடம்பெறுபவர்களும் விதிவிலக்கின்றி ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பைச் சார்ந்தவர்களும், 'ஐ.பி.' என்ற நமது மத்திய உளவுத் துறையின் முன்னாள் இன்னாள் உறுப்பினர்களும்தான். (Source : 26/11 Why Judiciary also failed, A book by S.M. Mushriff, pages 190/191).

இத்தோடு முக்கிய தொலைக்காட்சிகளில் விவாதங்களை நடத்துகின்றவர்களும் இங்கே அடிக்கடி வந்து ஆலோசனைப் பெற்றுச் செல்கின்றனர். அதன்படியே தொலைக்காட்சி விவாதங்கள் நடக்கின்றன.

இவற்றையெல்லாம்விட ஆபத்தானதொரு விஷயமும் அங்கு நடக்கின்றது. அதுதான் பல முன்னாள் இந்நாள் நீதிபதிகளும் வந்து ஆலோசனைப் பெற்றுச் செல்கின்றார்கள்.

இங்கேதான், எந்த அரசியல் தலைவரை தொலைக்காட்சியில் அமர வைத்து கேள்விகளைக் கேட்க வேண்டும்? அந்தக் கேள்விகள் மூலம் அந்தத் தலைவரை பெரியவராகக் காட்டிட வேண்டுமா? அல்லது கேள்விகளால் வீழ்த்த வேண்டுமா? என்பதெல்லாம் முடிவு செய்யப்படுகின்றன.

அதேபோல் குண்டுவெடிப்புகளில் என்னென்ன உத்திகள் கையாளப்பட வேண்டும். வழக்குகளில் என்ன தந்திரங்கள், சாங்கியங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பவையெல்லாம் இங்கேதான் முடிவு செய்யப்படுகின்றன. (Source: 26/11 Why Judiciary also failed).

### முக்கிய பணி

இந்த விவேகானந்தா சர்வதேச மையத்தின் முக்கிய பணியை நாம் மேலே குறிப்பிட்ட நூல் இப்படிக் குறிப்பிடுகின்றது. "But the core activity of the centre is to influence government decisions with the objective of attaining the main agenda of IB-RSS combine".

அதாவது இந்த மையத்தின் பிரதான செயல்பாடுகள், அரசின் முக்கிய முடிவுகளில் ஆதிக்கம் செலுத்துவது, அழுத்தங் கொடுப்பது. இதன்மூலம் ஐ.பி. என்ற மத்திய உளவுத் துறையும், ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பும் தங்கள் இலக்கை அடைந்திட வகை செய்வது. (Source : 26/11 Why Judiciary also failed, page 91).

இவர்கள் அடிக்கடி நடத்தும் கருத்தரங்குகளில் நமது பிரதமரின் அலுவலகத்திலுள்ள முக்கிய செயலாளர்கள் கலந்து கொள்கின்றார்கள். இதனால் இங்கு எடுக்கப்படும் முடிவுகள் உடனுக்குடன் செயல்படுத்தப்படுகின்றன.

இங்கு நடக்கும் விவாதங்களைப் பார்த்தால் நாட்டு நலனில் அக்கறைக் கொண்ட விவாதங்களாக அவை தெரியும். ஆனால், அந்தரங்கத்தில் நடக்கும் விவாதங்கள் முற்றிலும் ஆர்.எஸ்.எஸ். மத்திய உளவுத் துறை இவற்றின் திட்டங்கள், சதிகள் என்பனவாக அமைகின்றன. (ibid)

### மத்திய உளவுத் துறையும், ஆர்.எஸ்.எஸ்ஸும்

இந்த மத்திய உளவுத் துறை, ஆர்.எஸ்.எஸ். இவற்றின் இணைப்பையும் பிணைப்பையும் ஒத்த சிந்தனைகளையும் செயல்களையும் முன்னாள் மராட்டிய மாநில காவல் துறை ஐ.ஜி. எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் அடிக்கடிக் குறிப்பிடுகின்றார்கள். இவை இரண்டும் ஒரே இலக்கை நோக்கித்தான் பயணிக்கின்றன என்பதையும் தனது நூலில் பட்டியல் போடுகின்றார்.

ஆர்.எஸ்.எஸ்.ஸும், மத்திய உளவுத் துறையும் எப்படி ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளாக வாழுகின்றாக்ரள் என்பதை எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் விளக்குகின்றார்கள் இப்படி -

மராட்டிய மாநிலத்தில் ஒரு குடும்பத்தில் அண்ணன், தம்பிகள். அண்ணன் மிஸ்டர் வி.ஜி.வைத்யா, மத்திய உளவுத் துறையில் பணியாற்றுகின்றார். அதன் உச்சபட்ச பதவியாகிய Director 'IB' இயக்குநர் மத்திய உளவுத் துறை என்ற பதவியை வகிக்கின்றார். அவருடைய தம்பி எம்.ஜி.வைத்யா இந்த காலகட்டத்தில் மராட்டிய மாநிலத்தின் ஆர்.எஸ்.எஸ். தலைவராகப் பணியாற்றுகின்றார்.

இப்படி நகமும் சதையுமாக ஆர்.எஸ்.எஸ். அமைப்பும், ஐ.பி. என்ற மத்திய உளவுத் துறையும் இருந்து வந்துள்ளன.

### சாதனைகள்

இதில் ஒருவர்தான் அஜித்குமார் டோவல். இவருடைய சாதனைகளைப் பற்றி பேசுகின்றபோது... இவர்தான் 1980களில் பொற்கோவில் என்ற சீக்கிய சிறுபான்மை சமுதாயத்தின் புனித இடமாகவும் புண்ணிய தலமாகவும் கருதப்பட்ட பொற்கோயில் தாக்கப்பட்டதை வழிநடத்தினார். இதற்கு ஒய்யாரமாக ஓர் பெயரையும் சூட்டினார்கள். அது 'ஆபரேஷன் ப்ளூ ஸ்டார்' (Operation Blue Star). இதில்தான் சீக்கிய சமுதாயத்தவர்கள் புண்பட்டார்கள். இந்தத் தாக்குதலில் பொற்கோயில் சேதப்பட்டது. பல சீக்கியர்கள் கொலை செய்யப்பட்டார்கள். இந்தத் தாக்குதலுக்குப்பின் இன்னொரு தாக்குதல். அதன் பெயர் 'ஆபரேஷன் பிளாக் தண்டர்' (Operation Block Thunder). இதிலும் இந்த அஜித் குமார் டோயலின் திறமைகள் அசாதாரண மானவை எனப் பாராட்டப்படுகின்றன. இதுவும் பொற்கோயிலைச் சுற்றி நடந்ததுதான்.

இந்த இரண்டுமே வரலாற்றைத் திருப்பிப் போட்ட கசப்பான நிகழ்வுகள்.

இதில் பொற்கோயில் தாக்குதலைப் பொறுத்தவரை சீக்கிய சமுதாயம் அந்நியப்பட்டு நின்றது. ஓர் சிப்பாய் கலகத்தையும் சுதந்திர இந்தியாவில் அவர்கள் செய்தார்கள்.

## பிரதமர் இந்திராவின் கொலை

முடிவில் நாம் நம் நாட்டின் கீர்த்திமிக்க வீராங்கனை பிரதமர் இந்திரா காந்தியை இழந்தோம். 31 அக்டோபர் 1984 பிரதமர் இந்திரா காந்தியின் கொலையும் உளவுத் துறையின் மெத்தன போக்கால் நிகழ்ந்தது என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகின்றார் முன்னாள் மராட்டிய காவல் துறை ஐ.ஜி. அதிகாரி எஸ்.எம்.முஷ்திஃப் அவர்கள்.

பொற்கோயில் நிகழ்வு ஆபரேஷன் ப்ளூ ஸ்டார், சீக்கிய சமுதாயத்தை அந்நியப்படுத்தியதல்லாமல், அவர்களை அதிகமாகக் கோபப்படுத்தியது. இதனால் பிரதமர் இந்திரா காந்தியின் உயிருக்கு ஆபத்து இருக்கின்றது என்பதை அனைவரும் உணர்ந்தனர்.

அதனால் பிரதமர் இந்திரா காந்தியைச் சுற்றியுள்ள பாதுகாப்பைப் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொண்டு, மூன்று விதிகளை வகுத்தனர். 1. பிரதமர் இந்திரா காந்தியை சுற்றியுள்ள பாதுகாப்பை முழுக்க முழுக்க சீக்கி சிப்பாய்களிடம் ஒப்படைக்கக் கூடாது 2. சீக்கிய சிப்பாய்களை ஏதேனும் காரணத்திற்காக நியமிக்க வேண்டியது வந்தால் அதில் சீக்கியர்கள் அல்லாதவர்களையும் போட்டிட வேண்டும். 3. டெல்லியில் சில சீக்கிய சிப்பாய்கள் தொலைபேசிகளைப் பயன்படுத்தாமல் சந்தேகப்படும்படியாக சுற்றித் திரிகின்றார்கள். அதனை ஆழமான கண்காணிப்புகளுக்கு உள்ளாக்கிட வேண்டும். இந்த மூன்று முடிவுகளும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன.

பிரதமர் இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டார்கள். இழப்பு ஒரு பிரதமரை இழந்தோம் என்பதோடு போய்விடவில்லை. அதனை தொடர்ந்து 3000 சீக்கியர்கள் கொலை செய்யப்பட்டார்கள். நாடு அடைந்த நஷ்டங்களுக்கு அளவே இல்லை. பல காவல் துறை அதிகாரிகளை சீக்கிய சமுதாயத்தவர்கள் சுட்டுக் கொன்றார்கள்.

ஆனால் இவற்றிலெல்லாம் அபார பணியாற்றினார் அஜித் குமார் டோயல் எனப் பாராட்டுகின்றார்கள். திறமைசாலி எனப் பட்டையங்களும் பதக்கங்களும் “கிருத்தி சக்கரா” விருதும் வழங்கியுள்ளார்கள்.

இவருடைய இன்னொரு சாதனையாக கூறப்படுவது பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் 1999இல் நமது விமானம் ஐ.சி. 814 கடத்தப்பட்டதும், அதற்குப் பிணையாக நமது சிறைகளிலிருந்த சிலரை நாம் விடுவித்ததும். இதில் வேதனையும் வேடிக்கையும் என்னவென்றால், நமது சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களை ஓர் அமைச்சர் உடன் சென்று அவர்களை விட்டுவிட்டு வந்தார் என்பதுதான்.

இவர்தான் - அஜித் குமார் டோயல் தான் இதற்கான பேச்சுவார்த்தையை நடத்தினார் என்று வேறு பீற்றிக் கொள்கின்றார்கள்.

கடத்திச் செல்லப்பட்ட நமது விமானம் ஆப்கானிஸ்தானிலுள்ள கந்தகாரில் தாம் வைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்துதான் அதை மீட்டு வந்தோம். இதனால் இந்த மொத்த நிகழ்வையும் கந்தகார் தோல்வி (Khandahar Defeat) என்ற அன்றைய ஃப்ரண்ட லைன் முதற்கொண்டு அத்தனை பத்திரிகையும் எழுதி வந்தன.

ஆனால், இன்று இவையெல்லாம் அஜித்குமார் டோயாவினுடைய சாதனையாகப் பேசப்படுகின்றன. போதாக்குறைக்கு கஷ்மீர் படுகொலைகள், மாவோயிஸ்டுகளின் தாக்குதல் இவற்றிலும் இவர் அபார பணியாற்றினார் என பாராட்டுகள். உண்மையைச் சொன்னால் ஓர் முழு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர் இவர்.

இதற்குமேல் அவர் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற உயர் பதவியையும் பெற்றிருக்கின்றார். மோடி அவரை நியமித்திருக்கின்றார். இவரால் நாடு கபளீகரப்படும் என நல்லவர்கள் அஞ்சுகிறார்கள். இவர் இணைந்து நடத்தும் சதிகளிலிருந்து இந்தியாவைக் காப்பாற்றிட மக்களாகிய நாம்தான் கவனமாக இருக்க வேண்டும். ❖

# ஐ.பி. மிரட்டும் அணுஉலை எதிர்ப்பு போராளி

**ஜீ**ன் 2014ன் இரண்டாவது வாரத்தில் செய்தி ஊடகங்களில் ஒரு சலசலப்பு. அதாவது இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்கும் வகையில் சில அமைப்புகள் அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளிலிருந்து பணத்தை பெற்றுக் கொண்டு நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவதாகவும் செய்திகள் வெளியாயின.

அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிலிருந்து கூடங்குளம் அணு உலைக்கு எதிராக போராடக்கூடிய ஓர் அமைப்பு இதனை தலைமை தாங்கி நடத்தி வரும் உதயகுமார் என்பவர் வெளிநாட்டிலிருந்து பணம் பெற்றுக்கொண்டு (அமெரிக்கா) மக்களை இந்திய அரசுக்கு எதிராக தூண்டி விடுகிறார் என்றும் ஐ.பி. குற்றம் சாட்டியது.



இந்த செய்தியை ஐ.பி. வெளியிட்டதை தொடர்ந்து நமது வைகறை குழு நாகர்கோவிலில் உள்ள அவரது வீட்டிலேயே அவரை சந்தித்தோம்.

**நிருபர் :** நீங்கள் நமது நாட்டு நலனுக்கு எதிராக செயல்படுவதாக வும் இதற்காக அமெரிக்காவிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளதே?

**உதயகுமார் :** நான் 2006-2011ம் ஆண்டு மார்ச் வரை அமெரிக்காவினுடைய நியூ ஜெர்சி மாநிலத்திலுள்ள மம்மோத் பல்கலைக் கழகத்தில் வருகை தரும் பேராசிரியராக (Visiting Professor) வேலை பார்த்துள்ளேன். 2011ஜீன் வரை கிருபான் இன்ஸ்ட்டியூட்டில் வேலை பார்த்துள்ளேன். பிறகு ஒகாயோ மாநில பல்கலைக்கழகத்திலும் ஆய்வறிக்கை சமர்ப்பிப்பவனாகவும் வேலை பார்த்துள் ளேன். ஆக இதற்கெல்லாம் சேர்த்து 2012 மார்ச் மாதம் என்னுடைய அமெரிக்க வங்கி கணக்கில் 25,00,000 ரூபாய் போட்டுள் ளார்கள்.

நான் என்னுடன் அஸ்கர்அலி இன்ஜினியர், என்.ராம் மற்றும் ஆஷிஷ் நந்தி போன்றோ ரெல்லாம் ஒரு நாளைக்கு வருகை தரும் பேராசிரியராக வேலை பார்ப்பதற்கு 5000டாலர் சம்பளம் என்ற அடிப்படையில் அழைத்துச் சென்றுள்ளேன்.

**நிருபர் :** உங்களோடு சேர்த்து யாரெல் லாம் குற்றம் சாட்டப்படுகிறார்கள்?

**உதயகுமார் :** அச்சின் பட்நாயக் (டெல்லி பல்கலைக்கழகம்), முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ராம்தாஸ், லலிதா ராம்தாஸ், சமூகவியலாளர் மேதா

பட்கர், எம்.ஜி. தேவசகாயம் மற்றும் காஷ்மீர் கருணாஇராய்னா ஆகியோரும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்கள்.

**நிருபர் :** அயல்நாட்டிலிருந்து பணம் பெற்று அமைப்புகள் பற்றி உங்கள் கருத்து?

**உதயகுமார் :** ஏன் ராஜீவ்காந்தி ஃபவுண்டேஷனுக்கு அயல்நாட்டிலிருந்து பணம் வருவதில்லையா? ஆர்.எஸ்.எஸ். வி.ஹெச்.பி போன்ற அமைப்புகளுக்கு அயல்நாட்டிலிருந்து பணம் வருவதில்லையா?

**நிருபர் :** உங்களுக்கும் ஜெர்மனியை சேர்ந்த ரெய்னருக்கும் உள்ள தொடர்பு எந்த அடிப்படையிலானது?

**உதயகுமார் :** ரெய்னர் நாகர்கோவிலுக்கு சுற்றுலாவிற்காக வந்தவர். இங்கு எங்களுடைய போராட்டத்தினை கேள்விப்பட்டு என்னை வந்து சந்தித்தார். நான் அவருக்கு விருந்தளித்தேன். பிறகு எங்களுடைய போராட்டத்திற்கு ஆதரவளித்தார். அவ்வளவுதான். அவர் உண்மையிலேயே நமது நாட்டிற்கெதிராக ஏதேனும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பாரெனில் அவரை ஏன் நமது அரசு பத்திரமாக 2012ல் ஜெர்மனிக்கு அனுப்பியது? கைது செய்து சிறையிலடைத்திருக்கலாமே? என்னை மற்றும் என்னுடைய தலைமையிலான போராட்டத்தை தனிமைப்படுத்துவதற்காக செய்த நடவடிக்கை என்று கருதுகிறேன்.

**நிருபர் :** உங்களை இந்திய அரசு தேசத் துரோகி என்ற குற்றச்சாட்டை வைக்கின்றதே?

**உதயகுமார் :** காங்கிரஸ் அரசில் அமைச்சராக இருந்த நாராயணசாமி தான் என்னை தேசத்துரோகி என்று சொன்னார். அது மட்டுமல்ல 2012 மார்ச் மாதம் என்னுடைய வீடு உள்துறை அமைச்சகத்தால் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. என்னுடைய வங்கி கணக்குகளை முடக்கி வைக்கும்படி உள்துறை அமைச்சகம் அரசிற்கு பரிந்துரை செய்தது. அதன்பிறகு நாகர்கோவிலுள்ள இந்து முண்ணணியைச் சேர்ந்தவர்கள் பால்விளையில் என்னால் நடத்தப்பட்டு வரும் சாக்கர் மெட்ரிகுலேஷன் பள்ளியை அடித்து நொறுக்கினார்கள். எல்லா பொருட்களையும் அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதோடு லேப்டாப்பையும் எடுத்து சென்று விட்டார்கள்.

**நிருபர் :** உங்கள் மீதுள்ள குற்றச் சாட்டைப் பற்றி உங்கள் போராட்ட



இயக்கத்தினரின் கருத்து என்ன?

***உதயகுமார் :*** எங்களுடைய போராட்டக் குழுவைச் சேர்ந்த மக்கள் எள்ளளவும் என் மீது சந்தேகப்படவில்லை. நீங்களே நேரடியாக சென்று கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்.

***நிருபர் :*** உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டு சம்பந்தமாக என்ன சட்ட நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

***உதயகுமார் :*** அட்வகேட் ராதா கிருஷ்ணன் வாயிலாக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளோம். உள்துறை அமைச்சரையும் சந்திக்க முடிவு செய்துள்ளோம்.

***நிருபர் :*** பத்திரிக்கை வாயிலாக மக்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் கருத்து?

***உதயகுமார் :*** இது மோசமான அரசியலின் தொடக்கமாக உள்ளது. இது போன்ற பாஸிச அரசின் நடவடிக்கைகளைக் கண்டு பயப்படக்கூடாது, ஒதுங்கக்கூடாது. மக்கள் இயக்கங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பொதுவான விஷயத்தில் கைகோர்த்து உழைக்க வேண்டிய சூழல் உருவாகியுள்ளதை மனதிற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

வாசகர்களே,

ஒருவர் மீது குற்றச்சாட்டு வைக்கப்படுவதற்கு முன் இரண்டு தகுதிகள் இருக்க வேண்டும். ஒன்று குற்றச்சாட்டு வைப்பவர்கள் பரிசுத்தவான்களாக இருக்க வேண்டும். இரண்டாவது குற்றச்சாட்டு வைக்கப்படுபவர்களுக்கு எதிராக ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். இந்த இரண்டுமே சகோதரர் உதயகுமார் விஷயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை என்பது உலகறிந்த உண்மை.

தன்னுடைய காவல்துறையைச் சேர்ந்த உயரதிகாரி ஹேமந்த் கர்கரேயை (தீவிரவாத தடுப்புப் பிரிவின் தலைவர்) கொலை செய்த ஐ.பி. குற்றம் சுமத்துவதற்குரிய தகுதியை இழந்து விட்டது. (பார்க்க கர்கரேயை கொலை செய்தது யார்?). தேசத்துரோகி மற்றும் வெளிநாட்டிலிருந்து பண உதவி பெறுபவர் என்ற குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும் பட்சத்தில் இன்று வரை ஏன் உதயகுமார் கைது செய்யப்படவில்லை, ஆதாரங்கள் ஏன் சமர்ப்பிக்கப்படவில்லை? ஆக இனி IB (Intelligence Bureau) என்றல்லாமல் Inefficient என்றாகிவிட்டது.

நிருபர் - ***யாசர்***, தூத்துக்குடி





**கர்கரேயைக் கொலை செய்தது யார்?**

**இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்**

**ஆசிரியர் : S.M.முஷ்ரிப்**

**முன்னாள் DIG - மகாராஷ்டிரா.**

**பக்கங்கள் 428 - விலை ரூ. 250**

**வெளியீடு: வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, கோனிகா பில்டிங் 4 வது தளம், சென்னை -1. செல்: 81481 29887**

**இந்தியாவில் ஓர் இராணுவப் புரட்சி மூலம் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவித்திட வேண்டும். இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசையும் தூக்கிவிட வேண்டும் என்ற இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தா். நேர்மையான மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே! இதனால்தான் அவர் கொலை செய்யப்பட்டார். அது எப்படி? ஏன் என்பதை விளக்கும் நூல். ஒவ்வொரு குடிமகனும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.**

## தமிழக சிறுபான்மையினர் வழிபாட்டுத்தலங்களில்...

# “வாஜ்பேய்” காலத்துக் கெடுபிடிகள் தொடக்கம்

சென்னை, பெசன்ட் நகர் பள்ளிவாசலில் கண்காணிப்புக் கேமரா வைக்கச் சொல்லி காவல் துறையினர் நிர்ப்பந்திக்கின்றனர் என்ற தகவல் கிடைத்து, நாம் பெசன்ட் நகர் பள்ளிவாசலுக்குச் சென்றோம்.

பெசன்ட் நகரில் இரண்டு பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அந்த இரண்டு பள்ளிவாசல் நிர்வாகிகளிடமும் நாம் இது சம்பந்தமாக பேசியபோது, அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லையென்று கூறிவிட்டனர். இந்த பதிலால் சோர்வடைந்த நாம் லுஹர் தொழுதுவிட்டு செல்லலாமென்று பெசன்ட் நகர் பேருந்து நிறுத்தத்தின் அருகிலுள்ள மஸ்ஜிதே ஹிதாயாவில் லுஹர் தொழுதுவிட்டு வெளியே வரும்போது ஒரு அன்பரிடம் பேச நேர்ந்தது. அவரிடம் இந்த கண்காணிப்புக் கேமரா சம்பந்தமாக விசாரித்தபோது, எனக்கு இந்த இடமல்ல. நான் நண்பனைப் பார்க்க வந்தேன். தொழுகை நேரமாகிவிட்டதால் தொழுதுவிட்டு செல்லலாமென்று இங்கு வந்தேன். என் நண்பன் என்னை அழைக்க இரு சக்கர வாகனத்தில் பேருந்து நிறுத்தம் வருவான். உங்கள் கேள்விகளை அவனிடம் கேட்டுப் பாருங்களென்றார்.

அவர் சொன்னதுபோல் பத்து நிமிடத்தில் அவர் அங்கு வந்தார். அவரை நமக்கு அறிமுகப்படுத்திய அந்த அன்பர், நம்முடைய அடையாள அட்டையை காண்பிக்கச் சொன்னார். நாமும் காண்பித்து விட்டு, கண்காணிப்புக் கேமரா சம்பந்தமான நம் கேள்விகளைக் கேட்டோம். ஆம், ‘அருகிலுள்ள போலீசார் இந்த மஸ்ஜிதின் உள்ளேயும், பெண்கள் பகுதியிலும் மற்றும் வெளியேயும் கண்காணிப்புக் கேமரா வைக்க நிர்ப்பந்தப்படுத்தியுள்ளனர். மஸ்ஜித் நிர்வாகத்தினர் இதை வெளியே சொல்ல அஞ்சுகின்றனர்’ என்றும் நம்மிடம் சொன்னார். மஸ்ஜித் நிர்வாகத்தினரின் அலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு மீண்டும் இது சம்பந்தமாக கேட்டபோது மறுபடியும் மறுத்தனர். ஆனால், அந்த நபரோ ஆணித்தரமாக இதைப் பலமுறை நம்மிடம் சத்தியமிட்டுச் சொன்னார். நம்மிடம் பொய் சொல்ல அவருக்கு எந்தத் தேவையுமில்லாத நிலையில் மஸ்ஜித் நிர்வாகத்தினரின் இந்தச் செயல் நமக்கு வியப்பாக இருந்தது. அவர்கள் அளவுக்கு மேல் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

கடைசியாக அங்கிருந்து கிளம்பிய நாம், உடனே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில், மஸ்ஜிதுகளில் கண்காணிப்புக் கேமரா வைக்க ஏதேனும் அரசாணை அல்லது சட்டம் அல்லது விதி அல்லது வேறு ஏதேனும் வகையில் அனுமதியளிக்கப்பட்டுள்ளதா அல்லது இது அருகிலுள்ள காவலர்களின்/ காவல் அதிகாரிகளின் நடவடிக்கையா? என்று கேள்வி கேட்டுள்ளோம். இன்னும் பதில் வரவில்லை. பதில் வந்த பிறகே இதன் உண்மை நிலை தெரியும். (அல்லாஹ் நாடியால்)

- நமது நிருபர் :
**ரிஸ்வான்**

# வழிபாட்டு உரிமையில் மிரட்டப்பட்ட திருமுருகன்பூண்டி முஸ்லிம்கள்

*திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அவினாசி கிழக்கு உள்வட்டம், ராக்கிபாளையம் கிராமம், திருமுருகன் பூண்டி பேரூராட்சிக்கு உட்பட்ட திருநீலகண்டர் வீதியிலுள்ள 8-158ல் உள்ள வாடகை கட்டிடத்தில் ரபிஃகுல் ஹக் என்பவர் கடந்த 7 ஆண்டுகளாக ஆயத்த ஆடைகள் தயார் செய்யும் தொழிலை நடத்தி வந்துள்ளார். கடந்த 7 ஆண்டுகளாக மேற்கண்ட கட்டிடத்தில் தன்னுடைய கம்பெனியில் வேலை பார்க்கும் சக ஊழியர்களோடு இஸ்லாமிய அடிப்படை கடமையான தொழுகையை தொழுது வந்துள்ளார்.*

### மாபெரும் குற்றம்

*பிறகு மேற்படி கட்டிடத்திலிருந்து 200 மீட்டர் தள்ளியுள்ள ஒரு இடத்தை (க.ச. எண். 533.1) ஒருவர் வக்ஃப் வாரியத்தற்கு தானமாக (பள்ளிவாசல் கட்டுவதற்காக) கொடுத்த இடத்தில் ஒரு சிறிய கட்டிடத்தை கட்டி அதில் தொழுது வந்துள்ளார்கள். இது தான் அவர்கள் செய்த மாபெரும் குற்றம்.*

### அ.தி.மு.க. கவுன்சிலரின் மிரட்டல்

*27.04.2014 அன்று காலை சுமார் 5 மணியளவில் வைகறை தொழுகை தொழுவதற்காக பள்ளிவாசலை திறக்கின்ற போது 6வது வார்டு அ.தி.மு.க. கவுன்சிலர் நடராஜ் தலைமையில் இந்து முண்ணணியினர் திரண்டு வந்து பள்ளிவாசலை திறக்க விடாமல் பிரச்சினை செய்து ரபிஃகுல் ஹக்கை மிரட்டல் விடுத்தனர். இத்துணை ஆண்டுகளாக அமைதியான முறையில் தம்முடைய கடமைகளை நிறைவேற்றி வந்த ரபிஃகுல் ஹக் அதிர்ந்து போய் 28.04.14 அன்று மாலை அனுப்பர்பாளையம் காவல்நிலையம் சென்று புகார் செய்தார்.*

### இந்து முன்னணியினரின் அராஜகம்

*புகாரை பெற்றுக் கொண்ட காவல்நிலைய ஆய்வாளர் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். ஆனால் மறுநாள் நடந்ததோ வேறு. 29.04.14 அன்று காலை 10 மணியளவில் இந்து முண்ணணியினர் திருமுருகன்பூண்டி பேரூராட்சி அலுவலகத்தினை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அதாவது, இந்திய அரசியல் சாசன சட்டத்தால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமையான வழிபாட்டு உரிமையை முஸ்லிம்களுக்கு மறுக்கக்கோரி போராட்டம் நடத்தினர். இதற்கு பிண்ணணியில் இருந்தது அ.தி.மு.க. கவுன்சிலர் நடராஜ் தான்.*

### அமைதிப் பேச்சு வார்த்தை

*29.04.14 அன்று மாலை திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் கோட்டாட்சியர், திருப்பூர் வடக்கு காவல் உதவி ஆணையர் ஆகியோர் முன்னிலையில் இரு தரப்பினரையும் (முஸ்லிம்களையும் இந்து முண்ணணியினரையும்) தனித்தனியே அழைத்து, அவர்கள் தரப்பில் கருத்துக்கள் கேட்கப்பட்டது. பின்னர், தற்போது எவ்விதமான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளும் ஏற்படக்கூடாது என அறிவுறுத்தி இரு தரப்பினரையும் 30.04.14 காலை 11 மணியளவில் இறுதிக் கட்ட பேச்சு வார்த்தையில் இறுதி முடிவு எட்டலாம் என தெரிவிக்கப்பட்டது. 29.04.14 அன்று இரவு காவல்துறை மூலம் சம்பவ பகுதியில் உரிய காவல் பாதுகாப்பு வழங்கப்பட்டு எவ்வித அசம்பாவிதங்களும் நிகழாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது.*

*30.04.14 அன்று மதியம் 12.30 மணியளவில் இரு தரப்பினரும், திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் திருப்பூர் வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் வடக்கு காவல் உதவி ஆணையர், அவினாசி வட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டு*

கீழ்க்கண்டவாறு முடிவுகள் எட்டப்பட்டன.

## தீர்மானங்கள்

*1.* மேற்படி பகுதியில் வசித்து வரும் மற்றும் தொழில் செய்து வரும் இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்த நபர்கள் மட்டுமே மேற்படி இடத்தில் தொழுகை செய்யும் இடமாக பயன்படுத்த வேண்டும்.

*2.* மேற்படி பகுதியில் தொழுகைக்கு வரும் நபர்களினால் அருகில் வசித்து வரும் பிற சமூகத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கு எவ்விதமமான இடையூறும் ஏற்படுத்தக்கூடாது.

*3.* மேற்படி பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் எவ்வித நடவடிக்கைகளும் இருக்கக்கூடாது.

*4.* மேற்படி நிலையே தொடர்ந்து அடுத்த இறுதி உத்தரவு எட்டப்படும் வரையில் தொடரும் என்றும், பின்னர் மேற்படி பகுதியில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களால் நேரடித் தணிக்கை செய்யப்பட்டு பொதுமக்களின் கருத்து பெறப்பட்டு அதன் அடிப்படையில் இறுதியான முடிவு செய்யப்படும்.

*5.* மேற்படி தீர்மானங்களுக்கு இரு தரப்பினரும் ஒப்புக் கொள்வது என்றும், இதற்கு எதிராக சட்டம் ஒழுங்கு பிரச்சினைக்கு காரணமான நபர்கள் மீது காவல் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## இந்து முண்ணணியின் ஒப்பந்த மீறல்

இரு தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டமேற்கண்ட தீர்மானங்களுக்கு இணங்க இரு தரப்பினரும் சுமூகமாக நடந்து கொள்வதாகவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படாமல் அமைதியாக இருப்பதாகவும் ஏகமனதாக ஒப்புக் கொண்டு இருதரப்பாரும் கையெழுத்திட தயாரானபோது முஸ்லிம்களை முதலில் அழைத்தனர். முஸ்லிம்கள் தரப்பில் பங்கேற்ற 12 பேரும் கையெழுத்திட்டனர். பிறகு இந்து முண்ணணியினரை அழைத்தனர். அவர்கள் கையெழுத்திட மறுத்து வெளியேறி விட்டனர்.

ஆனால் முஸ்லிம் தரப்பினர் இந்துத்துவவாதிகள் கையெழுத்திட மறுத்து வெளியேறியதை திருப்பூர் மாவட்ட கோட்டாட்சியர், வட்டாட்சியர், கிராம நிர்வாக அதிகாரி, வருவாய் ஆய்வாளர், காவல் துணை ஆணையர் ஆகியோரிடம் கையெழுத்து பெற்று அதனை பதிவு செய்தது எதிர் தரப்பாருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதுவரை எங்கெல்லாம் கலவரங்களை ஏற்படுத்தினார்களோ அங்கெல்லாம் இந்த இந்துத்துவவாதிகள் அமைதிப் பேச்சு வார்த்தை என்றால் அரசாங்கத்திற்கும் சரி இந்திய அரசியல் சாசன சட்டத்திற்கும் சரி இவர்கள் கட்டுப்பட்டதே கிடையாது என்பதற்கு இதுவும் ஒரு சான்று.

## வைகறை நிருபர் குழுவின் ஆய்வு

வைகறை குழுவினர் இந்த விஷயங்களை களத்தில் இறங்கி ஆராய்ந்த போது பல உண்மைகள் வெளிவந்தன. பொதுமக்கள் மத்தியில் இந்த பகுதியில் தொழுகை பள்ளி இருப்பது பற்றி கருத்து கேட்ட போது அங்கு பலசரக்கு கடை நடத்தி வரும் மூர்த்தி ஸ்டோர் உரிமையாளரின் மனைவி தவமணி கூறியதாவது, எங்களுக்கு வழிபட கோயில் தேவைப்படுவது போல அவர்களுக்கும் (முஸ்லிம்களுக்கும்) தொழுமிடம் தேவைப்படுவது சம உரிமை தானே? என்று நம்மிடம் கேள்வி எழுப்பினார். பிறகு ராம் என்ற பனியன் கம்பெனி தொழிலாளியிடம் கேட்ட போது, அவர் - வடமாநிலத்தவரை பணியில் அமர்த்தியதால் இந்த பிரச்சினை எழுகிறது, அவர்களின் ஆடை ஒழுங்கீனமாக உள்ளது என்றார்.

தொழிலாளி ராமின் கருத்து பற்றி ஆராய்ந்த போது நமக்கு கிடைத்த தகவல்கள். இந்த பகுதியில் 20 ஆயத்த ஆடை தொழில் நிறுவனங்கள் உள்ளன. அதில் 19 நிறுவனங்கள் இந்து சகோதரர்களால் நடத்தப்படும் நிறுவனங்கள். ஒரேயொரு நிறுவனம் தான் ரபிஃகுல் ஹக்கால் நடத்தப்படும் நிறுவனம். மொத்தமுள்ள 20 ஆயத்த ஆடை நிறுவனங்களிலும் வேலை பார்க்கும் வட மாநில தொழிலாளிகள் 250 பேர். இந்த 250 பேரும் முஸ்லிம்கள். இவர்களின் வழிபாட்டிற்காக ஒரு

*தலம் ஏற்படுத்துவது தவறா? உழைப்பை மட்டும் இவர்களிடம் உறிஞ்சிக் கொண்டு இவர்களின் வழிபாட்டுரிமையை மறுப்பது அருவருக்கத்தக்க அரசியலல்லவா?*

*சென்னையிலுள்ள தலைமைச் செயலகத்திலும் சரி மற்றும் பல அரசாங்க அலுவலகங்களிலும் நீதிமன்றங்களிலும் கூட முஸ்லிம்களுக்கென்று தொழுகை தலங்கள் உள்ளன என்பது பொது மக்கள் அணைவருக்கும் தெரியும் ஆனால் அறியும் திறன் இல்லாத இந்து முண்ணணியிருக்கும் அவர்களை வழிநடத்தும் அ.தி.மு.க. கவுன்சிலர் நடராஜீக்கும் தெரியாது போலும்.*

*இந்து முண்ணணியினரும் அ.தி.மு.க. கவுன்சிலரும் ஒரு வேளையாவது முஸ்லிம்களின் தொழுகை வழிபாட்டினை நின்று பார்த்தால் தான் தெரியும் தொழுகை என்பது பிறரை துன்புறுத்தும் விதமாக சீட்டியடித்துக் கொண்டும், ஆடல் பாடலோடும், கொட்டடித்துக் கொண்டும் நடப்பதல்ல. மாறாக தொழுகை என்பது மனிதர்கள் தங்களை படைத்த இறைவனை நினைவு கூரும் மிக அமைதியான செயலாகும்.*

*வடநாட்டு இளைஞர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக திருப்பூர் ஏற்றுமதி சங்க தலைவர் ராஜா ஷண்முகம் அவர்களின் கூற்று இங்கு நினைவு கூறத்தக்கது. அது என்னவென்றால் திருப்பூரை பொறுத்தவரை முதலீடு என்பது இங்கு பிரச்சினையேயல்ல ஆனால் நல்ல தொழிலாளர்கள் கிடைப்பது மிகவும் கடினம். வடநாட்டு இளைஞர்களை பொறுத்தவரை எந்த தொழிலாக இருந்தாலும் சரி எவ்வளவு கடினமாக இருந்தாலும் சரி குறைந்த சம்பளத்திற்கு வேலை பார்க்க ஒப்புக் கொள்கின்றனர். ஏனெனில் பீகார், மேற்கு வங்காளம் போன்ற அவர்களது மாநிலங்களில் இந்த குறைந்த சம்பளத்தை கூட பெறமுடியாது என்பது தான் உண்மை.*

## தீர்க்கப்பட வேண்டிய சந்தேகங்கள்

*1. கடந்த 7 ஆண்டுகளாக தொழுகை நடத்தி வந்த முஸ்லிம்களை திடீரென்று தொழ விடாமல் தடுப்பதற்கு தூண்டியவர்கள் யார்?*

*2. வழிபாட்டுரிமையை தடுத்து இந்திய அரசியல் சாசன சட்டத்தை மீறிய இந்து முண்ணணியினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அமைதி பேச்சு வார்த்தை என்று திசை திருப்பியது யார் திட்டம்?*

*3. அமைதி பேச்சு வார்த்தையின் போது இந்து முண்ணணியினரை கையெழுத்திட சொன்ன போது மாவட்ட வருவாய் அலுவலர் என்றும் பாராமல் அவரையே மிரட்டியவர்களை நடவடிக்கை எடுக்காமல் திருப்பூர் மாவட்ட காவல் ஆணையர் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது ஏன்-?*

*4. அமைதி பேச்சு வார்த்தை நடந்த ஓரிரு தினங்களில் அவிநாசியில் அனைத்துக் கட்சி கூட்டம் கூட்டப்பட்டு அதில் முஸ்லிம்களுக்கு திருமுருகன்பூண்டியில் தொழும் உரிமையை நிலை நாட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றிய போது அ.தி.மு.க. மட்டும் வெளியேறியது ஏன்?*

*5. சென்னை வண்ணாரப்பேட்டை பிரச்சினை உட்பட (பார்க்க வைகறை வெளிச்சம் பிப்ரவரி இதழ்) மாநிலத்தில் நடக்கும் எல்லா பிரச்சினைகளிலும் முஸ்லிம்களுக்கு எதிரான மனப்போக்கையே கைக்கொள்வது அ.தி.மு.க. இந்து முண்ணணியாக மாறி விட்டதா? அல்லது இந்து முண்ணணியினர் அ.தி.மு.க.வில் ஊடுருவியுள்ளார்களா? அல்லது இது தலைமை கழகத்தின் உத்தரவா?*

## உலக அரசியல் சாசனத்தின் எச்சரிக்கை

*இன்னும், அல்லாஹ்வுடைய மஸ்ஜிதுகளில் அல்லாஹ்வின் பெயரைச் சொல்லித் துதிப்பதைத் தடுத்து, இவற்றைப் பாழாக்க முயல்பவனை விட, பெரிய கொடுமைக்காரன் யார் இருக்க முடியும்? இத்தகையோர் அச்சமுடனன்றி பள்ளிவாயில்களில் நுழைவதற்கு தகுதியே இல்லாதவர்கள், இவர்களுக்கு இவ்(வுலக)வாழ்வில் இழிவுதான், மேலும், மறுமையில் இவர்களுக்குக் கடுமையான வேதனையும் உண்டு. (குர்ஆன்-2.114).*

- திருப்பூரிலிருந்து

**சிக்கந்தர் மற்றும் சிராஜ்**

# நிலையான அறங்களே ஏற்றமானவை

தொடர் - 22



## டாக்டர் யூசுப் அல் கர்ளாவி

***நா****ம்* யாருக்கு உதவி செய்தாலும் அதனுடைய பலாபலன் நீடித்திருக்கும்படி அமைந்திட வேண்டும். பலனடைவோரின் அளவு அதிகமாக இருந்திட வேண்டும். இதுவே அல்லாஹ்விடமும் அவனின் திருத்தூதரிடமும் மதிப்புப் பெறுகிறது. அவர்கள் விரும்புவதும் இதைத்தான்.

இதேபோல நீண்ட காலம் அதனுடைய பலாபலன் நிலைத்திருப்பதே அல்லாஹ்வுக்கும் அவனுடைய திருத்தூதருக்கும் மிகப் பிடிக்கும்.

ஒருவர் நம்மிடமிருக்கும் பால்தரும் மிருகத்தை (ஒட்டகம், ஆடு, மாடு) பசியோடும் பட்டினியோடும் கிடந்து போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு சில காலம் இரவலாகத் தந்து உதவலாம்.

சவாரிக்குத் தகுதியான தன் வாகனத்தை ஒரு போராளிக்கு இரவலாகத் தந்து உதவலாம். இதுபோன்ற உதவிகள் தனி நபருக்கு மட்டுமல்லாமல் அவரின் குடும்பத்தினருக்கும் அவரின் சமுதாயத்துக்கும் பலன் தருகிறது. பல ஆண்டுகள் வரைகூட இந்தப் பலன் கிடைத்துக் கொண்டேயிருக்கும்.

எனவேதான் இதுபோன்ற நீண்ட நாள் பலனைத்தரும் தர்மங்களும் உதவிகளும் சிறப்புக்குரியவையாகி விடுகின்றன.

'ஏழைக்கு மீனை உண்ணத்தருவதைவிட மீன் பிடிக்க உதவும் வலையை அன்பளிப்பாகத் தாருங்கள்' என்கிறது பிரபல சீனப் பழமொழி.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: "அல்லாஹ்வின் பாதையில் (போராடுபவருக்காக) நிழல் தருகின்ற ஒரு கூடாரம் அமைப்பதும் அல்லாஹ்வின் பாதையில் (போராடுபவருக்காக) வேலைக்காரரை இரவலாகத் தருவதும் அல்லாஹ்வின் பாதையில் (போராடுபவருக்காக) சவாரி செய்திடத் தகுந்த வாகனத்தை இரவலாகத் தருவதும் தர்மங்களில் மிகச் சிறந்தவையாகும்".

(நூல் : அஹ்மது, திர்மிதி)

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: நற்பண்புகள் நாற்பது இருக்கின்றன. அவற்றுள் ஒன்றைச் செய்வதால் கிடைக்கும் பலாபலனை நம்பியும் விரும்பியும் ஒருவர் அவற்றைச் செய்தால் அதற்காக அல்லாஹ் சுவர்க்கத்துக்குள் அனுப்பாமல் இருப்பதில்லை. அவற்றுள் மிக உயர்ந்தது (பசியோடும் பட்டினியோடும் போராடிக் கொண்டிருப்போருக்கு ஆடு, மாடு, ஒட்டகம் போன்ற) பால் தரும் மிருகத்தை இரவலாகத்

தருவதாகும்". (நூல் : புஹாரி, அபூதாவூத்)

எனவேதான் தொடர்ச்சியாக பலாபலன் களைத் தந்து கொண்டிருக்கும் (ஸதகத்துன் ஜாரியா) தர்மங்கள் சிறப்புப் பெறுகின்றன. தர்மம் வழங்கியவர் இறந்த பின்னரும்கூட அதன் பலாபலன்கள் இடையறாது தொடர்கின்றன அல்லவா?

தமது சொத்துக்களை அறப்பணிகளுக்காக ஒப்படைத்திடும் தூய சேவை முஸ்லிம்கள் நபி (ஸல்) காலத்திலிருந்தே அறிந்துவரும் பிரபலமான சேவையல்லவா? வக்ஃபு எனப்படும் இந்த சேவை இஸ்லாமிய நாகரிகத்தில் தனித்ததோர் மகத்துவத்தைப் பெறுகின்றது.

மனிதனாகப் பிறந்தோர் அனைவரின் தேவைகளும் எல்லாத் தேவைகளும் பூர்த்தி செய்யப்படும் அளவுக்கு இந்த வக்ஃபுகள் ஏராளமாகவும் தாராளமாகவும் எக்கச்சக்க மாகவும் இருந்தன.

சமூகம் பலனடையும்வண்ணம் எல்லாத் துறைகளையும் அளாவித் துளாவி நின்றன இந்த வக்ஃபுகள்.

இவை மனிதர்களின் நலனை மாத்திரமல்ல. மிருகங்களின் நலனையும் பேணிப் பாதுகாத்தன.

அண்ணல் நபி (ஸல்) கூறினார்கள்: "ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய செயல்கள் முடிந்து விடுகின்றன. (1) தொடர்ச்சியாக பலன் தரும் தர்மம் (2) இவர் மூலம் பிறர் பலன் பெறும் கல்வி (3) இவருக்காக பிரார்த்தனை செய்திடும் நல்ல குழந்தைகள். இம்மூன்றின் மூலம் கிடைத் திடும் நன்மைகள் இடை நிற்பதில்லை".

(நூல் : முஸ்லிம், அபூதாவூது)

ஸதகத்துன் ஜாரியா - தொடர்ச்சியான பலன்களைத் தந்திடும் தர்மம் என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு.

ஒரு நபி மொழியில் அவற்றுள் ஏழு நன்மைகள் கூறப்பட்டுள்ளன.

நபி (ஸல்) கூறினார்கள்: "இறை நம்பிக்கை யாளர் ஒருவர் இறந்த பின்னரும் அவருடைய செயல்களில் அவருடைய நன்மைகளில் அவருக்கு வந்து சேருபவை இவை: 1. அவர் கற்றுக் கொடுத்து பரப்பி வந்த கல்வி 2. அவர் வாரிசாக விட்டுச் சென்ற நல்ல குழந்தை 3. பிறருக்கு அவர் தந்த திருக்குர்ஆன் பிரதி 4. அவர் கட்டிக் கொடுத்த பள்ளிவாசல் 5. வழிப்போக்கர்களின் பயன்பாட்டுக்காக கட்டிய வீடு 6. ஓட வைத்த நதி 7. தான் ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது தன் செல்வத்திலிருந்து வழங்கிய தர்மம் இவை அவர் மரணித்த பின்னரும் அவரை வந்தடைகின்றன.

(நூல் : பைஹகீ, இப்னுமாஜா,
இப்னுஹுஃசைமா)

மனித வாழ்வு மிகக் குறுகிய காலமே. குறிப்பிட்ட காலம் மட்டும் வாழ்ந்திடும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள மனிதனுக்கு நீண்ட காலம் வாழ்ந்தால் எவ்வளவு நன்மை கிடைக்குமோ அவ்வளவு நன்மைகளை பெற்றிட நல்வாய்ப்பை வழங்கியுள்ளார் அல்லாஹ்.

ஒருவர் உயிருடன் வாழ்ந்த காலங்களில் அவர் செய்த நன்மைகளின் பலாபலன்கள் அவர் மரணித்த பின்னரும் தொடர்வதால் இறந்தும் வாழ்கிறார் அவர்.

அவருடைய உடலின் எந்தப் பகுதியும் மிஞ்சாத போதிலும் அவரின் அறங்களால் அவர் அழியாமலிருக்கிறார்.

கவிஞர் ஷவ்கீ அருமையாகச் சொன்னார்:

"மனிதனின் இதயத் துடிப்புக்கள்
அவனிடம் சொல்கின்றன
வாழ்க்கை சிலமணித் துளிகளே.
எனவே மரணித்த பின்னரும்
உன்னைப் பற்றிப் பேசிட எதையாவதுசெய்
ஏனெனில் ஒருவரின் சேவைகள் பேசப்படுவது
அவருக்குக் கிடைத்த இரண்டாவது வாழ்க்கை"

**(தொடரும்...)**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

தொடர் - 12



மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி M.A.,

**ப**ணத்தை வைத்து எல்லாவற்றையும் சமாளித்து விடலாம் என்று மக்களில் சிலர் நினைப்பதுண்டு. வாழ்க்கையின் சில சமயங்களில் பணம் அது இருந்தும் பலன் தர இயலாமல் போகும்.

நடுக்கடலில் தத்தளிக்கும் சமயத்திலும், ஆகாயத்தில் பறக்கும் பொழுது விமானத்தில் எச்சரிக்கை ஒலிக்கும் போதும், மருத்துவர்கள் ‘நாங்கள் எங்களால் முடிந்ததை செய்து விட்டோம். இனி இறைவனின் கைவசம் தான் உள்ளது’ என்று கூறும் போதும் மனிதனின் மனம் இறைவனிடமே அபயம் தேடும்.

‘இறைவனே இல்லை’ என்று மறுக்கும் நாத்திகர்கள் உட்பட மனிதனாகப் பிறந்த யாரும் இதற்கு விதிவிலக்கில்லை.

### மனிதனின் பரிதவிப்பும் இறைவனின் உதவியும்

உண்மையில், மனிதன் தனது செல்வமோ - செல்வாக்கோ பயனளிக்காது என்று ஆகும் சமயத்தில் இறைவனிடம் தான் தஞ்சமடைகிறான். வல்லோன் அல்லாஹ் திருக்குர்ஆனில் இப்படிக் குறிப்பிடுவான்.

“உங்களுக்கு தீமை ஏற்பட்டால் அவனிடமே நீங்கள் அபயம் அடைகிறீர்கள்.”

(அல்குர்ஆன் 16:53)

ஆம்..மனித சக்தி முடிவுறும் இடங்களில் தான் இறைவனின் வல்லமை மனிதனுக்கு புரிகிறது. அச்சமயத்தில் எப்படியாவது காப்பாற்றப்பட்டால் போதும், உதவி கிடைத்தால் போதும் என்ற எண்ணத்தில் இறைவனை எப்படியெல்லாம் வேண்ட முடியுமோ அந்த எல்லா முறைகளிலும் அவனிடம் முறையிட மனிதன் தயங்குவதில்லை.

படைத்த ஏக இறைவன் அல்லாஹ் கருணையாளன்; கருணையாளர்களுக்கெல்லாம் மிகக் கருணையாளன். ஆபத்தில் சிக்கித் தன்னிடம் உதவி கேட்பவர்களுக்கு அவன் உதவவே செய்கிறான். அல்லாஹ் கூறுகிறான்.

“(கஷ்டத்தில் சிக்கித் துடிதுடித்துக் கொண்டிருப்பவர்கள் அபயமிட்டழைத்தால் அவர்களுக்கு பதில் கூறி, அவர்களுடைய கஷ்டங்களை நீக்குபவன் யார்?.”

(அல்குர்ஆன் 27:62)

இது விஷயத்தில் உதவி தேடுபவன் தூய்மையான முறையில் தன்னை வணங்குபவனா? இணைவைப்பவனா? இறைவனே இல்லை என்று மறுப்பவனா? என்றெல்லாம் அல்லாஹ் பார்ப்பதில்லை. மாறாக கூக்குரலிட்ட அம்மனிதன் தனது ‘படைப்புகளில் ஒருவன்’ என்ற அடிப்படையில் உதவி செய்கிறான்.

அல்லாஹ்வுக்கு சிலைகளை இணையாக்கி வணங்கி வந்தவர்கள் மக்காவாசிகள்.

அவர்கள் கடல் பயணங்களில் ஆபத்து நேரிட்ட சமயங்களில் அதுவரை வணங்கி வழிபட்ட சிலைகளிடம் உதவி தேடாமல் அல்லாஹ்விடமே உதவி தேடுவார்கள். இது அவர்களின் வழக்கம்.

இவ்வாறு அவர்கள் உதவி தேடிய பல சமயங்களில் அல்லாஹ் உதவி செய்யவே செய்தான்.திருக்குர்ஆன் அதனை இவ்வாறு குறிப்பிடுகிறது.

"உங்களுக்கு கடலில் தீங்கு ஏற்பட்டால் அல்லாஹ்வைத் தவிர நீங்கள் (இறைவன் என்று) அழைத்துக் கொண்டிருந்த அனைத்தும் மறைந்து விடுகின்றன. (இறைவன் ஒருவன் தான் உங்கள் கண்முன் இருப்பவன்.) அவன் உங்களைக் கரையில் சேர்த்து பாதுகாத்துக் கொண்டாலோ (அவனை) நீங்கள் புறக்கணித்து விடுகிறீர்கள். மனிதன் மகா நன்றி கெட்டவன்."

(அல்குர்ஆன் 17:67)

இத்தகைய ஒரு சந்தர்ப்பம் டாக்டர் லாரன்ஸ் பிரௌன் வாழ்க்கையிலும் ஏற்பட்டது. அவரின் மகள் வாழ்வின் கடைசிக் கட்டத்தில் நின்றாள். சிகிச்கைகள் பயனற்றுப் போயின.

டாக்டர்கள் கைவிரித்தனர். இனி எங்களால் முடியாது, இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்றனர். இறைவனிடம் உதவி தேடினார் லாரன்ஸ். உதவி கிடைத்தது. உண்மையான இறைவனை தேடினார். இஸ்லாத்தை ஏற்றார்.

**டாக்டர் லாரன்ஸ் பிரௌன் (Dr. Laurence B. Brown (1959)**

அமெரிக்காவைச் சேர்ந்தவர் டாக்டர் டாக்டர் லாரன்ஸ் பிரௌன் (பிறப்பு 1959). கண் மருத்தவரான இவர் அமெரிக்க விமானப் படையில் இருபது ஆண்டுகள் டாக்டராக பணிபுரிந்துள்ளார்.

செல்வ செழிப்புடன் வாழ்ந்த லாரன்ஸ் பிறப்பில் கிறிஸ்தவர். எனினும் அவர் இறைவனை நம்பியதில்லை. நல்ல சம்பளத்தில் வேலை, மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை, சகல வசதிகளும் கொண்ட பண்ணை வீடு, இரண்டு கார்கள் என ஆனந்தமாக வாழ்ந்த லாரன்சுக்கு இறைவன் அப்போது தேவைப் படவும் இல்லை எனலாம். ஆம். பொருள் முதல்வாத (Materialism) வாழ்க்கையில் முழுமையாக மூழ்கிக் கிடந்தார் அவர்.

1990ம் ஆண்டு அவரின் இரண்டாவது மகள் ஹன்னா பிறந்த சமயத்தில் அவரின் வாழ்க்கையில் புயல் வீசியது. ஹன்னா குழந்தைகள் நல மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந் தாள். அவளின் இருதயத்தில் இருந்து இரத்தம் வெளியேறும் குழாயில் அடைப்பு இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மார்பு அறுவை சிகிச்சை செய்தாலும் உயிர் வாழ்வது மிக அரிது என்று டாக்டர்கள் கைவிரித்தனர். மருத்துவர் என்ற முறையில் அவருக்கு இது தெரிந்த ஒன்று தான்.

ஆதலால் பயந்தே போனார் லாரன்ஸ். கலங்கிப் போயிருந்த அவருக்கு மருத்துவர்கள் சொன்ன வாசகம் நினைவுக்கு வந்தது. கடவுள் நாடினால் உங்களின் குழந்தையை காப்பாற்றலாம் என்பதே அவ்வாசகம்.

உடனே மருத்துவமனையில் இருந்த வழிபாட்டு அறை (Prayer Room)யில் நுழைந்தார். வாழ்க்கையில் முதன்முதலாக முழங்காலிட்டு அமர்ந்து பிரார்த்தனை செய்தார். உணர்வுப்பூர்வமாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் இறைவனிடம் மன்றாடினார்.

இறைவனிடம் மன்றாடிய அவர், கடைசியில் இப்படிச் சொன்னார். இறைவன் என்று ஒருவன் இருந்தால் அவன் எனது மகளைக் காப்பாற்றினால், அவனின் வழிகாட்டலை முழுமையாக பின்பற்றி நடப்பேன்.

சுமார் பத்து - பதினைந்து நிமிடங்கள் கழிந்திருந்தன. அறையை விட்டு வெளியே

வந்தார். இறுகிய மனதுடனும் - கவலைப் பட்ட முகத்துடனும் மகள் அனுமதிக்கப் பட்ட அறைக்கு வந்தார் லாரன்ஸ்.

லாரன்சை கண்டதும் அங்கே நின்றிருந்த மருத்துவர் கேட்டார். எங்கே சென்றிருந் தீர்கள் லாரன்ஸ்? தொடர்ந்து மருத்துவர் சொன்னார். உங்களின் குழந்தைக்கு பிரச்சினை சரியாகி விட்டது. அதிசயமான முறையில் இருதய அடைப்பு சரியாகி உள்ளது. இனி பிரச்சினை இல்லை. அறுவை சிகிச்சை தேவையில்லை.

இதனை இறைவன் தந்த அருளாகவே பார்த்தார் லாரன்ஸ். ஆதலால், இறைவ னுக்குத் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற முடிவெடுத்தார் அவர். யூத மத நூல்கள், கிறிஸ்தவ மத நூல்களை ஆய்வு செய்தார்.

இறுதியில் திருக்குர்ஆனைப் படித்தார். இஸ்லாமே உண்மையான இறைவனை வணங்கிட வழிகாட்டும் மார்க்கம் என்பதை கண்டறிந்தார். இஸ்லாத்தை ஏற்றார்.

**நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?**

இஸ்லாத்தை ஏற்றது குறித்து லாரன்ஸ் பிரௌன் கூறியதாவது, அது 1990ம் ஆண்டு நடந்த சம்பவம். அப்போது எனது இரண்டாவது மகள் ஹன்னா பிறந்திருந்தாள். மற்ற குழந்தைகளைப் போன்று அவளின் நிலைமை இல்லை. பிறந்தவுடனே அவள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட் டிருந்தாள்.

இருதயத்தில் இருந்து இரத்தம் வெளியேறும் குழாயில் அவளுக்கு பிரச்சினை ஏற்பட்டிருந்தது. இது மருத்துவ உலகில் மிகவும் அரிதான ஒன்று.

இதனைக் கேள்விப்பட்ட நான் அதிர்ந்தே போனேன். எவ்வளவு செலவானாலும் மகளைக் காப்பாற்றி விடவேண்டும் என்று முடிவெடுத்தேன்.

வாஷிங்டன்னில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனையில் இருந்து இருதய அறுவை சிகிச்சை நிபுணர் வரவழைக்கப்பட்டார்.

குழந்தையை பரிசோதித்த அந்நிபுணர் சொன்ன வார்த்தை எனக்குப் பேரிடியாக விழுந்தது. அறுவை சிகிச்சை செய்தாலும் குழந்தை உயிர் பிழைப்பது கடினம். அவ்வாறு பிழைத்தாலும் நீண்ட நாட்கள் வாழ்வதற்கு சாத்தியமில்லை என்றார் அவர்.

நான் அதிர்ச்சியில் உறைந்து போனேன். எனது நிலைமையைப் பார்த்த அவர் கடைசியில் சொன்னார். "இறைவனிடம் வேண்டுங்கள். சிகிச்சை பயனளிக்கலாம்."

வாழ்க்கையில் முதன் முதலாக அப்போது தான் இறைவனைப் பற்றி கேள்விப்பட்டதாக உணர்ந்தேன். என்னைப் பொருத்தவரை அமெரிக்க விமானப் படையில் கண் மருத்தவராக வேலை பார்த்து வந்தேன். நிறைவான சம்பளம். அழகிய மனைவி, குழந்தை, பெரிய பண்ணை வீடு, இது கடையா? வீடா? என்று கேட்குமளவுக்கு ஏராளமான வீட்டு உபயோகப் பொருட்கள், விளையாட்டுச் சாமான்கள் என நிறைவான வசதிகளுடன் வாழ்ந்தேன்.

தெளிவாக கூறுவதெனில், பொருள்முதல் வாதத்தின் மோகத்தில், உலக சுகபோகத்தில் மூழ்கிக் கிடந்தேன் எனலாம்.

ஆதலால், வாழ்க்கையில் எனக்கு இறைவனின் தேவை ஏற்படடதில்லை. வேலைப் பார்ப்பதால் பணம் வருகிறது. பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்றே கற்பனை செய்திருந்தேன். மொத்தத் தில் இறைவனை நம்பாத நாத்திகனாக நான் வாழ்ந்திருந்தேன்.

இப்போது எனது மகளின் விஷயத்தில் பணம் தோற்றுப் போனது. மருத்துவ உலகமும் கைவிரித்து விட்டது. மருத்துவரே இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்கிறார். வேறு வழியின்றி மருத்துவமனை யில் இருந்த பிரார்த்தனை அறையினுள் நுழைந்தேன்.

**எனது வேண்டுதலும் இறைவனின் உதவியும்**

வாழ்க்கையில் முதன்முதலாக இறைவனின் முன்பு முழங்காலிட்டு அமர்ந்தேன். கைகளை உயர்த்தி, மனதில் இறைவனை வேண்டினேன். இறைவன் என்று ஒருவன் உண்மையில் இருந்தால், உண்மையான அந்த இறைவனே! எனது மகளை காப்பாற்றுவீராக!

உள்ளத்தை ஒருமைப்படுத்தி வேண்டிய அத்தருணத்தில் என்னையும் அறியாமல் அழுகைப் பீறிட்டது. கதறி அழுதேன்.

கடைசியில் எனது மனதில் சொன்னேன். எனது மகளைக் காப்பாற்றினால், இறைவனே! உமக்காக என்னை அர்ப்பணிப்பேன்.

இப்படியே பத்து பதினைந்து நிமிடங்கள் கழிந்திருந்தன. மீண்டும் நினைவுக்கு வந்தேன். பிரார்த்தனை அறையை விட்டு வெளியேறி எனது மகளின் சிகிச்சை அறைக்கு வந்தேன்.

அங்கு எனக்கு அதிர்ச்சி காத்திருந்தது. என்னை எதிர்பார்த்திருந்த சிறப்பு மருத்துவ நிபுணர் என்னிடம் கேட்டார். எங்கே சென்றிருந்தீர்கள் லாரன்ஸ்? உங்களைத் தான் தேடிக் கொண்ருந்தோம். உங்களின் மகளின் இருதய அடைப்பு தானாக சரியாகி விட்டது. எங்களின் பரிசோதனையில் இது தெரிய வந்துள்ளது.

மருத்துவர் மருத்துவ அடிப்படையில் அதற்கு சில விளக்கங்கள் தந்தார். எனினும் என்னைப் பொருத்தவரை எனது வேண்டு தலுக்கு இறைவன் பதிலளித்துள்ளார் என்றே நம்பினேன்.

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பி பின்பு இரண்டு வருடத்திற்குள் அறுவை சிகிச்சையோ, மருந்து - மாத்திரைகளோ இன்றி முழுமையாக குணமடைந்தாள் எனது மகள். மற்ற குழந்தைகளைப் போன்று நன்கு வளரவும் செய்தாள்.



**உண்மையான இறைவனைத் தேடி எனது ஆராய்ச்சி**

சரியாக நான்கு வருடங்கள் கழிந்திருந்தன. இறைவனுக்கு நான் தந்த வாக்குறுதியை நிறைவேற்ற தயாராகவே இருந்தேன். எனினும் அதில் நான் தோற்றுத் தான் போனேன்.

ஏனெனில், உண்மையான இறைவனைத் தேடி நான் யூத மத வேத நூலான தோரா (பழைய ஏற்பாடு) மற்றும் யூத மத நூல்களை படிக்கவே செய்தேன். என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அதற்கு பிறகு கிறிஸ்தவர்களின் பைபிளை யும், கிறிஸ்தவ மத நூல்களையும் படித்தேன். அவற்றினுள் உண்மையை என்னால் கண்டறிய முடியவில்லை.

சத்தியத்தைத் தேடி பல சர்ச்சுகளுக்கு சென்று போதனைகளைக் கேட்டேன்.

அமெரிக்காவில் உள்ள ரோமன் கத்தோலிக்க ஆலயங்களில் நீண்ட நேரம் செலவிட்டுள்ளேன். எனினும் கிறிஸ்தவத்தை என்னால் தழுவ இயலவில்லை. ஏனெனில், கிறிஸ்தவத்தின் பல்வேறு பிரிவுகளின் போதனைகள் பைபிளில் நான் படித்தவற்றுடன் ஒத்துப் போகவில்லை.

### மோசஸின் வழியில் மூன்று இறைத்தூதர்கள்

யூத நூல்களில் நான் படித்திருந்தேன். இறைத்தூதர் மோசஸை (அரபியில் மூஸா நபி) மூன்று இறைத்தூதர்கள் பின்பற்றுவார்கள் என்று.

இயேசு கிறிஸ்து (ஈஸா நபி), திருமுழுக்கு யோவான் (John the Baptist - அரபியில் யஹ்யா நபி) ஆகியோரே இரண்டு நபர்கள். மூன்றாவது நபர் யாரென்று தெரியாமல் இருந்தது. பைபிளை படித்த பொழுது தெரிந்து கொண்டேன். இயேசு கிறிஸ்துவே பைபிளில் இறுதி இறைத்தூதரை பின்பற்றுவது தொடர்பாக கூறியுள்ளார்.

இயேசுவுக்கு பின்பு இறைத்தூதர் ஒருவர் உள்ளார் என்பது மட்டும் எனக்கு தெரிந்திருந்தது. அதற்கு மேல் எதுவும் எனக்கு தெரியவில்லை.

### சத்தியத்தை அறிந்தேன் இஸ்லாத்தை ஏற்றேன்

பிரபல இங்கிலாந்து அறிஞர் மார்ட்டின் லிங்க்ஸ் (1909 - 2005). 1940ம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்ற இவர், 1983ம் ஆண்டு முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் நூலாக எழுதினார்.

Muhammad: His Life Based on the Earliest Sources <http://books.google.com> என்ற பெயரில் வெளிவந்த அந்நூலே ஆங்கிலத்தில் முஹம்மது (ஸல்) அவர்களின் முழுமையான வாழ்க்கை வரலாறு குறித்து வெளிவந்த முதல் நூலாகும்.

தற்செயலாக இந்நூல் எனது கைகளில் கிடைத்தது, படித்தேன். பைபிளில் வாக்களிக்கப்பட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே என்பதை புரிந்து கொண்டேன்.

அந்நூலைப் படித்த பிறகு திருக்குர்ஆனைப் படித்தேன். இறைத்தூதர்களை தொடர்ந்து இறைவன் அனுப்பி இருப்பதை அறிந்தேன்.

மோசஸையும், இயேசுவையும் அனுப்பிய இறைவன் தான் முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் இறைத்தூதராக அனுப்பியுள்ளான் என்பதை தெரிந்து கொண்டேன்.

மேலும், 'இறைவன் ஒருவன்' என்பதில் இஸ்லாம், முந்தைய யூத - கிறிஸ்தவ மதங்களைக் காட்டிலும் தனித்துவத்துடன் திகழ்வதை அறிந்து கொண்டேன்.

இறைவனின் ஏகத்துவம், முஹம்மது (ஸல்) அவர்களின் தூதுத்துவம், இஸ்லாத்தின் கொள்கைகள் ஆகியவற்றினால் கவரப் பட்டேன். இஸ்லாம் தான் இறைவனின் உண்மையான மார்க்கம் என்பதை நம்பத் தொடங்கினேன். இஸ்லாத்தை ஏற்றேன்.

### எனக்கு ஏற்பட்ட சோதனைகள்

இஸ்லாத்தை ஏற்ற பிறகு எனது சொந்த வாழ்க்கையில் புயல் வீசியது. நான் இஸ்லாத்தை ஏற்றதை எனது மனைவியால் தாங்க இயலவில்லை.

என்னிடம் இருந்து விவாகரத்து கேட்டு கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தாள். கோர்ட்டில் நான் அடித்து துன்புறுத்தினேன் என்று கூறி விவாகரத்துக் கேட்டாள். ஆனால், உண்மையில், நான் மனைவியை அடிப்பவன் அல்ல..

நீதிமன்றம் விவாகரத்து வழங்கியது. எனது இரண்டு குழந்தைகளையும் தன்னுடன் அவள் எடுத்துக் கொண்டு போனாள். மேலும் நீதிமன்றத்தில் 100 வருடங்களுக்க ஜீவனாம்சம் வேண்டுமென்று வாதிட்டாள். நீதிமன்றமும் இசைந்தது. ஜீவனாம்சமாக எனது வீடு, இரண்டு கார்களையும் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக் கொண்டாள்.

இதற்கெல்லாம் மேலாக இன்னொரு அநியாயமும் எனக்கு நடந்தது. அது, வாரத்தில் ஒரு நாள் எனது மகள்களை நான் பார்க்கும் சமயத்தில் அவர்களை நான் அடித்து துன்புறுத்தி விடக்கூடாது என்பதற் காக பாதுகாப்பு அதிகாரி ஒருவரை நியமிக்கும்படி நீதிமன்றம் எனக்கு கூறியிருந்த தாகும். என்னமோ மனிதர்களை அடித்து துன்புறுத்தும் கொடுமைக்காரன் போன்று நான் சித்தரிக்கப்பட்டிருந்தேன்.

எந்த பிள்ளையை காப்பாற்றும்படி இறைவனிடம் மன்றாடி உதவியைப் பெற்ற தால் உண்மையான இறைவனை ஏற்றானோ அந்தப் பிள்ளை இப்போது என்னுடன் இல்லை. எனது நெஞ்சம் கவலைகளால் கசங்கிப் போனது.

அத்துடன் எனக்கு இன்னொரு சோதனை யும் வந்தது. அது என்னை ஈன்றெடுத்த தாய் - தந்தையர்கள் என்னை வெறுத்ததாகும். நான் இஸ்லாத்தை ஏற்றதால் அவர்கள் என்னை விலக்கி வைத்தனர். ஒருமுறை அவர்களிடம் இருந்து எனக்கு கடிதம் வந்தது. இனி அவர்களை நான் பார்க்கக் கூடாது என்று. முழுமையாக குடும்ப உறவற்று அநாதை யாகிப் போனேன்.

நான் இஸ்லாத்தை ஏற்ற சமயத்தில் அமெரிக்க விமானப்படை மருத்துவராக 20 வருடங்களை பூர்த்தி செய்திருந்தேன். இஸ்லாத்தை ஏற்ற பிறகு அமெரிக்க ராணுவத்தில் ஒரு முஸ்லிமாக என்னால் பணியாற்ற இயலவில்லை. மனசாட்சி என்னை கொன்று போட்டது. பதவியை ராஜினாமா செய்தேன்.

மனைவி - பிள்ளைகளை இழந்தேன். வீடு வாசல்களை இழந்தேன். வாகனங்களை இழந்தேன். சொந்தங்களை இழந்தேன். நண்பர்களை இழந்தேன். கடைசியில் வேலையையும் இழந்து நின்றேன். பெரிய பண்ணை வீட்டில் வசித்த நான் குறுகலான ஏணிப் படி கொண்ட அறைகள் ஏதுமற்ற சின்ன வீட்டில் வசித்தேன். எல்லாவற்றையும் உண்மையான அந்த இறைவனுக்காக பொறுத்தேன்.

### இறைவனின் உதவி

இஸ்லாத்தை ஏற்றதால் மனைவி - பிள்ளைகளை இழந்தேன். அல்லாஹ் என்னை கைவிடவில்லை. மிக நல்லதொரு குணவதியை அல்லாஹ் எனக்கு இரண்டாவது மனைவியாக தந்தான். அவள் மூலமாக அழகிய பெண் குழந்தையும் எனக்குப் பிறந்தாள்.

நான் வீடு- வாசலை இழந்தேன். எனினும் அல்லாஹ் என்னை கைவிடவில்லை. உலக முஸ்லிம்களால் மிகவும் விரும்பப்படும் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நகரான மதீனா மாநகரில் எனக்கு அல்லாஹ் வீட்டை தந்தான்.

உலகின் மிக அழகிய நகரங்களான வியன்னா, சூரிச், வான்கூவர், ஜெனிவா, சிட்னி போன்ற நகரங்களை விட சிறந்த நகரம் அது. ஏனெனில், அந்நகரில் தஜ்ஜால் நுழைய இயலாது என அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

### இயேசு அன்னிய பெண்களை தொட்டாரா?

இஸ்லாத்தை ஏற்ற பிறகு அதுவரை என்னுடன் பழகி வந்த எனது நண்பர்கள் என்னை விட்டு பிரிந்தனர். அதற்கு அவர்கள் சொன்ன காரணம். நான் நடன விடுதிகளுக்கு செல்வதில்லையாம், மது அருந்துவதில்லை யாம், தோழிகளுடன் கைகுலுக்குவதில்லை யாம். இது தான் அவர்கள் என் மீது வைக்கும் குற்றச்சாட்டு.

நான் கேட்கிறேன். இயேசு எங்காவது நெருங்கிய குடும்ப உறுப்பினர் அல்லாத அன்னிய பெண்களுடன் கைகுலுக்கியுள் ளாரா? பைபிளில் எங்காவது அப்படி ஒன்று நடந்திருப்பதாக காட்ட முடியுமா? நான் சவாலாக கேட்கிறேன்.

இன்றும் ஆர்த்தோடக்ஸ் யூதர்கள் அன்னிய பெண்களுடன் கைகுலுக்குவதில்லை. இயேசுவும் ஆர்த்தோடக்ஸ் மதகுருவைப் போன்றே வாழ்ந்துள்ளார். இதுவே உண்மை. கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொண்டு இவர்கள் யாரை பின்பற்றுகிறார்கள்?

எனக்கு இந்நண்பர்கள் பிரிந்தாலும் இவர்களை விட எல்லா வகையிலும் சிறந்த நண்பர்களை அல்லாஹ் தந்துள்ளான். உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் எனக்கு தோழர்களாகவும், சகோதரர்களாகவும் ஆகிவிட்டனர். அல்லாஹ் போதுமானவன்.

**இஸ்லாத்தை ஏற்பவர்களுக்கு..**

இஸ்லாத்தை ஏற்பவர்களுக்கு நான் கூறுகிறேன். "நீங்கள் நினைப்பது போன்று இஸ்லாம் ஒன்றும் இலகுவான மதம் அல்ல..முஸ்லிமாகி விட்டு எப்படி வேண்டுமானாலும் வாழ்ந்து கொள்ளலாம் என்று இஸ்லாம் அனுமதிக்காது.

மாறாக ஒருவன் இஸ்லாத்தை ஏற்ற பிறகு அவனிடம் சில அர்ப்பணிப்புகளை இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. 24 மணி நேரத்தில் பகலில் - இரவில் ஐந்து நேரம் தொழ வேண்டும். வருடத்தில் ஒரு மாதம் பகலில் உண்ணாமல் - பருகாமல் நோன்பிருக்க வேண்டும். நல்ல வழியில் ஈட்டிய பணத்தை சதகா - ஜகாத் கொடுக்க வேண்டும்.

பாலைவன நாடான சவூதி அரேபியாவில் உள்ள மெக்கா நகருக்கு ஹஜ் யாத்திரை செல்ல வேண்டும். அது ஒன்றும் பிரான்சின் ரிவிய்யா நகரம் அல்லது கரீபியன் தீவு போன்று சுற்றுலா நகரம் அல்ல."

தற்போது இஸ்லாமிய பிரச்சாரப் பணி செய்து வரும் இவர் மூன்று நூல்களை எழுதியுள்ளார். அவை,

1.The First and Final Commandment <http://www.amazon.com> by Laurence B. Brown

2.MisGod'ed: A Roadmap of Guidance and Misguidance in the Abrahamic Religions <http://www.amazon.com/MisGoded-Guidance-Misguidance-Abrahamic-Religions> by Laurence B. Brown

3.The Eighth Scroll <http://www.amazon.com/The-Eighth-Scroll-Laurence-Brown> by Laurence B. Brown ❖


## கல்விக் கடன் உதவி பெற....

கல்விக் கடன் மற்றும் கல்வி உதவி (Scholorships) ஆகியவற்றின் ஆலோசனை மற்றும் உதவிக்கு ஜனாப். K.M.ஹஸன் ஷேக் - துணைப் பொதுச் செயலாளர், இஸ்லாமிய இலக்கியக் கழகம் அவர்களை அணுகலாம்.

முகவரி

16, கங்கை அம்மன் கோவில் தெரு,
ராயப்பேட்டை, சென்னை-14.
போன் : 94444 58715

# வெளிநாட்டு கல்விகள்

பைசல்கான் B.E.,

"என் இறைவனே என்னுடைய கல்வி ஞானத்தை மென்மேலும் அதிகப்படுத்துவாயாக!" என்கிறது திருக்குர் ஆனின் தாஹா அத்தியாயத்தின் 114 வது வசனம்.

அல்லாஹ்வே எனக்கு நீ கற்றுக் கொடுத்த கல்வியை கொண்டு எனக்கு பலன் தா. எனக்கு பலன் தருவதை எனக்கு கற்றுக் கொடு. கல்வியை எனக்கு அதிகரித்து கொடு என்கிறது ஒரு நபி மொழி (இப்னு மாஜா).

கல்வியை கற்கவும் அதை அதிகரித்திடும் முயற்சியிலும் நாமும் முனைப்பு காட்ட வேண்டும். நம் நாட்டில் நாம் விரும்பும் கல்வியை பெற வாய்ப்பில்லை எனில் வெளி நாடுகளுக்கு சென்றும் கல்வி கற்கலாம். இதற்கான வாய்ப்புகள் இருக்கவே செய்கின்றன. இதை பற்றிய விபரங்களை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே வெளி நாடுகளில் என்னென்ன கல்விகள் கிடைக்கின்றன என்பதை பற்றிய சிறு குறிப்பை இங்கே தருகின்றோம்.

1. Associate Degree Nursing மற்றும் Post MD program For MBBS சம்பந்தப்பட்ட கல்விகளை American International Medial University வழங்குகின்றது. இங்கே சேர விரும்புவோர் அசோக் நகர் (சென்னை) துர்கா காம்ப்ளெக்சில் உள்ள நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

2. மேலாண்மை குறித்தக் கல்விகளை Singapore Management University பயிற்றுவிக்கின்றது. உதாரணமாக PHD in Business (General Management), Master of Science in Wealth Management.

3. International Business (With Specialization in Export Management), International Migration and Social Cohesion போன்ற இரண்டு ஆண்டு கல்விகள் University of Lativia -வில் கற்றுத் தரப்படுகின்றன

4. நியூயார்க் நகரில் உள்ள Monroe கல்லூரியில் Sports Management இல் BBA-வும், Master of Public Health, Master of Criminal Justice போன்ற கல்விகளும் கற்றுத் தரப்படுகின்றன

5. Master Studies மற்றும் PhD சம்பந்தப்பட்ட கல்விகளை ஜெர்மனியில் உள்ள DAAD கல்வி நிறுவனம் வழங்கு கின்றது. இதை பற்றிய விபரங்களை இவர்களின் இணைய தளங்களில் சென்று அறியலாம்.

6. நெதர்லாந்தில் உள்ள Maastricht University-JZ Psychology மற்றும் neuroscinece குறித்த கல்விகள் போதிக்கப்படுகின்றன.

7. Audio Production, Film Production, Animation/Visual Effects, Games Design/Programming போன்ற மீடியா சம்பந்தப்பட்ட கல்விகளை SAE Institute என்ற கல்வி நிறுவனம் Australia, UK,USA,Europe போன்ற நாடுகளில் வழங்குகின்றது.

8. Limra Overseas Educational Consultant என்ற நிறுவனம் மாணவர்கள் வெளிநாடுகளில் கல்வி பெற கடந்த பத்து ஆண்டுகளாக உதவி புரிகின்றது. கிட்டத்தட்ட 200 வெளி நாடு பல்கலைகழகங்களுடன் தொடர்பை கொண்டுள்ள இந்நிறுவனம் மாணவர்களுக்கு இலவசமாக கலந்தாலோசனைகளையும் செய்கின்றது. மாணவர்களின் வேண்டுதலின் பேரில் பிரயாண மற்றும் தங்கும் வசதிகளையும் இவர்கள் செய்து தருகிறார்கள்.

9. Netherlands Organization for International Cooperation in higher Education என்ற நிறுவனத்தின் வழியே Health Care, Social Services and Care Services குறித்த கல்விகளை பெறலாம்.

பலன் தரும் கல்வியை கற்று நாம் பயன் அடைவதோடு பிறரையும் பயனடைய செய்ய நமக்கு இறைவன் உதவி புரிந்திடுவனாக... ❖

**முஸ்லிம்களின் வீழ்ச்சியால்
உலகம் இழந்ததென்ன?**

# நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் ஆட்சிக்காலம் நல்லதோர் நாகரிகத்தின் முன்னோடி

**அறிஞர் அபுல்ஹசன் அலீ நத்வி** 30 மொழிபெயர்ப்பு : **அஹமது ஜலாலுத்தீன் நத்வி**

**ஆ**ம். அப்படித்தான் இருந்தது. நேர்வழியில் நின்று ஆட்சி நடத்திய கலீஃபாக்கள் ஆட்சிக் காலத்தைப் போல வனப்பும் வளமும் நிறைவும் கொண்ட ஆட்சியை வரலாற்றில் எங்கும் நாம் அறிய முடியவில்லை. இதன் அருகில் கூட வரமுடியவில்லை இதர ஆட்சி முறைகளால்.

கலீஃபாக்களிடமிருந்த ஆன்மபலம், ஒழுக்க வலிமை, மார்க்கப்பற்று, அறிவாற்றல், பௌதீக சாதனபலம் (உலகக் கருவிகள்) இவற்றின் துணையுடன் முழுமையான மனிதப் பண்புகளைக் கொண்ட தலைமுறை உருவானது. நல்லதோர் நாகரிகமும் உருவானது.

கலீஃபாக்களின் அரசு உலகின் மிகப்பெரும் அரசுகளுள் ஒன்றாக விளங்கிற்று. சம காலத்திலிருந்த வலிமைமிக்க எல்லா சக்திகளையும் விஞ்சி நின்றிடும் அரசியல் வலிமை பெற்ற அரசாக அது திகழ்ந்தது.

அந்த ஆட்சியில் (மனிதர்கள் அரசுக்கு தலைமை ஏற்கவில்லை) மிக்குயர்ந்த நற்பண்புகளே தலைமையேற்றிருந்தன. அரசமைப்பிலும் மக்களின் அன்றாட வாழ்விலும் ஓம்பப்படும் உயர் ஒழுக்க விழுமங்களே அளவுகோல்களாகத் திகழ்ந்தன.

அந்த ஆட்சியில் வியாபாரமும் தொழில் துறையும் வளம் பெற்றது மாத்திரமல்லாமல் ஒழுக்கமும் பண்பாடும் தலைசிறந்து நின்றது.

ஒரு நாடு தனது வெற்றிகளின்மூலம் தன்னுடைய நிலப்பரப்பை விரித்துக் கொள்ளும்போதும் அதனுடைய நாகரிகங்கள் செழுமையடையும் போதும் குடிமக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப குற்றங்களுக்கான காரணங்களும் அதற்கான வாய்ப்புகளும் அங்கே அதிகரிக்கவே செய்யும். இதற்கெல்லாம் விரிந்து வியாபித்த போதிலும் குற்றங்கள் குறைந்தன. ஆன்மிக உணர்வும் நல்லொழுக்கமும் பீடு நடை போட்டன.

அங்கே தனிமனிதர்களுக்கிடையேயான தொடர்புகளும் தனிநபருக்கும் ஒரு சமுதாயத்துக்குமிடையிலான தொடர்பும் அழகாகவே இருந்தது. இது முழுமையான குறைகளற்ற அரசு.

இதைவிட உயர்ந்த அரசை கனவில்கூடக் காணமுடியாது. இதைவிட வளமான அரசை கவிஞன்கூடக் கற்பனை செய்திட முடியாது.

இந்த சாதனை எப்படிச் சாத்தியமாயிற்று? ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதோடு நாகரிகத்தையும் விழிப்போடு கண்காணித்துக் கொண்டிருந்த மேன்மைமிக்க மாமனிதர்களின் (கலீஃபாக்களின்) அழகிய நன்நடத்தையால்தான் இந்த சாதனை நிகழ்ந்தது. அவர்கள் நம்பிய கொள்கையும் அவர்கள் பண்பட்ட

செயல்களும் அரசியல், அதிகாரம் இரண்டை யும் அவர்கள் திட்டமிட்டு நடத்திய விதமும் தான் இந்த சாதனை ஏற்படக் காரணம்.

அவர்கள் மார்க்கப்பற்றுக்கும் உயர்ந்த ஒழுக்கத்துக்கும் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். இந்த பூபாகத்தின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் இதில் அவர்கள் சமரசமே செய்து கொண்டதில்லை.

அதிகாரம் குவிந்த பதவியில் அவர்களை அமரவைத்தாலும் ஒரு துறையின் அதிகாரி யாக ஆக்கினாலும் காவல் துறையில் பணி யாற்றினாலும், ராணுவத்தில் அங்கம் வகித்தாலும் சரி இறையச்சத்துடனும் பயபக்தியுடனும் கற்பொழுக்கத்துடனும் நம்பகத் தன்மையுடனும் பணியாற்றினார்கள்.

முஸ்லிம் ராணுவத்தைப் பற்றி ரோமப் பேரரசின் பிரதிநிதிகளில் ஒருவர் கூறுகிறார்: "அவர்கள் இரவெல்லாம் இறைவனை வணங்குகின்றார்கள். பகலெல்லாம் நோன் பிருக்கின்றனர். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுகின்றனர். நன்மையை ஏவி தீமையை விலக்குகின்றனர். தமக்கிடையே சமநீதியைப் பேணுகின்றனர்".

(நூல் : அல் முஜாலசா - அஹ்மதுபின் மர்வான்)

இன்னொருவர் இப்படிக் கூறுகிறார்: "முஸ்லிம்கள் இரவில் துறவிகளாகவும் பகலில் குதிரைவீரர்களாகவும் இருக்கிறார்கள். இன்னொருவரின் உடைமையை பறித்துத் தின்பதில்லை. அதற்குரிய விலையைக் கொடுத்து வாங்கி உண்ணுகின்றனர். முகமன் கூறாமல் இன்னொருவரிடம் செல்வதில்லை. எதிரிகள் சரணடையும் வரை சளைக்காமல் போராடுகின்றனர்".

(நூல் : அல்பிதாயா வன் நிஹாயா)

மற்றொருவர் கூறுவதைப் பாருங்கள் : "இரவில் துறவிகள். பகலில் குதிரை வீரர்கள். அம்பெய்தால் குறி தவறாது. இறைமறையாம் திருக்குர்ஆனை அவர்கள் ஓதிடும்போதும் இறைத்துதியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதும் அவர்களில் குரல் ஓங்கி ஒலிக்கும். உன் அருகில் இருப்பவரிடம் நீ எதையாவது பேசினால் அவருக்குப் புரியாது. அவ்வளவு ஓங்கி ஒலிக்கும் அவர்களின் குரல்".

(நூல் : அல்பிதாயா வன் நிஹாயா)

பாரசீகப் பெருநிலத்தின் மதாயின் நகரத்தை வென்றெடுத்து பல லட்சக்கணக் கான தங்க நாணயத்துக்கு விலைபோகும் கிஸ்ரா மன்னரின் மதிக்கொண்ணா கிரீடத்தையும் மென்பட்டு விரிப்புக்களையும் கைப்பற்றினர் முஸ்லிம்கள். அவர்களின் மனம் சலனப்படவில்லை. கரங்கள் அதைக் கையாடல் செய்திடவில்லை. அதை அப்படியே தூக்கி தம் தளபதியிடம் தந்தனர் முஸ்லிம் வீரர்கள். தளபதி அதை இஸ்லாமிய அரசின் கலீஃபாவிடம் ஒப்படைத்தனர்.

இதைக் கண்ட கலீஃபா நெக்குருகிச் சொன்னார்: "இவ்வளவு பெரிய செல்வத்தைச் சிந்தாமல் சிதறாமல் ஒப்படைத்தவர்கள் நிச்சயமாக நம்பகத்தன்மை மிக்கவர்களே".

**பொதுவாழ்வில் இஸ்லாமியத் தலைமை ஏற்படுத்திய தாக்கம்**

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காட்டிய வழியில் அடி சறுக்காமல் சென்ற அந்தப் படை எப்பேற்பட்ட கீர்த்தியும் தகுதியும் உடையது என்றால் அந்தப் படையின் ஆட்சியின் கீழ்தான் அதன் நிழலில்தான் மனித இனம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண் டது. அதன் வழிகாட்டுதலின்படிதான் மனித இனம் நேரான லட்சியத்தை நோக்கி சீராக நடை போட்டது. அதன் ஆட்சிக் காலத்தில் தான் உலகம் சீரானது அமைதியான வாழ்வைப் பெற்றது. பூமி வளமானது. செழிப்படைந்தது.

அந்த நபித் தோழர்கள் இந்த உலகை அழகாக நிர்வாகம் செய்தனர். பாதுகாத்தனர். இவ்வுலக வாழ்வு ஓர் இரும்புக் கூண்டு என்றோ கழுத்தைக் கவ்விப் பிடித்திருக்கும் சங்கிலி என்றோ கருதவில்லை. அப்படிக்

கருதியிருந்தால் அதனோடு போராடி அதை உடைத்தல்லவா எறிந்திருப்பார்கள்!

இவ்வுலக வாழ்வு வீணிலும் ஆடம்பரத்தி லும் அற்ப சுகத்திலும் மூழ்கிக் கிடைத்த ஓர் அரிய வாய்ப்பு. போனால் திரும்ப வராது என்றும் எண்ணிடவில்லை அவர்கள். அப்படி எண்ணியிருந்தால் அதில் உருண்டு புரண்டு சுகங்கண்டிருப்பார்கள்.

உலக வாழ்வின் ஒரு சிறுபொழுதைக்கூட அவர்கள் வீணாகக் கழித்திடவில்லை. அதேநேரத்தில் அதன் சுகங்களை அவர்கள் சேகரித்திடவுமில்லை. ஏற்கனவே நாம் செய்துவிட்ட ஏதோ ஒரு பாவத்துக்கு தண்டனை இவ்வுலக வாழ்வு நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதி தப்பி ஓடவுமில்லை அவர்கள்.

இந்த உலகம் தம் முன்னே நீட்டப்பட் டிருக்கும் உணவு நிரம்பிய பாத்திரம் என்று கருதி அதிலுள்ளதை தின்று தீர்த்திட முட்டி மோதிக்கொள்ளவுமில்லை.

இந்த பூமியிலிருக்கும் செல்வங்களும் பொக்கிஷங்களும் வளங்களும் மேயக் கிடைத்த வனம் எனக் கருதி அடித்துப் பிடித்துக் கொண்டு அதன் மேல் பாய்ந்திட வுமில்லை.

பலவீனமான சமூகங்களை வேட்டைக் காடாகக் கருதி போட்டி போட்டுக் கொண்டு கொள்ளையடிக்கவுமில்லை.

மாறாக, இந்த உலக வாழ்க்கை, அல்லாஹ் தந்த பெரும் அருள். எல்லா நற்செயல் களுக்கும் இதுவே களம். அறப்பணிகள் செய்திட அல்லாஹ் தந்த காரணம் இது. இங்கே செய்யும் நன்மைகளால் அல்லாஹ்வை நெருங்கமுடியும். தங்களுக்கென்று நிர்ணயிக் கப்பட்ட நிறைவான மனிதம் நோக்கிச் செல்லமுடியும். இதைவிட்டால் அறப்போர் புரிந்திடவோ நல்லறங்கள் செய்திட இன்னொரு வார்யப்புக் கிடைக்காது என்று நம்பிச் செயல்பட்டனர்.

“அவன் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான். உங்களில் யார் அழகிய முறையில் செயல்படுகிறார் என்று உங்களை சோதிக்க” (67:2) என்ற திருக்குர் ஆன் வசனமும் “நிச்சயமாக நாம் பூமிக்கு மேல் இருப்பவற்றை அதற்கு அலங்காரமாக்கி னோம் அவர்களில் யார் அழகிய முறையில் செயல்படுகிறார் என்று சோதிக்க” (18:7) என்ற வசனமும் அவர்களின் சிந்தனைகளை வழிநடத்தின.

இந்த உலகம் அல்லாஹ்வுக்கே சொந்த மானது. இதில் மனிதனை தன் பிரதிநிதியாக வைத்திருக்கிறான். இரண்டு காரணங்களுக் காக அல்லாஹ் இவ்வாறு செய்துள்ளான் என்று அவர்கள் எண்ணி வாழ்ந்தார்கள்.

1. மனிதன் படைக்கப்பட்டதே பூமியில் இறைவனின் பிரதிநிதியாக இருக்கத்தான். இதைப் பின்வரும் வசனங்கள் வலியுறுத்து கின்றன.

“நிச்சயமாக நான் பூமியில் பிரதிநிதியை அமைக்கப் போகிறேன்” என்று உம் இறைவன் மலக்கு(வானவர்)களிடம் கூறினான். (2:30)

பூமியில் உள்ள அனைத்தையும் அவன் உங்களுக்காகவே படைத்தான். (2:29)

ஆதமின் பிள்ளைகளை நாம் மிக்க மரியாதைக்குரியவர்களாக்கினோம். கடலி லும் தரையிலும் அவர்களை சுமந்து செல்லும்படி செய்தோம். தூயவற்றை அவர்களுக்கு நாம் உணவாக்கினோம். நாம் படைத்தவற்றுள் ஏராளமானவற்றைவிட அவர்களை நாம் சிறப்புக்குரியவர்களாக் கினோம். (17:70)

2. மனிதன் தாம் மனித(இனத்தைச் சார்ந்தவ)ன் என்ற அடிப்படையில் அல்லாஹ் வின் கட்டளைகளுக்குக் கட்டுப்படுகின்றான். எனவே, அல்லாஹ் அந்த மனிதனை பூமியில் தன் பிரதிநிதியாக்குகிறான். அதிலுள்ள மக்களை நிர்வகிக்கும் பொறுப்பை ஒப்படைக்கிறான்.

இதோ அல்லாஹ் கூறுகின்றன்: "உங்களில் யார் ஓரிறை நம்பிக்கை கொண்டு நற் செயல்கள் புரிகின்றாரோ அவர்களை அவர்களுக்கு முன்வாழ்ந்தவர்களை (பூமியில்) பிரதிநிதியாக்கியது போலவே பூமியில் பிரதிநிதியாக்குவதாக அல்லாஹ் வாக்குறுதி தந்துள்ளான். அவன் அவர்களுக்கு விரும்பி வழங்கிய அவர்களுடைய மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்தித் தருவதாகவும் அவர்களின் அச்சத்துக்குப் பின் (அதை) நிம்மதியாக மாற்றித் தருவதாகவும் வாக்குறுதி வழங்கினான். அவர்கள் என்னையே வணங்கு வார்கள். எனக்கு எதையும் இணையாக்க மாட்டார்கள். இதன் பின்னரும் யாரேனும் (இதனை) மறுத்தால் அவர்களே பெரும் பாவிகள். (24:55)

தன்னுடைய பிரதிநிதியான மனிதனுக்கு பூமியிலுள்ள நல்லவை அனைத்தையும் பயன்படுத்தி ஊதாரித்தனமின்றி விரலமின்றி சுகம் பெற்றிடும் உரிமையையும் அல்லாஹ் வழங்கினான்.

இதோ திருக்குர்ஆன் கூறுகிறது: "அவன் தான் உங்களுக்காகவே பூமியிலுள்ள அனைத்தையும் படைத்தான். (2:29)

ஆதிமின் மக்களே தொழுமிடங்கள் அனைத்திலும் உங்களை நீங்கள் அலங்காரம் செய்து கொள்ளுங்கள். உண்ணுங்கள். பருகுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள். சுயமாக அவன் (அல்லாஹ்) வீண் விரணம் செய்வோரை விரும்புவதில்லை. (7:31)

(நபியே) நீர் கேட்பீராக. அல்லாஹ் தன் அடியார்களுக்காக வெளியாக்கிய அலங்காரத்தையும் தூய உணவுகளையும் யார் தடை செய்ய முடியம்? மேலும் கூறுவீராக. இவ்வுலக வாழ்வில் அவை ஓரிறை நம்பிக்கை யாளர்களுக்கு (வழங்கப்பட்டுள்ளன) மறுமையில் அவர்களுக்கு அவை கிடைக்கும். (7:32)

மனிதனை இந்த பூமியின் பிரதிநிதியாக்கி இதிலுள்ள வளங்களைப் பயன்படுத்திடும் உரிமையை வழங்கியதோடு மட்டுமல்லாமல் பூமியிலுள்ள சமுதாயங்களையும் மனிதக் குழுக்களையும் நிர்வகித்திடும் உரிமையையும் அல்லாஹ் மனிதனுக்கே வழங்கினான்.

மனித இனத்தின் நடவடிக்கைகளையும் நடத்தைகளையும் பண்புகளையும் ஆசைகளையும் கண்காணித்துப் பாதுகாக்கும் உரிமையையும் வழங்கினான்.

இறைவனின் பிரதிநிதிகள் பொதுமக்களில் வழிதவறியவர்களைத் திருத்தினார்கள். தவறான சிந்தனை கொண்டவர்களை நேர்வழிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். குழப்பவாதிகளை ஒழுங்குபடுத்தினார்கள்.

கோணலை நேராக்கினார்கள். வறட்சி யைப் போக்கி வளத்தை ஏற்படுத்தினார்கள். வலியவனின் அநியாயத்திலிருந்து பலஹீன மானவனைக் காத்தார்கள். அநியாயக் காரனால் பாதிக்கப்பட்டவனுக்கு நீதி வழங்கினார்கள்.

பூமியில் நீதியை நிலைநாட்டினார்கள். பாதுகாப்பு எனும் இறக்கையை உலக மெல்லாம் விரித்துப் போர்த்தினார்கள். அல்லாஹ் கூறுகிறான்:

"மனிதர்களுக்காக தோற்றுவிக்கப்பட்ட சமுதாயத்தில் நீங்களே சிறந்தவர்கள். நன்மையை ஏவுகின்றீர்கள். தீமையைத் தடுக்கின்றீர்கள். அல்லாஹ்வை நம்புகின் றீர்கள். (3:110)

ஓரிறை நம்பிக்கையாளர்கள, அல்லாஹ் வுக்காக சாட்சி கூறுபவர்களாக நீதியை நிலைநாட்டுவோராக இருங்கள்". (4:135)

இந்த இறை மறை வசனங்களை இதயத்தில் ஏந்தி வாழ்ந்தார்கள். எனவேதான் நேர்வழிபெற்ற கலீஃபாக்களின் ஆட்சிக் காலம் நல்லதோர் நாகரிகத்தின் முன்னோடி யான காலம்.

**(தொடரும்...)**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

# திருக்குர்ஆன் பாடம்

மௌலவி இல்யாஸ் ரியாஜி

*அத்தியாயம் : அல்பகரா*

*வசனங்கள் : 99, 100, 101*

*(**ந**பியே) தெளிவான சான்றுகளை நாம் உமக்கு நிச்சயமாக இறக்கி வைத்தோம். பாவிகளை தவிர (வேறு யாரும்) அவற்றை மறுக்க மாட்டார்கள்.*

*அவர்கள் ஏதேனுமொரு ஒப்பந்தம் செய்யும் போதெல்லாம் அவர்களில் ஒரு பிரிவினர் அதைத் தூக்கி எறிந்தனர். உண்மையில் அவர்களில் அதிகமானோர் ஓரிறை நம்பிக்கை கொள்ள மாட்டார்கள்.*

*அவர்களிடமுள்ள(வேதத்)தை உண்மையாக்குகின்ற ஒரு தூதர் அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு வந்தபோது வேதம் வழங்கப் பெற்றோரில் ஒரு பிரிவினர் எதுவும் தெரியாதவர்கள் போன்று அல்லாஹ்வின் வேதத்தை தம் முதுகுகளுக்குப் பின்னால் தூக்கி எறிந்துவிட்டனர். (2:99, 100, 101)*

**இறங்கிய காரணம்**

இப்னு அப்பாஸ் (ரழி) கூறுகிறார்கள்: யூதர்களின் தலைவர்களுள் ஒருவரான இப்னு சூரியா என்பவன் நபி (ஸல்) அவர்களிடம் "முஹம்மதே! எங்களுக்குத் தெரிந்த எதையும் எங்களுக்கு நீங்கள் கொண்டு வரவில்லை. (நீங்கள் ஒரு நபி என்பதற்கு) தெளிவான சான்று எதையும் அல்லாஹ் உமக்கு வழங்கவுமில்லை. அப்படியிருந்திருந்தால் நாங்கள் உம்மைப் பின்பற்றியிருப்போம்" என்று கூறினான். அப்போது இவ்வசனம் (99) இறங்கியது.

(நூல் : தபரீ, குர்த்துபீ, இப்னு கதீர்)

இவ்வசனத்தில் இடம் பெற்றுள்ள "ஆயாத்திம் பய்யினாத்" என்பதற்கு தெளிவான சான்றுகள் என்று பொருள். அதாவது நபியே - நீங்கள் ஓர் இறைத்தூதர் தான் என்று நிரூபித்திடும் சான்றுகளை உமக்கு வழங்கியுள்ளோம். அவை அதை நிரூபிக்கின்றன என்பது கருத்து.

இது இப்னு சூரியாவின் கருத்துக்கு மறுப்பாக அமைந்துள்ளது.

'ஆயாத்திம் பய்யினாத்' என்பதற்கு தெளிவான வசனங்கள் என்றும் பொருள் கூறலாம். அதாவது நபியே... நீங்கள் ஓர் இறைத்தூதர் என்பதை குர்ஆனின் தெளிவான வசனங்கள் நிரூபிக்கின்றன என்பது கருத்து.

ஆம்! திருக்குர்ஆனில் இடம்பெற்றுள்ள யூதர்களைப் பற்றிய பல தகவல்களே தெளிவான சான்றுகள்தான்.

எந்த நூல்களிலும் இடம்பெறாமல் புதைந்து போன பல ரகசியங்களை திருக்குர்ஆன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டது.

யூதர்களின் முன்னோர்கள் செய்த தகிடுதத்தங்கள், கொலைகள், சதிகள், வாக்கு மீறல்கள், அநியாயங்கள், வரம்பு மீறல்கள், தவ்ராத் வேதத்தின் சட்டங்களில் அவர்கள் செய்த திரிபுகள் என அனைத்தையும் திருக்குர்ஆன் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துவிட்டதல்லவா?

எந்த நூல்களிலும் இடம்பெறாத, இந்த தகவல்களை முஹம்மது நபி (ஸல்) கூறு கிறார்கள் என்றால் அவர்கள் இறைத்தூதரன்றி வேறு யார்?

இவ்வாறு ஒரு எளிய சிந்தனை மூலம் விளங்கும் விஷயங்களைக்கூட ஏற்கும் மனநிலை யூதர்களிடமும் அவர்களின் தலைவர்களிடமும் இல்லை.

**வசனம் 100 இறங்கிய காரணம்**

இறுதி நபி வரும்போது அவரை நீங்கள் நம்பி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று யூதர்களிடம் வாக்குறுதி பெறப்பட்டிருந்தது. அதை நபி (ஸல்) அவர்கள் யூதர்களுக்கு நினைவூட்டினார்கள்.

அப்போது மாலிக் பின் ஸைப் என்ற யூதன் “அல்லாஹ்வின் மீது சத்தியமாக முஹம்மதைப் பற்றி எங்களிடம் எந்த வாக்குறுதியும் பெறப்படவில்லை” என்று கூறினான். அப்போது இந்த (10வது) வசனம் இறங்கிற்று. (நூல் : குர்த்துபீ, இப்னுகதீர்)

அதாவது, நபியே உங்களுக்காகப் பெறப்பட்ட இந்த வாக்குறுதி மட்டுமல்ல, எல்லா வாக்குறுதிகளையும் இவர்கள் இப்படித்தான் தூக்கி எறிவார்கள் என்று பொருள்.

**வசனம் 101ன் விளக்கம்**

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் பண்புகள், அடையாளங்கள் தவ்ராத் வேதத்தில் கூறப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட ஒருவர் இறுதி நபியாக வரும்போது அவரை நம்பி ஏற்று அவருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கிட வேண்டும் என்று யூதர்களிடம் கூறப்பட்டிருந்தது.

ஆனால், தவ்ராத்தில் கூறப்பட்ட அங்க அடையாளங்களுடனும் பண்புகளுடனும் இறுதி நபி வந்தபோது அது பற்றி ஏற்கனவே எதுவும் அறியாதது போல நடந்து கொண்டனர். யூதர்கள் இதையே அல்லாஹ் 101வது வசனத்தில் இடித்துரைக்கிறான்.

‘வேதம் வழங்கப்பட்டவர்களில் ஒரு பிரிவினர் அதைத் தூக்கி எறிந்தனர்’ என்று கூறுவதின் மூலம் எல்லா யூதர்களும் இறுதி நபியைப் புறக்கணிக்கவில்லை. அவர்களுள் ஏற்றுக்கொண்டவர்களும் உண்டு என்று உண்மை புலப்படுகிறது.

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்: இங்கே (99வது வசனத்தில்) அல்லாஹ் இறக்கி தெளிவான சான்றுகளை யூதர்கள் ஏன் புறக்கணிக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை திருக்குர்ஆன் திரைவிலக்கிக் காட்டுகிறது.

எதற்கும் அடங்காமை, இயற்கை சுபாவத்தில் ஏற்பட்டுள்ள திரிபு இவைதான் காரணம். ஏனென்றால் இயற்கை சுபாவத்தில் குழப்பம் ஏதுமில்லையென்றால், அது சீராக இருந்ததென்றால் தெளிவான சான்றுகளை நம்பிடும் வாய்ப்பைத்தான் அது தாராளமாக உருவாக்கித் தரும். மேலும் அது தெளிவான சான்றுகளை ஏற்கச் சொல்லி நல்ல இதயத்தைக் கட்டாயப்படுத்தும்.

எனவே, யூதர்களோ வேறு யாருமோ தெளிவான சான்றுகளை ஏற்க மறுத்தால் அதற்குக் காரணம் அவர்கள் தமது இயற்கை சுபாவத்தை சீர்குலைத்ததும் அடங்க மறுத்து வெளியேறியதும்தான். மாறாக அந்த சான்றுகள் ஓர் ஆதாரமாக இல்லை என்பதோ அல்லது போதுமான அளவுக்கு அதில் சான்று இல்லை என்பதோ காரணமல்ல.

இவ்வாறு கூறும் திருக்குர்ஆன் அடுத்த (100வது) வசனத்தில் முஸ்லிம்களையும் (யூதர்களல்லாத) இதர மக்களையும் நோக்கித் திரும்பி யூதர்களின் கெட்ட பண்புகளை ஓங்கிச் சொல்கிறது. அவர்களின் இழிவான நடத்தையை திரைவிலக்கிக் காட்டுகிறது.

அவர்கள் மனம் இழுத்த இழுப்புக் கெல்லாம் செல்பவர்கள். இழிவான இனவெறி பிடித்தவர்கள் தான் அவர்கள். எனினும் ஒரு சிந்தனையில் ஒருமுகப்பட்டு நிற்க மாட்டார்கள். ஒரு ஒப்பந்தம் போட்டால் அதில் நிலைத்திருக்க மாட்டார்கள். உறுதியான பிடிமானத்தைப் பற்றிப் பிடிக்க மாட்டார்கள்.

தம்முடைய யூத இனத்துக்குக் கிடைத் துள்ள மேன்மைகளில் ஏதேனுமொன்று இன்னொரு இனத்துக்கும் கிடைத்துவிட் டால், அல்லாஹ் மற்றொரு இனத்துக்கு அதை வழங்கினால் அது அவர்களுக்குப் பிடிக்காது. அந்த அளவுக்கு இனவெறி பிடித்த பிடிவாதக்காரர்கள்.

இந்த பிடிவாதத்தை ஏதேனுமொரு (நல்ல) விஷயத்தில் காட்டமாட்டார்கள். தமக் கிடையே செய்துகொள்ளும் ஒப்பந்தங்களைப் பேணிக்காத்திட மாட்டார்கள். தங்க ளிடையே ஏதேனுமொரு உறுதியான உடன்பாடு ஏற்பட்டால் ஒரு பிரிவு அதை முறித்து உடைத்து எறிந்துவிடும். தாம் ஒன்றுகூடி முடிவு செய்ததைவிட்டு வெளியேறி விடுவார்கள் என்று எச்சரிக்கிறது (100வது வசனம்).

(தூர்சீனா) மலையை இவர்களின் தலைக்கு மேல் உயர்த்தி வைத்து தவ்ராத் வேதத்தை ஏற்றுக்கொள்வீர்களா? என்று அல்லாஹ் கேட்டபோது ஏற்போம் என்று கூறினர். ஆனால் மாறு செய்தனர்.

பின்னர் தம்முடைய நபிமார்களுடன் தாம் செய்துகொண்ட ஒப்பந்தங்களையெல்லாம் தூக்கி எறிந்தனர்.

இறுதியாக நபி (ஸல்) அவர்கள் மதீனா வுக்கு வந்த ஆரம்ப காலத்தில் குறிப்பிட்ட சில நிபந்தனைகளை வைத்து இவர்களுடன் ஓர் ஒப்பந்தம் செய்திருந்தார்கள். இதையும் மதிக்காமல் தூக்கி எறிந்தார்கள் யூதர்கள்.

நபி(ஸல்)க்கு எதிராக எதிரிகளுக்கு உதவுவதில் முதல் ஆளாக நின்றனர். நபி (ஸல்) அவர்களுடைய மார்க்கத்தை பழித்துப் பேசுவதில் முதல் ஆளாக நின்றனர். முஸ்லிம்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங் களையெல்லாம் புறக்கணித்துவிட்டு முஸ்லிம் களின் அணியில் பிளவையும் குழப்பத்தையும் ஏற்படுத்திட பல்வேறு தந்திரங்களைக் கடைபிடித்தனர்.

இப்படி கேடுகெட்ட பண்புக்குரியவர் களாக யூதர்கள் இருக்கின்றனர். முஸ்லிம் களோ இதற்கு நேரெதிரான பண்பாளர் களாகத் திகழ்கின்றனர். பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழி ஒன்றில் இது 'பளிச்'செனத் தெரிகிறது.

நபி (ஸல்) கூறினார்கள்: "முஸ்லிம்கள் அனைவருடைய ரத்தங்களும் (ஏற்றத்தாழ் வின்றி) சமமானதே. அவர்கள் பிறருக்கு உபகாரிகளாக இருப்பார்கள். அவர்களுள் மிகக் கீழ்நிலையிலிருப்பவர் அவர்களின் பொறுப்புக்களை ஏற்றிட முன்வருவார். (நூல் : அஹ்மது)

இந்நபிமொழியைப் பாரீர். "அவர்களுள் மிகக்கீழ் நிலையிலிருப்பவர் அவர்களின் பொறுப்புக்களை ஏற்றிட முன்வருவார்" என்கிறது ஆம்! (முஸ்லிம்களின் சார்பில்) ஒருவர் செய்த உடன்படிக்கையை இன்னொருவர் முறிக்க மாட்டார். ஒருவர் போட்ட ஒப்பந்தத்தை இன்னொருவர் மீறமாட்டார். (இதற்கொரு வரலாற்று உதாரணத்தைப் பாருங்கள்.)

ஈராக் நாட்டை வெற்றிகொள்ள அபூஉபைதா (ரழி) தலைமையில் ஒரு படையை இஸ்லாமிய அரசின் அப்போதைய

தலைவர் உமர் (ரழி) அனுப்பி வைத்திருந் தார்கள்.

போர் தொடங்குவதற்கு முன்னர் இஸ்லாமிய ராணுவப் படையில் அங்கம் வகித்திருந்த ஒரு அடிமை ஈராக்வாசிகளுக்கு உயிர்ப் பாதுகாப்புத் தருவதாக அவர்களிடம் வாக்குறுதி அளித்திருக்கிறார். அணித்தலைவர் அபூ உபைதா (ரழி) அவர்களுக்கு இந்த வாக்குறுதி பற்றித் தெரியவந்தது.

சாதாரண சிப்பாய் ஒருவரின் வாக்குறுதி அணியின் தலைமையைக் கட்டுப்படுத்துமா? ஈராக்வாசிகள் மீது தாக்குதல் தொடுப்பதா வேண்டாமா? என்று யோசித்த அபூ உபைதா (ரழி), இதுபற்றி கலீஃபா உமர்(ரழி)வுக்கு கடிதம் எழுதி விளக்கம் கேட்டிருந்தார்கள்.

அதற்கு கலீஃபா உமர் (ரழி) எழுதியிருந்த பதில் கடிதத்தில், "அல்லாஹ் வாக்குறுதியை நிறைவேற்றுவதை மிக்க மேன்மைக்குரிய தாக்கியிருக்கிறான். வாக்குறுதியை நிறைவேற் றாமல் அதை நீங்கள் அடைய முடியாது. எனவே, அவர்களுக்கு அவர் தந்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். தாக்குதல் நடத்தாமல் திரும்புங்கள்" என்று எழுதியிருந்தார்கள்.

இது நேர்வழி நடக்கும் சங்கைக்குரிய சமுதாயத்தின் அடையாளம். இதுதான் பாவிகளான யூதக் கூட்டத்துக்கும் வாய்மையாளர்களான முஸ்லிம்களுக்கும் மத்தியிலுள்ள வித்தியாசம்.

அடுத்த வசனம் 101இல் புதிய இறுதி நபியையும், அவர்களுடைய வேதத்தையும் யூதர்கள் புறக்கணித்ததை அல்லாஹ் எடுத்துரைக்கிறான்.

இந்த வசனத்தில் மெல்லிய ஏளனம் இருக்கிறது. வேதம் வழங்கப்பட்ட சமுதாய மாக இருந்தும் மற்றொரு வேதத்தை (குர்ஆனை)ப் புறக்கணிக்கின்ற யூதர்களை இந்த வசனம் ஏளனம் செய்கிறது.

அதாவது, எழுதப்படிக்கத் தெரியாத (உம்மிய்யூன்) சமுதாயம் இறைவேதத்தைப் புறக்கணித்தால்கூட அது புரிந்துகொள்ளப் பட வேண்டியதுதான். (ஏனெனில் அவர்கள் மூடர்கள்)

ஆனால் இவர்களோ வேதம் வழங்கப் பட்டவர்கள். இறைத்தூது, இறைத்தூதர்கள் என்பதையெல்லாம் அறிந்தவர்கள். நேர்வழி யோடு தொடர்புடையவர்கள். ஒளியைக் கண்டவர்கள். இவர்கள் என்ன செய்தார்கள்? தம் முதுகுகளுக்குப் பின்னால் இறை வேதத்தைத் தூக்கி எறிந்து விட்டார்களே!

பிறகு என்ன? தம்முடனுள்ள தவ்ராத் வேதத்தை உண்மைப்படுத்தும் குர்ஆன் எனும் வேதத்தை ஏற்காமல் (அதிலுள்ள ஏகத்துவம், இறைத்தூது, மறுமை போன்ற விஷயங்களை யெல்லாம் ஏற்கனவே கேள்விப்பட்டிராத புதிய செய்தி போல நடித்துவிட்டு) புறக்கணித்தார்களே இந்த யூதர்கள்... பிறகு என்ன செய்தார்கள்?

இதைவிடச் சிறந்த ஒன்றிடம் போய்ச் சேர்ந்தார்களா? இல்லையே...! ஐயத்திற் கிடமில்லாத உண்மையிடமா போய்ச் சேர்ந்தார்கள்? இல்லையே...!

இந்தக் குர்ஆன் உண்மைப்படுத்துகின்ற வேதமான (தம்முடைய தவ்ராத்) வேதத்தை யாவது பற்றிப் பிடித்து செயல்பட்டார்களா? இல்லையே...!

இவற்றுள் எதையும் செய்யவில்லை. மாறாக, என்ன செய்தார்கள் தெரியுமா? எதற்காக இறை வேதங்களைப் புறக்கணித் தார்கள் தெரியுமா?

உறுதியான உண்மையின் பக்கம் சாயாமல் ஆழமான பொய்களுக்கும் கட்டுக்கதைகளுக் கும் பின்னால் ஓடுவதற்காகத்தான் இறை வேதத்தை தம் முதுகுகளுக்குப் பின்னால் தூக்கி எறிந்தார்கள்.

ஆம். அவர்கள் சூனியத்தின் பின்னால் ஓடினார்கள்.

(நூல் : ஃபீழிலாலில் குர்ஆன்)

**இன்ஷா அல்லாஹ் தொடரும்...**

# நூல் வெளியீடு

இறைவனின் இறுதிவழிகாட்டலாம் அருள்மறை குர்ஆனுக்கு எழுதப்பட்ட மிகச்சிறந்த விளக்க உரை என்ற தஃப்ஸீர்களில் ஒன்றான தஃப்ஸீர் ததப்புருள் குர்ஆன் எனும் பெருநூலை தமிழில் மொழிபெயர்க்கும் அரும்பணியை புதிய சமுதாயம் அறக்கட்டளை சார்பாக தொடங்கி உள்ளோம். (மொத்தம் 9 பாகங்கள்)

அதன் முதல் பாகம் இறையருளால் ஜூன் 15 ஞாயிற்றுக்கிழமை அன்று பள்ளபட்டி உஸ்வத்துல் ஹஸனா அரபிக் கல்லூரியின் முதல்வரும் கரூர் மாவட்ட அரசு காஜியும் அனைத்திந்தி ஃபிக்ஹு அகாடெமியின் உறுப்பினருமான முர்ஷிதுல் உலமா அல்லாமா அப்துர் ரஹீம் காஸிமி அவர்களின் தலைமையில் வெளியிடப்பட்டது.


ஜூன் 15 ஞாயிறு மாலை 7 மணியளவில் இறையருளால் கரும்புக்கடை ஆஸாத் நகரிலுள்ள ஜே.பி.மஹால் அரங்கில் ஆர்ஆனிய பேரறிஞர் அல்லாமா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி (ரஹ்) எழுதிய ததப்புருல் குர்ஆன் வெளியீட்டு விழா நடைபெற்றது.

கோயமுத்தூர் அத்தார் ஜமாஅத் மஸ்ஜிதின் தலைமை இமாமும் மன்பஉஸ் ஸாலிஹாத் பெண்கள் அரபிக் கல்லூரியின் முதல்வருமான மௌலானா ஹாஃபிழ் இப்ராஹீம் பாகவி தலைமை உரையாற்றினார். தொடர்ந்து கரும்புக் கடை முனவ்வறா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா ஹாஃபிழ் அப்துல் காதர் ஸிராஜி வாழ்த்துரை வழங்கினார். அதனையடுத்து, மதுரை நாஃபிஉல் உலும் அரபிக் கல்லூரியின் பேராசிரியரும் தஃப்ஸிர் முஹ்யுத்தீன் யூஸுஃபி காஸிமி வாழ்த்துரை வழங்கினார். அதன்பின் தஃப்ஸிர் ததப்புருல் குர்ஆன் (அருள்மறை ஆய்வுரை) வெளியிடப்பட்டது. முதல் பிரதியை அல்லாமா அப்துர் ரஹீம் ரஷாதி காஸிமி அவர்கள் வெளியிட திருக்குர்ஆன் அறக் கட்டளையின் தலைவர் ஷஹாபுத்தீன் அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். இரண்டாம் பிரதியை ஸுன்னத் ஜமாஅத் அமைப்பின் தலைவர் இனாயத்துல்லாஹ் பெற்றுக் கொண்டார்கள். மூன்றாம் பிரதியை குர்ஆன் விரிவுரையை வெளியிட்ட புதிய சமுதாயம் அறக்கட்டளை யின் தலைவர் குர்ஆனிய எழுத்தியல் ஆய்வாளர் அமீர் அல்தாஃப் வெளியிட, ஸலாமத் நகர் அல்பய்யினா இஸ்லாமிய நூலகத்தின் பொறுப் பாளர் ரியாஸுத்தீன் பெற்றுக் கொண்டார்.

அதன்பின்பு பள்ளபட்டி உஸ்வத்துல் ஹஸனா கல்லூரி முதல்வர் அனைத்திந்திய ஃபிக்ஹு அகாடெமி உறுப்பினர் கரூர் மாவட்ட அரசு காஜி அல்லாமா அப்துர் ரஹீம் ரஷாதி காஸிமி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். இறைமறை அல்குர்ஆனின் சிறப்புகளையும் குர்ஆனோடு தமக்கு இருந்ததாக வேண்டிய தொடர்பு உறவையும் அவர்கள் குறிப்பிட்டு பேசினார்கள். குர்ஆனையும் குர்ஆனைக் கொண்டு வந்த இறுதித் தூதரையும் நினைவு கூரும் வகையில் அவர்களுடைய பேச்சு அமைந்திருந்தது.

அதன்பின்பு குர்ஆன் விரிவுரையை தமிழில் மொழிபெயர்த்த சகோதரர் சையத் அப்துர் ரஹ்மான் உமரி அவர்கள் சொற்பொழிவாற்றி னார். குர்ஆனுக்கும் குர்ஆன் இறக்கப்பட்ட ரமழான் மாதத்திற்கும் இடையிலான உறவை அவர் தொட்டுப் பேசினார்.

இறுதியாக அமீர் அல்தாஃப் (தலைவர், புதிய சமுதாயம் அறக்கட்டளை) நிறைவுரை ஆற்றினார். சகோதரர் சையத் அப்துர் ரஹ்மான் உமரி அவர்கள் அடுத்து எழுதவிருக்கும் அனைத்து நூற்களையும் தங்கள் அறக்கட்டளை தொடர்ந்து வெளியிடும் என்னும் அறிவிப்பையும் வருகின்ற ரமழான் மாதத்தில் உம்மஹாத்துல் முஃமீனீன் (இறைநம்பிக்கையாளர்களின் அன்னையர்) என்னும் பெரு நூலை வெளியிட இருப்பதாகவும் அறிவித்தார். சகோதரர் ஜாகிர் ஹுஸைன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ❖




918 பக்கங்கள்
ஹதியா ரூ. 490/-

# கல்விக் கொள்கை - தேவை ஒரு மாற்று

### கல்வி கண்ணானது

மனிதனை மனிதனாக வாழ வழிவகுப்பது கல்வி என்று சொன்னால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு மனிதனுடைய ஒவ்வொரு செயலிலும் கல்வியினுடைய அவசியமும் தேவையும் இருக்கின்றது. ஒரு மனிதன் குழந்தைப் பருவம் தொங்கி தான் இறக்கும் வரை பள்ளி சென்றும் தன் அனுபவத்தின் மூலமும் கல்வியினை கற்கிறான். அதில் குறிப்பானது அவன் பள்ளி மற்றும் கல்லூரி சென்று கற்கும் படிப்பாகும். இந்த படிப்புதான் அவனுடைய எதிர்கால சம்பாத்தியம் மற்றும் வாழ்வியல் நெறி குறித்தான விசயங்களை தீர்மானிக்கின்றது. இப்படி ஒரு மனிதனுடைய முதுகெலும்பாக செயலாற்றும் கல்விதான் அந்த தேசத்தின் வளர்ச்சியையும் தீர்மானிக்கின்றது.

வல்லரசு கனவு கண்டு கொண்டிருக்கும் ஒவ்வொரு இந்தியனும் தேசத்தின் கல்வியறிவு நிலையையும் அதன் கல்விக் கொள்கை களையும் அறிந்துகொள்வது அவசியமாகும். அதிலும் குறிப்பாக தற்போதைய நிலையை நாம் நன்கு ஆராய்ந்து பார்த்தோம் என்றால் தேசம் வளர்ச்சி அடைந்துவிட்டதாக கூறும் முன்னாள் உலக வங்கியின் அதிகாரி பொருளாதா மாமேதை முன்னாள் பாரதப் பிரதமர் திரு.மன்மோகன் சிங் அவர்களுடைய வார்த்தை எந்தளவிற்கு பொய்யானது என்பதை சாமான்ய இந்தியனால் கூட உணர்ந்துகொள்ள முடியும்.

### கிராமங்களின் அவலம்

இந்தியா கிராமங்களில் வாழ்வதாக தேச தந்தை காந்தியடிகள் கூறினார்கள். அந்த இந்திய தேசத்தில் தான் 16 சதவீத கிராமங் களில் தொடக்கப் பள்ளிகள் கூட இல்லை. சராசரியாக கிராமப்புற பள்ளிகளில் 30 சதவீத ஆசிரியர்கள் பணிக்கு வருவதில்லை. மேலும் பல பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் பணி யிடங்கள் அரசால் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இதுபோன்ற ஆசிரியர் வருகையின்மையினாலும் ஆசிரியர்கள் பற்றாக்குறையினாலும் பள்ளிகளில் அடிப்படை கட்டமைப்பு இல்லாததாலும் பள்ளிகள் இருக்கும் கிராமங்களில் உள்ள மாணவர்கள் சரியான கல்வியறிவு பெறாத வர்களாக உருவாகுகின்றனர். சமீபத்தில் வடஇந்திய கிராமத்தில் உள்ள ஒரு பள்ளியில் ஆசிரியை மாணவர்களுக்குப் பாடம் கற்பிக்கும்போது எடுக்கப்பட்ட ஒலிநாடா தொலைக்காட்சி செய்திகளிலும் இணைய தளங்களிலும் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தொடக்க பள்ளியில் பாடம் எடுக்கும் அந்த ஆசிரியையால் கிழமைகளை கூட ஆங்கிலத்தில் எழுத்துப் பிழை இல்லாமல் சரியாக கற்பிக்க இயலவில்லை. (Sundayவை Sunde என்று மாணவர்களுக்கு கற்பிக்கின்றார்) இந்த நிலையில் தான் கிராமப்புற பள்ளிகளும் அதன் ஆசிரியர்களும் உள்ளனர்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கல்வி என்பது அடிப்படை உரிமையாகும். ஆனால், இந்த சட்டத்தினை பொய்ப்பிக்கும் வகையில் 6 முதல் 14 வயதுக்கு உட்பட்ட 42 மில்லியன் குழந்தைகள் பள்ளிக்கு செல்வ

**ஹாரிஸ்** B.E.,

தில்லை. இந்நிலையை மாற்ற மைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட சர்வ சிக்ஷ அபியான் (SSA) திட்டத்தால் இதுநாள் வரை மிகப்பெரிய மாற்றத்தை கொண்டு வர இயலவில்லை. அரசாங்கமும் இதுகுறித்து பெரிய அளவில் அக்கறை செலுத்தாதது வருந்தத்தக்க விசயமாகும்.

ஒரு இந்திய உயர்நிலைப் பள்ளி மாணவனால் ஒரு வாக்கியத்தை சொந்தமாக அமைக்கவோ அடிப்படை கணக்குப் புதிரை தீர்க்கவோ இயலாத நிலை இன்று உள்ளது.

உலகளவில் உயர்ந்த பல்கலைக்கழகங்களின் தரப்பட்டியலில் இந்தியாவின் பல்கலைக்கழகங்கள் ஒன்றுகூட இடம் பிடிக்கவில்லை. உலக பல்கலைக்கழகங்களின் தரப்பட்டியலில் இல்லாதது மட்டுமல்ல டைம்ஸ் உயர்கல்வி உலகப் பல்கலை தரப்பட்டியலிலும் க்யூ.எஸ்.பல்கலை தரப்பட்டியல்களிலும் இடம் பிடிக்கவில்லை. 1.22 பில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் இருப்பதோ வெறும் 543 பல்கலைக்கழகங்கள்தான். நமது அண்டை தேசமும் மக்கள் தொகையில் முன்பாக இருக்கக்கூடிய சீனாவிலோ 2 ஆயிரத்து 236 பல்கலைக்கழகங்கள் உள்ளன. சீனாவின் மக்கள் தொகையோ நம்மைவிட 0.12 பில்லியன் கூடுதலாகும்.

இதனை கருத்தில் கொண்டு வெறுமனே ஆயுதங்களை வாங்கி குவிக்கும் அரசாங்கம் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையையும் உயர்த்த வேண்டும். இல்லையெனில் இந்திய மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த முடியாது.

**பொருளாதார சந்தையாக மாற்றப்படும் கல்வி நிலையங்கள்**

ஒருபுறம் பள்ளி, கல்லூரி எண்ணிக்கையில் குறைவு. மறுபுறமோ கல்வி நிலையங்கள் வியாபாரக்கூடமாக மாறிவருகின்றது. இன்றைக்கு கல்வி நிலையங்களில் மூன்றில் இரண்டு பங்கு தனியாருக்கு சொந்தமானவை. 1.22 பில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்தியாவில் இருப்பதோ வெறும் ஏழு இந்திய தொழில்நுட்ப கழகங்கள் (IIT) தான். இந்த ஐ.ஐ.டி.யை நாட்டின் பொறியியல் தேவைக்காக தொடங்கி வைப்பதாகவும் இதில் பயிலக்கூடிய மாணவர்கள் இந்திய பொறியியல் துறையில் முக்கிய பங்காற்றுபவர்களாகவும் இருப்பார்கள் என்று ஐ.ஐ.டி.யை தொடங்கி வைத்து உரையாற்றினார் முதல் பாரத பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு. ஆனால் இன்று அமெரிக்கா மற்றும் இன்ன பிற மேற்கத்திய நாடுகளுக்கு பொறியாளர்களை ஏற்றுமதி செய்யும் சந்தையாக இந்த ஐ.ஐ.டி.க்கள் மாறியுள்ளன.

மேலும் பெரும்பான்மையான பள்ளி, கல்லூரிகள் தனியாருக்கு சொந்தமாக இருப்பதனால் அங்கே அரசு விதித்த கட்டணங்களுக்கு கூடுதலாக கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இதுகுறித்து கல்வித் துறையும் அக்கறையுடன் நடவடிக்கை எடுப்பதில்லை. இந்நிலை தொடர்ந்தால் கல்வி என்பது ஏழை மாணவர்களுக்கு எட்டாக்கனியாக மாறி விடும்.

**மாற்றப்பட வேண்டிய கல்விக் கொள்கைகள்**

இன்றைக்கு கல்வி பயிலும் மாணவர்களும் சரி, பட்டம் பெற்ற பட்டதாரிகளும் சரி சமூக அக்கறையற்றவர்களாக மாறிவருகின்றனர். இந்நிலைக்கு மிக முக்கிய காரணம் அவர்கள் படிக்கும் படிப்பு. படிக்கக்கூடிய காலகட்டத்தில் படி படி என்று பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் தொடர்ந்து கட்டாயப் படுத்தப்படுகின்றன. அதனால் ஒரு மாணவன் சமூக அக்கறையோ அதுபற்றிய பார்வையோ அல்லது சுற்றுப்புறத்தில் என்ன நிகழ்கின்றது என்றுகூட தெரியாமல் மன அழுத்தத்துடன் வளருகிறான். மறுபுறம் படிப்பு, பணம் சம்பாதிக்க என தன்னை ஒரு குறுகிய வட்டத்திற்குள் சுருக்கிக் கொள்கின்றான்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் கல்வி கற்கும் ஒருவன் எப்படி பொருளாதாரத்தில்

முன்னேறுவது? எப்படி பணம் ஈட்டுவது? என்பதிலேயே குறியாக இருக்கின்றான். வாழ்வில் ஏதேனும் ஒரு சிறிய பிரச்சனை ஏற்பட்டாலும் அது அவனை பெரிதாக பாதிக்கின்றது. முற்றிலுமாக சகிப்புத் தன்மையே இல்லாமல் போய் விடுகின்றது. அதனுடைய விளைவு தான் ஆசிரியை தன்னை திட்டினார் என்பதற்காக அதனை சகித்துக்கொள்ள இயலாமல் மாணவனே ஆசிரியையை கத்தியால் குத்திக் கொன்ற சம்பவம் சென்னையில் நிகழ்ந்துள்ளது. அதேபோன்று ஆசிரியர் அடித்தார் என்பதற்காக தற்கொலை செய்த சம்பவமும் தமிழகத்தில் நிகழ்ந்துள்ளது. கடந்த கல்வி யாண்டில் மட்டும் சுமார் 50 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இந்தியாவில் அதிகம் படிப்பறிவு பெற்ற மாநிலமான கேரளத்தில் தான் தற்கொலைகள் அதிகம். இப்படியாக பல உதாரணங்களை கூறிக்கொண்டே செல்லலாம். ஆக, படித்து என்ன பயன்? அவர்கள் படிக்கும் படிப்பு என்ன சொல்லிற்று? அவர்கள் மனதை அது பக்குவப்படுத்தவில்லை. அதனால்தான் சமுதாயத்தில் உயர்ந்த படிப்பு படித்தவர்கள் முதல் ஆரம்பப் படிப்பைப் படிக்கும் மாணவர்கள் வரை மிப்பெரிய தவறுகளைச் செய்கின்றனர். இதுபோன்ற பிரச்சனைகளுக்கு காரணம் உலகாதாயக் கல்விமுறைதான். படி படி என்று படித்து மிக உயர்ந்த இடத்திற்கு வேண்டி உழைத்து அதை அடைந்தும், அப்படிப்பு அம்மனிதனது வாழ்விற்கு உதவவில்லை. அன்றாட வாழ்வில் அவன் சந்திக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வை அக்கல்வி அம்மனிதனுக்கு வழங்காத காரணத்தினால் அவன் சில நேரங்களில் தவறான முடிவிற்கோ அல்லது தனது மனோஇச்சைக்கோ பலியாகிவிடுகிறான். பின்பு எங்கே அவன் சமுதாயத்தை குறித்து சிந்திப்பது? மற்ற விசயங்களில் கவனம் கொண்டு பார்ப்பது. ஆக இவ்வகையான படிப்பு மனித வாழ்விற்கு முற்றிலும் பயனளிக்காது.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற பாதுகாப்பிற்கான தேசிய ஆணையத்தின் மாநிலம் தழுவிய பொதுக் கூட்டத்தின்போது அவ்வாணையத்தில் அங்கம் வகிக்கும் சங்கர் ராம சுப்ரமணியன், பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது "தற்போதுள்ள கல்வி முறையில் சுதந்திரமான சிந்தனையும் சமூக உணர்வும் உள்ள குடிமகன் உருவாக வாய்ப்பில்லை எனவும், இப்போதுள்ள பாடத்திட்டங்கள் மாணவர்களை அப்படியே படி வேலைக்கு சென்று பொருள் ஈட்டு என்ற சுருக்குவ தாகவும் தனது கவலையை வெளிப்படுத்தி யுள்ளார்". இதன்மூலம் இந்தியாவினுடைய கல்விக் கொள்கை எப்படியுள்ளது என்பது நமக்கு தெளிவாக புலப்படுகின்றது.

* இதுபோன்ற நிலை மாற வேண்டும் என்றால் கல்விக் கொள்கையினை மாற்றி மாணவர்களுடைய பாடத்திட்டங்களில் ஒழுக்கம் மற்றும் வாழ்வியல் நெறி சம்பந்தமான பாடத்திட்டங்களை சேர்த்து போதிக்க வேண்டும். அப்போதுதான் மாணவர்கள் சிறந்த மனிதர்களாவதோடு மட்டுமல்லாமல் சமூக அக்கறையுள்ளவர் களாகவும் மாறுவார்கள்.

* சமூக அக்கறையுள்ளவர்களாகவும், சிறந்த மனிதர்களாகவும் மாறுவதற்கு இவ்விரண்டையும் ஒருசீராக போதிக்கக்கூடிய இஸ்லாமியக் கல்வி முறையை நடை முறைப்படுத்த வேண்டும்.

* இஸ்லாமிய கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதற்காகவும், இஸ்லாத்தி னுடைய மேன்மையை எடுத்துரைப்பதற் காகவும் நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும். இதனை செய்ய வேண்டிய இஸ்லாமிய சமூகமோ எங்கோ சென்று கொண்டு இருக்கின்றது. எனவே, நாளை விடியும் வைகறையின் வெளிச்சத்திற்காக பாதையை இஸ்லாத்தின்வழி மாற்றுவோம். இலட்சியப் பயணத்தைத் தொடர்வோம்.

❖

# தேவை! பல வகைக்கல்வி!

கேப்டன் என்.ஏ.அமீர் அலீ

5 வரை Elementary School

8 வரை Primary School (Middle School)

10 வரை Secondary School

12 வரை Higher Secondary School

என்றெல்லாம் கல்வித் தளங்களைப் பலவகையாகப் பிரித்திருக்கிறார்கள். ஒரு காலத்தில் 10ஆம் வகுப்போடு பள்ளி இறுதி வகுப்பு முடிந்துபோனது. S.S.L.C என்பார்கள். (Secondary School Leaving Certificate) அதற்குமேல் படிக்க வேண்டுமானால் Intermediate என ஒரு தளம் இருந்தது. இதனை F.A. என்று அழைத்தார்கள். (Fellow of Arts) அதற்குள் மேலே B.A. (Bachelor of Arts). காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாக தளங்கள் மாறுவதோடு வலுப்பெற்றும் வந்தன.

அதாவது ஆட்சிகள் மாறும் போதும், கல்வி அமைச்சர்கள் மாறும்போதும், கை வைக்கப்படும் முதல் துறை பெரும்பாலும் கல்வியாகவே இருக்கும்.

இறுதியாக நுழைக்கப்பட்டது சமச்சீர் கல்வியாகும். தமிழகத்தில் வாழ்பவர்கள், அவர்களின் தாய்மொழி எதுவானாலும் (கன்னடமோ, மலையாளமோ, தெலுங்கோ, உருதோ, இந்தியோ எதுவானாலும் சரி) பள்ளியில் பாடமாகத் தமிழ் மட்டுமே கற்க வேண்டும். அவரவர் தாய்மொழியைக் கற்க வேண்டுமானால் தமிழ், ஆங்கிலம் தவிர III Languageஆக பள்ளிகள் கற்றுக் கொடுக்கலாம். ஆனால், அது தேர்வுப் பாடமாக அமையாது. Pass, Fail எல்லாம் கிடையாது. இப்படி இருக்கும்போது யார் அதைப் படிப்பார்கள்?

தமிழை இப்படித்தான் வளர்க்க வேண்டும் என்றில்லை. தமிழ் வாழ்க! என்று அரசு கட்டடங்களில் எழுதிப் போட்டால் போது மானதாக இருக்குமா? ஆங்கிலம் தமிழ்நாட்டில் பரவலாக இருந்தாலும் British Council ஆங்கித்தைப் பிரபலப்படுத்த ஏற்பாடுகள் நிறையச் செய்கின்றது. அதுபோல French மொழியைச் சொல்லித்தர Alliance Francaise துணை நிற்கிறது. Chinese, Japanese மொழி களைக் கற்பதற்கும் தமிழகத்தில் வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதுபோல தமிழுக்காகவும் நாம் முயற்சி செய்தால் தமிழ் தானே வாழும்! வளரும்.

பொதுவாக நம் நாட்டில் பல மொழிகள், பலவகை உணவுப் பழக்க வழக்கங்கள் பல வகை உடுத்தாடைகள், பல்வகைக் கலாச்சாரங்கள் என எல்லாவற்றிலும் பல வகைகள் இருக்கும்போது, ஒரு மொழியை மட்டும் கல்விக் கூடங்களில் படிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துவது நியாயமாகத் தெரியவில்லை.

தமிழகக் கல்வித் தளங்களில் இதுவரை பல வகைப் படிப்பு முறைகள் இருந்து வந்திருக் கின்றன. உதாரணமாக State Syllabus, CBSE, Anglo-Indian, Council for the Indian School Certificate Exam (ISCE), Oriental School for Sanskrit, Arab,Cet ICCST, Cambridge Matric British International இத்யாதி ஒரு காலத்தில் சென்னைப் பல்கலை.யில் Matric இணைந் திருந்தபோது வெறும் 28 மெட்ரிக் பள்ளிகளே இருந்தன. இப்போது த மிழகத்தில் 4000 மெட்ரிக் பள்ளிகள் தமிழக அரசுக் கல்வித் துறையிலிருக்கின்றன.

இவற்றில் பல சமச்சீர் கல்வி அமுல்படுத்தப் படுவதால் CBSEக்கு ஓடிவிட்டன. சமச்சீர் கல்வி அமைப்பை வைத்துக் கொண்டே ஒரு சமாதானம் செய்து கொள்வது கூடும்; இயலும் என நான் கருதுகிறேன்.

Part I - தமிழ்

Paper I - Detailed Study

(இலக்கிய, இலக்கணம் சேர்ந்தது = மதிப்பெண் 100. இது தமிழைத் தாய்மொழி யாகக் கொண்டவர்களுக்கு மட்டும்)

Paper II - Non Detail-ல் பிறமொழி மாணவர்களுக்கு மதிப்பெண் = 50

அவரவர் தாய்மொழி = 50

மொத்தம் 100 மதிப்பெண்.

இதுபோல பிறமொழிகளைத் தாய்மொழி யாகக் கொண்டவர்களும் தமிழையும் அவரவர் தாய்மொழியையும் கற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய முடியும்தானே? ❖

# கஷ்மீரில் அகற்றப்பட வேண்டியது 370ஆ அல்லது 'அப்ஸா' என்ற ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டமா?

"நமது கஷ்மீர் மாநிலத்திற்கு சில சிறப்பான சலுகைகளைத் தருகின்றது அரசியல் சாசனப் பிரிவு 370. இதனை அகற்றிட வேண்டும்" என்றொரு அரசியலை நீண்ட நாள்களாகவே சங்கப் பரிவாரத்தினரும், பாரதீய ஜனதா கட்சியினரும் நடத்தி வருகின்றார்கள்.

இந்த 370ஐ முதலில் நாம் நன்றாகப் புரிந்திட வேண்டும். அதனை புரிந்திட வேண்டும் என்றால் நாம் அதோடு தொடர்புடைய அரசியல் சாசன பிரிவு 371; A, B, C, D, E, F, G ஆகியவற்றைப் புரிந்திட வேண்டும்.

அரசியல் அமைப்பின் பிரிவு 371 : மராட்டிய மாநிலம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு சிறப்பான சலுகைகளைத் தருகின்றது.

பிரிவு 371 A : நாகாலாந்து மாநிலத்தின் சில விவகாரங்களில் நாடாளுமன்றமோ, நமது அரசியல் சாசனமோ தலையிட முடியாது என்று கூறுகின்றது.

பிரிவு 371 B : அசாம் மாநிலத்திற்கு சில சிறப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றது.

பிரிவு 371 C : மணிப்பூர் மாநிலத்திற்கு சில சிறப்புச் சலுகைகளைத் தருகின்றது.

371 D : ஆந்திர மாநிலத்தின் வளர்ச்சிக்காக சில சிறப்பு சலுகைகளை வழங்குகின்றது.

பிரிவு 371 E : ஆந்திரப் பிரதேசத்தில் மத்தியப் பல்கலைக்கழகம் அமைந்திட மத்திய அரசுக்கு அதிகாரம் வழங்குகின்றது.

371 F : சிக்கிம் மாநிலத்திற்கு சில சலுகைகளை வழங்குகின்றது.

371 G : மிசோரம் மக்களின் மதம் மற்றும் சமூக நடைமுறையில் தலையிட சட்டம் இயற்ற எந்த அரசுக்கும் உரிமையும் இல்லை என்கின்றது. அதேபோல் அங்கே மிஜோ குடிமக்களைத் தவிர வேறு யாருக்கும் இடம் வாங்கிட உரிமை இல்லை என்கின்றது.

பிரிவு 371 H : அருணாச்சலப் பிரதேசத்திற்கு சில சிறப்பு ஏற்பாடுகளைச் செய்கின்றது.

இதேபோல் அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 370 கஷ்மீரைப் பற்றிப் பேசுகின்றது. ஆகவே கஷ்மீருக்கு இருப்பது போன்ற சிறப்பு சலுகைகள் இன்னும் பல மாநிலங்களுக்கு இருக்கின்றன. குறிப்பாக நாகாலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்களுக்கு இருக்கின்றன.

இன்னும் சொன்னால் இந்த மாநிலங்களின் நான்கு விவகாரங்களில் மத்திய அரசோ, நாடாளுமன்றமோ எந்த நிலையிலும் தலையிட இயலாது. அந்த மாநிலங்களின் சட்டசபை அங்கீகரித்தாலொழிய அவை :

(i) நாகா மக்களின் மத நடைமுறைகள் மற்றும் சமூக பழக்கவழக்கங்கள்

(ii) நாகா மக்களின் பரம்பரைச் சட்டம் மற்றும் சட்ட நடைமுறைகள்

(iii) சிவில் சட்டங்கள் - கிரிமினல் சட்டங்கள் இவற்றில் நாகா மக்களின் நடைமுறை

(iv) நிலங்களையோ இதர வளங்களையோ வாங்குவது பெயர் மாற்றம் செய்வது. (ஆதாரம் : பார்க்க பிரிவு அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 371 A)இதேபோல் மிசோரம் மாநிலத்திற்கும் இருக்கின்றது 371 G. அதுவே கஷ்மீருக்கும் இருக்கின்றது! கஷ்மீர் விவகாரத்தில் இன்னொரு பிரச்சினை, அது கஷ்மீர் இந்தியாவோடு இணைந்தது.

## கஷ்மீரும் இணைப்பும்

1947ஆம் ஆண்டு நமது இந்தியா ஆங்கிலேயர் களின் பிடியிலிருந்து விடுதலை அடைந்தபோது கஷ்மீரை இராஜ ஹரிசிங் என்ற மன்னர் ஆட்சி

செய்து கொண்டிருந்தார். அவர் தனித்திருக்கவே விரும்பினார்.

1947களில் ஓர் பிரச்னை. அவர் தன் மக்கள் மீது விதித்த வரிச்சுமை தாளாமல் மக்கள் - குறிப்பாக பழங்குடியினர் அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்தார்கள். இந்த கிளர்ச்சிக்கு பாகிஸ்தான் உதவியது என்பது மன்னரின் கணிப்பு. இந்த உள்நாட்டுப் போரிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ள அவர் நமது இந்தியாவின் உதவியை நாடினார்.

நாம் உதவிக்கு ஈடாக இந்தியாவோடு கஷ்மீரை இணைத்திட வேண்டும் என்றோம். நெருக்கடியிலிருந்து தப்பித்துக்கொள்ள இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டார். அந்த நெருக்கடியிலும் இணைப்பு ஒப்பந்தத்தில் இப்படிக் குறிப்பிட்டார்.

"It is my Governments' wish that as soon as Law and Order restored in Jammu and Kashmir and her soil is cleared of the invadar, the question of the state's accession should be settled by a reference to the people. (Refer instrument of accession)"

"இப்போது கஷ்மீரை ஆக்ரமிக்க வந்திருப்பவர்கள் கஷ்மீரை விட்டு வெளியேற்றப்பட்டவுடன் எனது நாட்டின் (கஷ்மீரின்) இணைப்பு என் மக்களை கேட்டு முடிவு செய்யப்பட வேண்டும் என்பது எனது அரசின் ஆசை"

(இணைப்பு ஒப்பந்தம் : 26 அக்டோபர் 1947)

மிசோரமில் இருப்பது போன்று கஷ்மீரிலும் வெளிமாநிலத்தவர்கள் இடங்களை வாங்கி அவற்றில் குடியிருக்க முடியாது. கஷ்மீர் மக்களுக்குச் சிறப்பு சலுகைகளை வழங்கின்றது இது, எனக் குறிப்பிடும் போது இங்கு நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். 1920லேயே கஷ்மீர் மகாராஜா ஹரிசிங் ஏதோ காரணங்களுக்காக தனது கஷ்மீரில் அங்கு குடிமக்கள் அல்லாத எவரும் நிலம் வாங்கவோ விற்கவோ வரக்கூடாது என்றொரு சட்டத்தைப் பிரகடனப்படுத்தி இருந்தார். அந்தச் சட்டமே இன்றளவும் இருந்து கொண்டிருக்கிறது.

இவற்றையெல்லாம் நாம் ஒத்துக்கொண்டோம். அவற்றையெல்லாம் பிரிவு 370இன்கீழ் கொண்டு வந்து கஷ்மீரை நம்மோடு வைத்துக் கொண்டிருக்கின்றோம். இந்தப் பிரிவை அகற்றுவது என்பது கஷ்மீரை பிரித்து விடுவது என்றாகிவிடும்.

இந்தக் கருத்தை சட்ட வல்லுநர்கள் அனைவரும் ஒன்றுபோல் முன்வைக்கின்றார்கள்.

கஷ்மீரை நம்மோடு இணைத்த ராஜா ஹரிசிங் அவர்கள் மட்டுந்தான் என் மக்களை கேட்டுத்தான் இந்தியாவுடனான இணைப்பை இறுதியாக்கிட வேண்டும் என்று கூறிடவில்லை, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித நேரு, ஐக்கிய நாடுகள் சபையில் ஐந்து முறை இந்த வாக்குறுதியைக் கொடுத்தார்.

## கஷ்மீரில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது?

இராணுவமயமாக்கப்பட்ட பூமி

இன்று உலகிலேயே Most Militarised Zone என்றழைக்கப்படுவது கஷ்மீர்தான் 1:7 ஒரு குடிமகனுக்கு ஏழு இராணுவ வீரர் என்ற அளவில் அங்கே இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேட்டின் கணக்குப்படி, ஒரு கஷ்மீர் குடிமகனுக்கு 20 இராணுவ வீரர் என இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இந்த இராணுவம், அங்குள்ள இளைஞர்களையும், சிறார்கள் என்ற மைனர்களையும், கண்ணியமாகத் தொழில் நடத்திக் கொண்டிருக்கும் ஆண்களையும், சிறு விசாரணை என்ற பெயரில் அழைத்துச் சென்று காணாமலாக்கிக் கொண்டிருக்கின்றது. இப்படி காணாமலாக்கப்பட்ட இளைஞர்களின் எண்ணிக்கை 2006 வரை 10,000 என அரசு ஒத்துக் கொண்டுள்ளது.

ஆனால் அங்கு இப்படி காணாமலாக்கப்பட்டவர்களை தேடுகின்ற அமைப்பாகிய APDP என்ற அமைப்பு இவர்களின் எண்ணிக்கை 20,000 என்கின்றது. இவர்களில் 2156 பேர் 98 கூட்டுப் புதைகுழிகளில் புதைக்கப்பட்டிருந்தார்கள் என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. எல்லா நாளிதழ்களிலும் இந்தச் செய்தி வந்திருந்தது.

இப்படி அப்பாவி இளைஞர்களைக் கடத்திச் சென்று கொலை செய்து கூட்டுப் புதைகளில் புதைக்கும் இராணுவத்தினர் மீதும், பெண்களைக் கடத்திச் சென்று கற்பழித்துக் கொலை செய்யும் இராணுவத்தினர் மீதும் நடவடிக்கை எடுக்கவோ,



நியாயம் தேடிடவோ அங்குள்ள மக்களால் இயல வில்லை. காரணம் அங்கே இந்த இராணுவத் தினரை சட்டப்படியான நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கும் சிறப்புச் சட்டம் ஒன்று இருக்கின்றது. இதனை 'அப்சா' ஆயுதங் தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் என்று அழைக்கிறார்கள். Armed Fores Special Power's Act 1958.

இஃதல்லாமல்லாமல் அங்கு இன்னும் இரண்டு ஆட்கொல்லி சட்டங்கள் இருக்கின்றன. அவை

1. ஜம்மு மற்றும் கஷ்மீர் பொது பாதுகாப்புச் சட்டம் 1978 - Jammu & Kashmir Public Safety Act 1978

2. ஜம்மு மற்றும் கஷ்மீர் தொல்லைகளுக் குள்ளான பகுதிகளின் சட்டம் 1992 - Jammu and Kashmir Disturbed Areas Act - 1992

இந்தச் சட்டங்களால் பாதுகாப்பைப் பெறும் இராணுவத்திடம் கணவன்களைப் பறிகொடுத்தப் பெண்கள், "பாதி விதவைகள்" என அழைக்கப்படு கின்றார்கள்.

அத்தனை அநீதிக்கும் உள்ளாகி நிற்கும் அந்த மக்கள் தீர்வு தேடி எங்கேயும் செல்லவில்லை. அவர்கள் நமது காவல்துறை, இராணுவ முகாம்கள், மாவட்ட நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் என்றுதான் அலைந்தார்கள். இங்கெல் லாம் அலைந்ததிலும், லஞ்சமாகப் பணத்தை அள்ளிக் கொட்டியதிலும் தங்களிடம் இருந்ததையெல்லாம் இழந்தார்கள்.

உச்ச நீதிமன்றம் உட்பட அனைத்தும் அப்பட்ட மாக நீதியை மறுத்தன. விரக்தியின் விளிம்பிற்கே சென்றார்கள் அந்த மக்கள்.

தற்கொலை ஒன்றுதான் வழி என்றானது. அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் மார்க்கமாம் இஸ்லாம் அதை அனுமதிக்கவில்லை. திக்கற்ற அவர்கள் மன அழுத்தங்களுக்கு ஆளானார்கள். 2010/11 புள்ளி விவரங்களின்படி 78,000 பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாக வாழுகின்றார்கள். இதனை PTMS - Post Trauma Mental Stress என்கின்றார்கள். Source: Widows & Half widows extra Judicial killings in Kashmir : பார்க்க கஷ்மீரின் பாதி விதவைகள்

ஆக, அப்சாவையும் அகற்றுவோம். இதர ஆள்தூக்கிச் சட்டங்களையும் அகற்றுவோம்.

அநீதிக்கு மேல் அநீதியை இழைத்து அந்த மக்களை அந்நியப்படுத்தும் அநீதியை நிறுத்துவோம்.

நீதியின் வாசல்களைத் திறப்போம். அந்த மக்களை மனத்தால் பிணைப்போம். ❖

# கோவை முஸ்லிம்களின் 300 ஆண்டுகால வரலாற்றுப் பொக்கிஷமான 'பெட்டகம்' ஆசியரைப் பற்றி...

ஜனாப் எம்.அமீர் அல்தாஃப் அவர்கள் குமரி மாவட்டம் ஆளுரில் 01.04.1953ல் பிறந்து சென்னைப் புதுக் கல்லூரி மற்றும் பச்சையப்பன் கல்லூரியில் உயர் கல்வி பயின்றவர்.

மத்திய அரசு நிறுவனமான தேசிய பஞ்சாலைக் கழகத்தில் நிதித்துறை மேலாளராக 38 ஆண்டுகாலமாக பணியாற்றி பணிமூப் பெய்தவர்.

முஸ்லிம் முரசு, மணிவிளக்கு, அறமுரசு, சமரசம், சமநிலைச் சமுதாயம், அல்-இஸ்லாம், கூவ்வத், அல்-ஹிதாயா, நம்பிக்கை மற்றும் இஸ்லாமிக் வாய்ஸ் முதலிய இதழ்களில் கட்டுரை, கவிதை மற்றும் சிறுகதைகளை எழுதியுள்ளார்.

கோவை மக்கா மஸ்ஜிதில் பத்து ஆண்டு காலமாக தலைவராக இருந்தபொழுது தமிழகத் திலேயே முதன்முறையாக பள்ளிவாசலில் கணிப்பொறி மையம் ஒன்றை ஏற்படுத்தி 1500க்கும் அதிகமான இளைஞர்கள் கணினி பயிற்சி பெற்றதோடு வேலை வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

கோவை மாட்ட ஐக்கிய ஜமா அத்தின் நிறுவனத் தலைவராக பத்து ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். 2003 முதல்2013 வரை சுமார் 25 கல்வி வழிகாட்டு முகாம்கள் நடத்தி கோவை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பணியாற்றியுள்ளார்.

கோவை திருக்குர்ஆன் அறக்கட்டளையின் பொதுச் செயலாளராாக 2002 முதல் தொடர்ந்து பொறுப்பு வகித்து வருகிறார். இதன்மூலம் தமிழகம் முழுவதும் சுமார் 80,000 திருக்குர்ஆன் தமிழ் பிரதிகள் சகோதர சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தமிழகத்திலேயே முதன்முறையாக முஸ்லிம் மகளிருக்கென பாரதியார் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சமுதாயக் கல்லூரியின் நிறுவன இயக்குநரும் ஆவார்.

இக்கல்லூரியில் தகவல் தொழில்நுட்பத்தில் மூன்று பட்டயப் படிப்புகளில் ஏராளமான முஸ்லிம் மாணவிகள் பயின்று வருகிறார்கள்.

கோவை அன்சாரிய்யா அரபிக் கல்லூரியின் மூலம் வெளியிடப்படும் 'இஸ்லாமிய வரலாற்றுப் பெட்டகம்' என்ற மாத இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இஸ்லாமிய கிரந்தங்களை தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் சொல்லும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட புதிய சமுதாயம் என்ற அறக்கட்டளையின் நிறுவனத் தலைவராகும் இவ்வறக்கட்டளையின் மூலம் பத்தாயிரம் பக்கங்களைக் கொண்ட ததுப்புருல் குர்ஆனின் (அருள்மறை ஆய்வுரை) முதற் பாகம் 15.06.2014 அன்று கோவையில் வெளியிடப்பட்டது.

வான்மறைக் குர்ஆனின் எழுத்தியல் அற்புதம் என்ற ஆய்வினை கடந்த 25 ஆண்டுகளாக மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வு இன்ஷா அல்லாஹ் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத் தோடு விரைவில் வெளிவர இருக்கிறது.

2011ஆம் ஆண்டு நடைபெற்ற கோவை மாமன்றத் தேர்தலில் கோவை முஸ்லிம்களின் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டு மூன்றாம் இடத்தைப் பெற்றார்.

## கௌரவித்த நிறுவனங்கள்

திவ்யோதையா பல்சமய நிறுவனம் - கோவை

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி - கோவை

ரோட்டரி கிளப் - கோவை

பிலாலியா அரபிக் கல்லூரி - சென்னை

அனூரத் பல்சமய உறவு மையம் - கோவை

## விருதுகள்

சிறந்த கல்வி சேவைக்கான விருது - கோவை ஐக்கிய ஜமாஅத்

சிறந்த சமூக சேவகர் விருது 2013 - கேரளா சோஷியல் வெல்ஃபேர் பவுண்டேஷன்

சமூக சிந்தனையாளர் விருது 2014 - அன்சாரிய்யா அரபுக் கல்லூரி கோவை

ஷேக் சதக்கத்துல்லாஹ் அப்பா விருது மற்றும் இலக்கியப் பரிசு 2014 - இஸ்லாமிய ஆய்வுப் பண்பாட்டு நிலையம், சீதக்காதி அறக்கட்டளை

❖

# மல்லிப்பட்டிணம் முஸ்லிம் இளைஞர்கள் மீது கொலைவெறி தாக்குதல்

# மதக்கலவரத்தை தூண்டிவிட துடிக்கும் இந்துத்துவ பயங்கரவாதிகள்

**எச்.முகமது இக்பால் B.E., ரிஸ்வான்**

**த**ஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகாவிலுள்ளது மல்லிப்பட்டிணம் என்னும் கடற்கரைக் கிராமம். இங்கு வசிப்பவர்கள் அதிகமானோர் முஸ்லிம்கள். இங்கு முஸ்லிம்களும் இந்துக்களும் நல்ல சகோதர பாசத்துடன் ஒருவர் நிகழ்ச்சிக்கு மற்றொருவர் செல்லுமளவு, அன்னியோன் னியமாகப் பழகி வந்தார்கள்.

இந்நிலையில் தொழில்முறைக் குற்றவாளி யான (habitual offender) கருப்பு என்னும் முருகானந்தம், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளராக நின்றார். இவர் கடந்த காலங்களில் முத்துப்பேட்டை போன்ற முஸ்லிம்கள் அதிகமாக வாழும் வூர்களில் மதக் கலவரத்தைத் தூண்ட முயன்றுள்ளார். இது வரை இவர் மீது சுமார் 20 வழக்குகள் பதியப்பட்டுள்ளது. இப்படியொரு கொடூரப் பின்னணியைக் கொண்ட கருப்பு, மே மாதம் 14ம் தேதி மல்லிப்பட்டிணத்?திற்கு வாக்கு சேகரிக்க வருகிறார் என்ற தகவல் முதல் நாள் ஊர் மக்களுக்குக் கிடைத்துள்ளது. இந்தத் தகவல் கேட்டதிலிருந்து நிம்மதியிழந்த ஊர் மக்கள், இப்படியொரு நபரை ஊரில் அனுமதித்தால் ஏதாவது விபரீதத்தை உண்டாக்கி விடுவார், மேலும் அண்ணன் தம்பிகளாகப் பழகி வரும் இந்து சகோதரர் களுடன் சண்டையிடும் சூழலை உண்டாக்கி விடுவாரென்று பயந்து, இவரை ஊருக்குள் வர விடக்கூடாது என்று அவருடைய வருகையைத் தடுக்க நினைத்து, 14.4.2014 காலை சுமார் 7 மணியளவில் நிராயுதபாணி யாக கையில் எந்த ஒன்றும் இல்லாமல் பள்ளிவாசலருகே ஒன்று கூடியுள்ளனர். அப்பொழுது 6 காவலர்கள் மட்டுமே அங்கிருந்துள்ளனர்.

இந்தத் தகவல் கிடைத்த கருப்பு தரப்பினரும், கலை 9 மணிக்கு ஊருக்குள் வர வேண்டிய தங்களுடைய முடிவை மாற்றி, 11 மணியளவில் சுமார் 600 பேருடன் கையில் ஆயுதங்களுடன், கலவரமுண்டாக்க வேண்டு மென்ற எண்ணத்துடனேயே அங்கு வந்துள்ளனர். இவர்கள் 600 பேர் கையில் ஆயுதங்களுடன் வரும் தகவல் கிடைத்த பிறகும் அதே காவலர்களே அங்கு பணியி லிருந்துள்ளனர். கருப்புத் தரப்பினர் ஊருக்குள் நுழைய முற்படும் போது, அதை ஊரிலுள்ள வர்கள் எதிர்க்கின்றனர். அந்த 6 காவலர்களும் இரு தரப்பையும் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருக்கும் போதே, இரு தரப்பிலிருந் தும் கற்கள் பாயத் தொடங்கியுள்ளது. அதில் சிலருக்கு காயமுண்டானது. ஊரில் களேபரமானவுடன் கருப்புத் தரப்பினர், இந்துக்கள் அதிகம் வாழும் மில் ரோடு பேருந்து நிறுத்தம் வழியாக ஓட்டுக் கேட்க சென்றுள்ளனர். அப்படி அவர்கள் செல்லும் போதே, கடற்கரையோரம் கட்டப்பட்டிருந்த முஸ்லிம்களுக்குச் சொந்தமான படகுகளை ஓட்டையிட்டும், எரித்தும், அருகிலிருந்த மரைக்காயருக்குச் சொந்தமான பெட்ரோல் பங்கை சேதப்படுத்தியும் அதிலிருந்த ரூபாய் 2 லட்சத்தைக் கொள்ளையடித்தும் சென்றுள் ளனர். அப்பொழுது படகைப் பறிகொடுத்த

ஹபீப் மற்றும் பெட்ரோல் பங்கின் உரிமையாளர் மரைக்காயர் இருவரும் சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்திற்க்கு புகார் கொண்டு சென்ற போது, அவர்களிருவரும் அங்கு மிரட்டப்பட்டனர்.

இந்தக் களேபரங்களெல்லாம் முடிந்த பின், முஸ்லிம்கள் வழக்கம் போல் தங்களது தொழுகையை நிறைவேற்ற பள்ளிக்குச் சென்றுள்ளனர். அந்நேரம் அங்கு வந்த போலீஸ் படை, பள்ளியின் வாசலில் நிறுத்தி யிருந்த இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை அடித்து, உடைத்து கலவரக் காரர்கள் போல துவம்சம் செய்துள்ளனர்.

அத்துடன் தொழுகை முடித்து பள்ளியி லிருந்து வந்தவர்களை, தாங்கள் அரசு ஊழியர்கள் என்பதை மறந்து கருப்பின் ஆட்கள் அடிப்பது போல அந்தப் போலீஸ் படை அடிக்கத் துவங்கினர். அதில் 13 வயது சிறுவனொருவனுக்கு மண்டையுடைந்து ரத்த வெள்ளத்தில் அங்கேயே மயங்கி விழுந்துள்ளான். அத்துடனில்லாமல் பள்ளியை வெளிப்பக்கம் பூட்டியுமுள்ளனர்.

**தொழுதால் கைது**

அத்துடனில்லாமல் தொழுதுவிட்டு வந்த சுமார் 56 பேரை வேனில் ஏற்றி காவல் நிலையத்திற்க்கும் அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பிறகு சிலரின் தலையீட்டால் 35 பேரை விடுவித்து விட்டு 21 பேரை கைது செய்துள்ளனர்.

கையில் ஆயுதங்களுடன் வந்தவர்களை பத்திரமாக அனுப்பி விட்டு, தொழுது விட்டு வந்தவர்களை கைது செய்துள்ளனர். இந்த அநியாயம் அரங்கேறியுள்ளது. இது சம்பந்தமாக சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்தில் வழக்கு (குற்ற எண்: 62/14 தேதி: 14.4.2014) பதிவாகியுள்ளது. இதில் இ த ச 307 (கொலை முயற்சி) பிரிவையும் சேர்த்துள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக 16.4.2014 அன்று கோட்டாட்சியர் தலைமையில் இரு தரப்பினரையும் அழைத்து சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையில் வீரையன் என்பவர் "கருப்பு ஊருக்குள் வரமாட்டேநென்று தான் சொன்னார். இந்த தாஜுதீன் தான் அவரை வம்பிழுத்துக் கூட்டிச் சென்றார்" என்று வெளிப்படையாகவே குற்றம் சுமத்தியுள்ளார். அந்த AKD தாஜுதீன் இன்னும் கம்பீரமாக ஊருக்குள் உலவிக்கொண்டுதானிருக்கிறார். அப்பொழுது மீண்டும் தங்கள் புகார் குறித்து படகைப் பறிகொடுத்த ஹபீப் மற்றும் பெட்ரோல் பங்கின் உரிமையாளர் மரைக்காயர் இருவரும் கோட்டாட்சியர் முருகேசனிடம் கூறிய போது, அவர் அந்தப் புகார்களின் மீது வழக்குப் பதிவு செய்ய போலீசாருக்கு அறிவுறுத்தியுள்ளார். அந்த அறிவுறுத்தலின் பேரில், சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்தில் வழக்குகள் (குற்ற எண்: 65/14 மற்றும் 66/14 தேதி: 19.4.2014) பதிவாகியுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் கொடுக்கும் புகார்கள் மீது வழக்குப் பதிவு செய்யக் கூட கோட்டாட்சியர் துணை வேண்டுமென்பது மிகப் பெரிய கொடுமை. கலவரத்துக்குக் காரணமான கருப்பு மற்றும் AKD தாஜுதீன் மீதும் இன்று வரை எந்த வழக்குமில்லை.

**மீண்டும் தாக்குதல்**

அதன் பிறகு 28.5.2014 அன்று இரவு சுமார் 9 மணியளவில் முஸ்லிம் இளைஞர்கள் சிலர் இரவுத் தொழுகையை முடித்துவிட்டு கொடி மரம் அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந் தனர். அப்பொழுது அங்கு மோடியின் படமும், கருப்புவின் படமும் பொறித்த இருசக்கர வாகனத்தில் காவித் தலைப்பாகை யுடன் கையில் ஆயுதங்களுடனும் வந்த சுமார் 11 பேர் கொண்ட கும்பல், அந்த முஸ்லிம் இளைஞர்களை அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களுடன், எங்க அண்ணன் கருப்ப ஊருக்குள்ள விட மாட்டீங்களாடா என்று சொல்லியவாரே கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர் (அவர்கள் சொன்னதில்

முக்கியமான வாசகம், ஐந்து வருசங்களுக்கு நாங்க தாண்டா, குஜராத்துல எங்க நமோ (நரேந்திர மோடியின் - முதல் எழுத்துக்கள்) பண்ணுனத இனி இந்தியா முழுசும் பண்ணுவோம் என்பதே). இதில் ஐந்து பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டு, ஒருவர் அபாயக்கட்டத்தைத் தாண்டியுமுள்ளார். இது சம்பந்தமாக 10 பேரை குற்றவாளிகளாக்கி சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்தில் வழக்கு (குற்ற எண்: 95/14 தேதி: 29.5.2014) பதிவாகி யுள்ளது.

அதன் பிறகு 25.5.2014 அன்று கொள்ளுக் காடு, புதுப்பட்டிணத்தில் ரெங்கசாமி என்பவர் சொந்தப் பிரச்சினை காரணமாகத் தாக்கப்பட்டார். தன்னைத் தாக்கியவர்கள் தன்னுடைய சொந்தக்காரர்கள் தான் என்று சிலரை அவர் அடையாளம் காட்டியும், தன்னைத் தாக்கியது முஸ்லிம்கள்தானென்று போலீசார் வலுக்கட்டாயமாக அவரிட மிருந்து புகாரைப் பெற்று, அதன் பேரில், அப்துல்லாஹ், முகம்மது மாலிக் மற்றும் சிலரை குற்றவாளிகளாக்கி சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்தில் வழக்கு (குற்ற எண்:98/14 தேதி: 01.6.2014) பதிவாகி யுள்ளது.

இதையெல்லாம் மீண்டும் விசாரித்து வரலாமென்று நாம் 6.6.2014 அன்று மல்லிப் பட்டிணம் சென்றோம்.அன்று வெள்ளிக் கிழமையாதலால் ஜும்மா முடித்து விட்டு மக்களைச் சந்திக்கலாமென்று பள்ளியிலேயே இருந்து விட்டோம். தொழுகை முடிந்ததும் பள்ளியின் நிர்வாகத்தினரிடம் பேச முயன்றால் அவர்கள் நம்மிடம் பேசுவதைத் தவிர்த்தனர். அதன் பின் வேறு சிலரைத் தொடர்பு கொண்டு தகவல்களை சேகரித் தோம். இதனிடையில் சாப்பிட செல்லும் போது ஒரு காவல் அதிகாரி நம்மிடம் ஐயா உங்களை துணைக் கண்காணிப்பாளர் அழைக்கிறாரென்று கூறி கூட்டிச் சென்றார். அங்கு சென்ற பொழுது AC சௌந்தர




பாண்டியன் என்னும் காவல் அதிகாரி நம்மைக் குறித்து விசாரித்தார். நம்முடைய பத்திரிக்கையின் அடையாள அட்டையைப் பார்த்த பின்னும் திருப்தியடையாத அந்த அதிகாரி, வேறு ஏதாவது அடையாள அட்டையுள்ளதா என்று கேட்ட உடன், நாம், வேறு அடையாள அட்டையைக் காண்பித் தோம். அந்த அட்டையில் நம்முடைய கழுத்தில் மச்சமுள்ளது பதிவாகியுள்ளது (Mole on Neck). அதைப் பார்த்த அவர் நம்முடைய தாடியை நீக்கி அதைக் காண்பிக்க நிர்பந்தப்படுத்தினார். அப்பொழுது அவரிடம் எல்லாப் பத்திரிக்கையாளர் களிடமும் இது போல் அங்க அடையாளங் களைச் சேகரிப்பீர்களா என்று வினவிய போது, யார் மீதெல்லாம் சந்தேகமுள்ளதோ, அவர்களிடம் இது போல் அங்க அடையாளங் களைச் சேகரிப்போமென்றார். முஸ்லீமென்ற ஒரே காரணாத்திற்க்காகவே அவர் நம்மிடம் இப்படிச் செய்தார். அங்க அடையாளங் களைச் சேகரிப்பது சட்ட விரோதமானது என்று தெரிந்தே தான் இப்படிச் செய்கிறார்.

அது முடித்துப் பள்ளிக்கு வந்த நமக்கு இன்னும் பேரதிர்ச்சிக் காத்திருந்தது. காரணம் பள்ளியின் வராண்டா முழுவதும் குறைந்தது 25 - 30 போலீசார், பெண் போலீசார் உட்பட அலைபேசியில் உரையாடிக்கொண்டும், தூங்கிக் கொண்டும், உள்ளாடை கூட மாற்றும் அவலமும் அரங்கேறியது. புனிதமான

பள்ளிவாசல்கள் போலிசாரின் புகலிடமாகிவிட்டதே என்றெண்ணி, நொந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினோம்.

இப்பொழுது நமக்கு சில கேள்விகள் இயல்பாய் எழுகின்றது

*1.* 600 பேர் கையில் ஆயுதங்களுடன் வரும் செய்தி தெரிந்தும், கலவரச் சூழல் உண்டான பிறகும் பாதுகாப்பை பலப்படுத்தாதது ஏன்?

*2.* துணைக் கண்காணிப்பாளரோ அல்லது கண்காணிப்பாளரோ அல்லது வேறு யாரேனும் இப்படியொரு சம்பவம் நடப்பதை விரும்பினார்களா?

*3.* புகார் கொடுக்க வருபவர்களை மிரட்டச் சொல்லி எந்த சட்டம் அதிகாரமளித்துள்ளது?

*4.* கோட்டாட்சியர் அறிவுறுத்தினால் தான் புகார்கள் ஏற்கப்பட்டு வழக்குகள் பதியப்படும் என்றொரு புதிய முயற்சி சேதுபாவா சத்திரம் காவல் நிலையத்திலிருந்து ஆரம்பமாகிறதோ?

*5.* பாதுகாப்புக்கு வரும் போலீஸ் படை ஊருக்குள் வந்தவுடன், கைதேர்ந்த பேட்டை ரௌடியைப் போல் கண்ணில் கண்ட வாகனங்களை உடைத்து சேதப்படுத்த யார் உத்தரவிட்டது?

*6.* பள்ளியில் தொழுகை முடித்து வருபவர்களை அடிக்க யார் அனுமதியளித்தது?

*7.* சிறுவன் மண்டையை உடைத்ததோடல்லாமல் முகத்திலும் குத்தியது யார்?

*8.* சட்ட விரோதமாக நடந்து கொண்ட அந்த போலீஸ் படை மீது ஏன் இன்னும் நடவடிக்கையெடுக்கவில்லை?

*9.* வீரையன் என்பவரால் வெளிப்படையாகவே குற்றம் சுமத்தப்பட்ட, கலவரத்திற்கு காரணமான கிரிஜி தாஜுதீன் மீது இன்னும் நடவடிக்கையெடுக்காதது ஏன்?

*10.* முஸ்லிம் இளைஞர்களைத் தாக்க வந்த கும்பல் போலீசாருக்குத் தெரியாமல் தான் வந்தனரா?

*11.* பாதுகாப்பு அவ்வளவு பலவீனமாக இருந்ததா?

*12.* ரெங்கசாமி என்பவர் சொந்தப் பிரச்சினை காரணமாகத் தாக்கப்பட்டதாக புகாரளித்தும், ஏன்? போலீசார் வலுக்கட்டாயமாக "தன்னைத் தாக்கியது முஸ்லிம்கள் தானென்று" புகாரளிக்க அவரை நிர்ப்பந்தித்தனர்?

*13.* மல்லிப்பட்டிணத்திற்கு செய்தி சேகரிக்க வரும் பத்திரிக்கையாளர்களை, சட்ட விரோதமாக அங்க அடையாளங்கள் சேகரிக்க AC சௌந்தரபாண்டியன் என்னும் காவல் அதிகாரிக்கு அனுமதியளித்தது யார்?

*14.* முகைதீன் ஜிம்மா பள்ளிவாசலில் போலீசார் அதிகாரம் செலுத்த யார் உத்தரவிட்டது?

*15.* எல்லாவற்றுக்கும் மேலாக, குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறை செல்ல எல்லா தகுதியுமிருந்தும், கருப்பு என்னும் முருகானந்தத்தை கைது செய்யாமல் வெளியில் உலவ விட்டுருப்பதின் மர்மம் என்ன? ❖

தமிழன்
தமிழன் தொலைக்காட்சியில்
தர்க்குல் குர்ஆன்
வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர்
மௌலவி இல்யாஸ் ரியாஜி
திருக்குர்ஆன் விரிவுரை நிகழ்த்துகிறார்.
வாரந்தோறும் செவ்வாய்க் கிழமை
இரவு 10 மணி முதல் 10.30 வரை
தமிழன் தொலைக்காட்சியில்
ஒளிபரப்பாகிறது.
காணத் தவறாதீர்கள்.
தொடர்புக்கு : 98418 98044
காயல் தர்வேஷ்

# ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா நினைவு இலக்கியப் பரிசு (ரூ.1,00,000)




**ஷெ**ய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா நினைவு விழா 21.06.2014 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நுங்கம்பாக்கம் கிரஸ்சன்ட் பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு அல்ஹாஜ் எம்.கே.சதக் அப்துல் காதிர் சீதக்காதி அறக்கட்டளை மற்றும் இஸ்லாமிய ஆய்வு பண்பாட்டு நிலையத்தின் மேனேஜிங் டிரஸ்டி தலைமை ஏற்று பரிசுகள் வழங்கி வாழ்த்துரை ஆற்றினார். அல்ஹாஜ் பி.எஸ்.எம்.செய்து அப்துல் காதிர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

இவ்விழாவில் 2014ஆம் ஆண்டிற்கான ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா நினைவு இலக்கியப் பரிசு (ரூ.1,00,000) ஜனாப் எம்.அமீர் அல்தாப் (பொதுச் செயலாளர் திருக்குர்ஆன் அறக்கட்டளை, தலைவர் புதிய சமுதாயம் அறக்கட்டளை) அவர்களுக்கும், கேப்டன் என்.ஏ.அமீர் அலி அவர்களுக்கு கல்வி மற்றும் எழுத்துத் துறையில் நீண்ட கால சேவை ஆற்றியதற்காக வாழ்நாள் சாதனையாளர் என பாராட்டி (ரூ.1,00,000) பரிசு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் அல்ஹாஜ் கவிக்கோ அப்துல் ரஹ்மான் முன்னாள் வக்ஃபு வாரிய தலைவர் சிறப்புரை ஆற்றினார்.

இலக்கியப் பரிசு பெற்ற கோவை முஸ்லிம்களின் 300 ஆண்டு கால வரலாற்றுப் பொக்கிஷமான பெட்டகம் எனும் நூலைப் பற்றி டாக்டர் அல்ஹாஜ் எம்.அப்துஸ் ஸமது கருத்தராவுத்தர் கல்லூரி உத்தமபாளையம் அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.

அல்ஹாஜ் வி.என்.ஏ.ஜலால் (பி.எஸ்.ஏ. அப்துற் ரஹ்மான் பல்கலைக்கழகம்) நன்றி உரையோடு விழா இனிதே முடிவுற்றது.

விழா நிகழ்ச்சியை ஜனாப் எம்.கே.ஈ.உமர் அப்துல் காதர் அவர்கள் தொகுத்து வழங்கினார்கள். இந்நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர்கள், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், மார்க்க அறிஞர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். ❖

## சிறுபான்மையினர் தத்தளிக்கின்றார்கள்:

# தமிழகத்தில் அப்பாவி கிருஸ்தவர்கள் மீது தாக்குதல்

இந்து முன்னணியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டு அந்த சவ ஊர்வலம் கடந்த 19.6.2014 அன்று கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு அம்பத்தூர் மண்ணூர் பேட்டையிலுள்ள அவரது வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அந்த சவ ஊர்வலத்தில் இந்திய அரசியல் சாசனத்தை வெறுப்பவர்களுக்கும், இந்தியக் குடியாட்சியைக் குழி தோண்டிப் புதைக்க நினைப்பவர்களுக்கும் மதக் கலவரங்களை உண்டாக்கி அதன்மூலம் சிறுபான்மையினரை கறுவருக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட சமூக விரோதிகளும் மற்றும் ஈவு இரக்கமில்லாமல் சிறுபான்மையினரை அடித்து துன்புறுத்திக் கொல்ல வேண்டும் என்ற தீவிரவாத பயிற்சி பெற்றவர்களும் கலந்து கொண்டுள்ளனர்.

அவர்கள் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ மனையிலிருந்து கிளம்பும் முன்னரே, மருத்துவமனை வாயிலிலேயே தன் அம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து வந்த அப்பாவி ஏழை முஸ்லிம் வாலிபரை எந்தக் காரணமுமில்லாமல் தாக்கியுள்ளனர்.

அதன்பின்னர் அந்த சவ ஊர்வலம் சென்ற எல்லாப் பாதைகளிலும் மாநகரப் பேருந்துகள், இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள், பூட்டியிருந்த மற்றும் திறந்திருந்தக் கடைகள், சாலையில் நடந்து செல்வோர் மற்றும் சாலையில் நின்றிருந்த வர்களைத் தாக்கியுள்ளனர்.

அவர்கள் வந்த இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் மாட்டியிருந்த கட்சி சின்னம் பொறித்த கொடிகள் கம்புகளிலும், கையிலிருந்த கொடிகள் இரும்பு ராடுகளிலும் கட்டப்பட்டிருந்தது.

அமைந்தகரை அருகே அந்த ஊர்வலம் செல்லும்போது, மார்க்கெட் அருகே நின்றிருந்த முஸ்லிம் பெண்களைப் பார்த்து, அந்த ஊர்வலத்தில் வந்த தீவிரவாத பயிற்சி பெற்ற பெண்கள், முஸ்லிம் பெண்களையும், அவர்கள் அணிந்திருக்கும் பர்தாவையும் இஸ்லாத்தையும், மிகவும் கேவலமாகப் பேசியதோடு கையிலிருந்த இரும்பு ராடு களால் அடித்துக் கொல்ல முயன்றுள்ளனர். அதைப் பார்த்து பொங்கியெழுந்த பொது மக்கள் தலையிட்டு அந்தப் பெண்ணைக் காப்பாற்றியுள்ளனர்.

அதன்பின்னர், அந்தக் கொலைகார கும்பல் மார்க்கெட் அருகிலுள்ள ஒரு கிறிஸ்தவ தேவாலயத்தையும், அதன் ஊழியர்களையும் அடித்து துவம்சம் செய்துள்ளார்கள். அதன் போதகர் T.D.லாசரைக் கொலை செய்ய முயன்றுள்ளனர். அவருடனிருந்த இதர கிருஸ்தவ சகோதரர்கள் அவரைக் காப்பாற் றியதால் அவர் பிழைத்துக் கொண்டார். அவரைக் கொல்ல முடியாத ஆத்திரத்தில் அவருடைய காரை அடித்து உடைத்து நொறுக்கியுள்ளனர். இது தொடர்பாக அவர் காவல் துறையில் புகார் செய்துள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயத்தையும் அதன் ஊழியர்களையும் துவம்சம் செய்துவிட்டு அந்தக் கும்பல் அங்கிருந்து சென்றபின்னர், அங்கு வந்த கே3 அமைந்தகரை காவல் துணை “ஆய்வாளர் முருகன்” அங்கிருந்த ஊழியர்களையும் மற்றும் போதகர் லாசரை யும் கேவலமாகப் பேசியும் அடித்தும், கைது செய்து விடுவேன் என்று மிரட்டியுமுள்ளார். ஆய்வாளர் முருகனின் செயல்களை விவரித்த அங்கிருந்த கிருஸ்தவ சகோதரர்கள், “முருகன் ஏதோ நாங்கள் தாம் தவறு செய்து விட்டோம் என்பதுபோல் நடந்து கொண்டார்” என்றார்கள்.

தொடர்ந்து ஊர்வலத்தில் சென்றவர்கள், செல்லும் வழியெங்கும் காட்டுமிராண்டி தர்பாரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இவ்வளவும் காவல் துறையினர் உடனிருக்கும் போதுதான் நிகழ்ந்துள்ளது.

இதுபோல நாகர்கோயிலிலும் இந்தக் கொலைகாரக் கும்பல் கொலைவெறித் தாக்குதலை அரங்கேற்றியுள்ளனர். அதன் விளைவாக பைசல் என்ற முஸ்லிம் வாலிபர் ஆசாரிப்பாளையம் மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் சேர்க்கப் பட்டார்.

மேலும் பல விரும்பத்தகாத சம்பவங்கள், குறிப்பாக முஸ்லிம்களுக்கெதிரான சம்பவங்கள் நடந்தேறியுள்ளது.

இந்த வன்முறைக் கூட்டத்தைப் பற்றி நன்றாகவே தெரிந்திருந்தும், இவர்களுக்கு ஏன் இந்த சவ ஊர்வலத்திற்கு அனுமதியளிக் கப்பட்டது? இந்தக் களேபரங்களுக்கு யார் பொறுப்பேற்பது?

சவ ஊர்வலம் தொடங்கும்முன் மருத்துவ மனை வாயிலில் ஒருவரைத் தாக்கும்போதே, இவர்களை கலைத்திருக்கலாமே! அத்துடன் அனுமதியையும் ரத்து செய்திருக்கலாமே!

இவர்கள் வன்முறையைக் கையிலெடுக்கும் போதே, இவர்களை தடுத்துநிறுத்தி கைது செய்திருக்கலாமே.

துணை ஆய்வாளர் முருகன் மத துவேசத்தோடு ஏன் நடக்க வேண்டும்?

பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய காவல் துறை ஏன் அன்று மௌனம் காத்தது? ❖


தாலிபானின் பிடியில்...

யுவான்னி ரிட்லி

தமிழில் : மு.குலாம் முஹம்மத்



இரண்டாம் பதிப்பு
பிப்ரவரி 2013
பக்கங்கள் : 202
விலை : ரூ. 90/-

இப்போது கிடைக்கிறது....

வெளியீடு
வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது தளம், மண்ணடி,
சென்னை-1. Tel: 044-81481 29887

இறைவனின் அழகிய வழிகாட்டுதல்
அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில்
எப்படி வாழ வேண்டும்?


இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

தாருஸ் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்
52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி, அறை எண் 7,
மண்ணடி, சென்னை-1.

இந்த இலவச விநியோகம்
முஸ்லிம்களுக்கு அல்ல.

# சாதி ஒழிந்தது




வெளிவந்துவிட்டது ஐந்தாம் பதிப்பு

12,000 பிரதிகளைக் கடந்து இந்த நூல் வெளிவந்து கொண்டிருக்கின்றது. 31 அறிமுக விழாக்கள்வழி தமிழகத்தின் 32 மாவட்டங்களிலும் இதன் ஆழிய கருத்துக்கள் விவாதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன. எண்ணற்றோர் தங்கள் ஜாதியை, இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஒழித்துள்ளனர். எல்லாப் புகழும் இறைவனுக்கே!

இந்த நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு டெல்லியில் 2010ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

ஆங்கில மொழிபெயர்ப்பை படித்தவர்கள் இந்த நூல் ஹிந்தி மொழியில் வெளிவந்திட வேண்டும் என விரும்பினார்கள். ஹிந்தி மொழியிலும் வெளிக் கொணர்ந்தோம். அதனை உத்திரப் பிரதேச மாநிலத்தின் தலைநகர் லக்னோவில் 2012ஆம் ஆண்டு வெளியிட்டோம். ஹிந்தி பேசும் நல்லுகமெல்லாம் அது தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது.

லக்னோவிலுள்ள டாக்டர் அம்பேத்கர் மத்திய பல்கலைக்கழகம் இந்த நூலில் காட்டிய ஆர்வமும் அக்கறையும் பாராட்டிற்குரியன.

ஹிந்தி மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து கன்னட மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது இந்த நூல். (அல்ஹம்துலில்லாஹ்ஸ்ரீ

பாட்னாவில் (பீகார் மாநிலத்தின் தலைநகர்) 2012, 2013 புத்தகக் கண்காட்சியில் நூலரங்கத்தில் தொடர்ந்து இரண்டாட்டுகள் இந்த நூல் விவாதத்திற்கு வந்தது குறிப்பிடத்தக்கது.

நமது சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத் துறையில் இந்த நூல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சகோதரி ஆர்.மேனகா என்ற மாணவி, இந்த நூலையும் இன்னும் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்களின் இதர நூல்களையும் மையமாகக் கொண்டு (எம்.ஃபில்.) முதுநிலை ஆய்வுப் பட்டத்தைப் பெற்றுள்ளார். இது இந்த நூலின் பயனை இன்னும் விரிவுபடுத்தியது, பெரிதுபடுத்தியது.

## எதிர் கருத்துக்கள்

இந்த நூல் தொடர்ந்து ஏற்படுத்தி வரும் தாக்கங்களைத் தடுத்து நிறுத்திட எதிர்ப்போர் மேற்கொள்ளும் முயற்சிகள் பலப்பல. அவற்றுள் ஒன்றுதான் மிகைத்த வேகத்தோடு பரவலாக்கப்படும் கருப்பாயி என்ற நூர்ஜகான் என்ற நாவல் எழுதியவர் அன்வர் பாலசிங்கம் என்பவர்.

கருப்பாயி என்ற நூர்ஜகான் நாவலில் சொல்லப்பட்ட கருத்துக்கள் என்றால் அதனை களைந்திட ஓர் இளைஞர் பட்டாளத்தைத் தயார் செய்திட வேண்டும் என்ற இலக்கோடு நாவலில் குறிப்பிடத்தக்க பகுதிகளுக்கு நான், அண்ணன் உமர் ஃபாரூக், நாகர்கோவிலைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் ஜின்னா, ஷமீம், மாஹின், பாசித், நண்பர் குமாரசாமி ஆகியோர் சென்றோர்ம.

ஜமுக்காளத்தில் வடிகட்டின பொய் ஒன்றுதான் நாவலாகத் தரப்பட்டிருந்தது என்பதைக் கண்டறிந்தோம். நாவலில் ஐந்து பேர் தற்கொலை செய்ததாக வருகின்றது. அப்படி ஒரு தற்கொலைகூட நடக்கவில்லை என்ற உண்மைகளையெல்லாம் கண்டறிந்தோம்.

தஞ்சையைச் சேர்ந்த பசு.கௌதமன் அவர்கள் இதற்கென ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கம் ஒன்றில், அன்வர் பாலசிங்கம் அவரிடமே நேரடியாக கூறி அவரது சாயத்தை வெளுக்கச் செய்தார்கள். அண்ணன் டி.எம்.உமர் ஃபாரூக் அவர்கள் கருத்தரங்களில் அன்வர் பாலசிங்கன் தலைகுளிந்து போனார்.

அதன்பின் இஸ்லாத்திலும் ஜாதி உள்ளது என்றொரு பிரச்சாரம் புது வேகத்தைப் பெற்றது. அப்போதும் அண்ணன் உமர் ஃபாரூக் அவர்களின் பிரகடனங்கள் அந்தப் பிரச்சாரத்தை வலுவிழக்கச் செய்தது. கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்களின் பேட்டிகளும் அவற்றை முனை மழுங்கிடச் செய்தன.

இப்படி எல்லா எதிர்ப்புகளையும் கடந்து, ஆய்வுலகை எட்டி, பீடுநடை போடுகின்றது இந்த நூர். இதன் ஐந்தாம் பதிப்பை கொண்டு வந்திட உதவி செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

சென்னை-1 — மு.குலாம் முஹமத்
25.06.2014 — “வேர்கள்” காப்பாளர்

Owned and published by M.Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor : M.Gulam Mohamed, Printed by M.Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.